
# அண்ணாவோடு வாழ்ந்த அந்த சிறைவாசம்



டாக்டர் நாவலர்
நெடுஞ்செழியன், எம்.ஏ., டி.லிட்.,

# அண்ணாவோடு வாழ்ந்த
# அந்தச் சிறைவாசம்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., டி. லிட்

பாரி நிலையம்
184. பிராட்வே - சென்னை - 600001

முதற் பதிப்பு, 11-7-1981
உரிமை பதிவு

தயாரிப்பு : தையற்கலை சுந்தரம்

விலை ரூ. 8-00

வெளியீடு
தையற் கலைப் பதிப்பகம்
புரசை—சென்னை—600 007

அச்சிட்டோர் :
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானி ஜான் கான் ரோடு
இராயப்பேட்டை—சென்னை—600 014
தொலைபேசி—82731

**டாக்டர் இரா. நெடுஞ்செழியன் எம் ஏ., டி. லிட்.,**
நிதி அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை—600 009.
நாள் 7-7-1981

வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவரும், விசையொடிந்த உள்ளங்களுக்கெல்லாம் வலிமை ஊட்டியவரும், அரண்மனையில் மட்டுமே உலாவிய அழகு தமிழை ஆலமரத்தடியில் வாழ்கின்ற பாமரமக்களிடத்திலும் பரவும்படி செய்தவரும், பேச்சிலும் எழுத்திலும் சொல்லுக்குச் சொல் சுவை ஏற்றியவரும், பொருளுக்குப் பொருள் ஒளி ஊட்டியவரும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் வழி நின்று பகுத்தறிவு நெறியைப் பரப்பியவரும், தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஈடும் எடுப்புமற்ற ஒரு பெருந்தலைவரும். திராவிட இனத்தின் பாதுகாவலரும், அறிவுத்திறன்-ஆற்றல்திறன்-பண்பாட்டுத்திறன் ஆகியவற்றிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்நதவரும் ஆன பேரறிஞர் அண்ணா அவர்களோடு இருபத்தைந்து ஆண்டுக்காலம் நெருங்கிப் பழகி, அவருடைய அன்பையும, அரவணைப்பையும பெறறவன் நான். அந்த நிலையை எண்ணிடுந்தோறும் எண்ணிடுந்தோறும் இன்பம் பெறுகிறேன்.

என்னைப் போன்ற எண்ணிறந்தவர்களைத் தம்பிமார்களாகப் பெற்றதில் அறிஞர் அண்ணா அவர்கள் பெருமகிழ்வு கொண்டார்கள். அவரை அண்ணனாகப் பெற்றிருந்ததில் நானும், என்னைப் போன்றவர்களும் பெருமிதம் கொண்டிருந்தோம.

அறிஞர் அண்ணா அவர்களுடன் இருப்பதே மகிழ்ச்சி தரும்; அவருடைய அறிவார்ந்த நகைச்சுவை மொழிகளைக்

கேட்பது அதைவிட மிகவான மகிழ்ச்சியைத் தரும். அவரோடு சேர்ந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது அதைவிட மிகவான மகிழ்ச்சியைத் தரும். அவரோடு இணைந்து சீரிய செயல்களில் ஈடுபடுவது அதையும்விட மிகவான மகிழ்ச்சியைத் தரும்.

அறிஞர் அண்ணா அவர்களோடு நெருங்கிப்பழகிய காலத்தில் அவரைப்பற்றி நான் கேட்டறிந்த சில சுவையான செய்திகளையும், நானே நேரில் கண்டறிந்த சில சுவையான செய்திகளையும் "மன்றம்" இதழில் நான் வெளியிட்டு வந்தேன். 19 4ஆம் ஆண்டிற்கும், 1957ஆம் ஆண்டிற்கும் இடையில் 'மன்றம்' இதழில் வெளியிட்ட கட்டுரைகளைத் தொகுத்துத் தையத்கலை ஆசிரியர் நண்பர் கே. பி சுந்தரம் அவர்கள் நூல்வடிவில் கொண்டு வந்துள்ளார். 'முரசொலி' யின் அண்ணா பிறந்தநாள் விழா மலரில் எழுதிய கட்டுரை ஒன்றையும் இந் நூலில் இணைத்துள்ளார். நண்பர் கே. பி. சுந்தரம் அவர்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் ஒவ்வொருவரும் இப்படிப் பலப்பல சுவைதரும் செய்திகளைப் பற்றிக் கண்டும் கேட்டும் அறிந்திருந்திருப்பார்கள். அவையெல்லாம் வெளிவருமாயின் வருங்கால இளைஞர்களுக்கு நல்ல சுவையும், பயனும் கிடைக்கப் பெறும். நானே ஒரு சிலவற்றைத்தான் 'மன்றம்' இதழில் குறிப்பிட்டேன்; அதுவும் 1957 வரையில் அறிந்தவற்றைத் தான் குறிப்பிட்டேன். அறிஞர் அண்ணா அவர்களின் மறைவு வரையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகளைத் தொகுத்தால், அவையெல்லாமும் கூடத் தனிச் சுவையும், பயனும் அளிக்கும்.

இந்த நூல் மற்ற நண்பர்களுக்கெல்லாம் தூண்டுகோலாக அமையும் என்ற என் எண்ணமும், இன்றைய இளைஞர்களுக்கும், வருங்கால இளைஞர்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கும் என்ற என் எண்ணமும் வெற்றிபெறுமேயானால், அதுதான் இந்நூலின் வெற்றியாகும்!

**இரா. நெடுஞ்செழியன்**

# அறிஞர் அண்ணா அவர்களின் புகழ் காக்கும் பெரும் கடமை

டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் 1954 ஆம் ஆண்டு மன்றம் இதழில் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி எழுதி வந்த கட்டுரைகளையும், முரசொலியில் வெளி வந்த ஒருகட்டுரையையும் தொகுத்து இந்நூல் இன்று வெளியிடப்படுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களிடம் நீண்ட காலம் நெருக்கமாக பழகியவர்களுக்கும் அண்ணா அவர்களால் வளர்ந்து சிறப்புமிக்க இடத்தில் அமர்ந்து இருந்தவர்களுக்கும் அமர்ந்து இருப்பவர்களுக்கும் மற்றும் அண்ணா அவர்களிடம் உண்மையான பற்றும் பாசமும் கொண்டுள்ள தம்பிமார்களுக்கும் கீழே குறிப்பிட்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களின் புகழ் காக்கும் பெரும் கடமைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென கனிவுடன் வேண்டுகிறேன்.

'பேரறிஞர் அண்ணா ஆய்வுக் கூடம்' என்று ஒன்று நிறுவப்பெற வேண்டும். சிறப்பாக அவ்வாய்வுக்கூடத்தின் சீரிய முயற்சியால் பின்வரும் ஆக்கப்பணிகள் நடைபெற வேண்டும்.

அண்ணாவின் விரிவான வாழ்க்கை வரலாறு எழுதப் பெற வேண்டும். இந்த வரலாற்றை எவ்வளவு ஆதாரங்களுடனும், எவ்வளவு படங்களுடனும், விளக்கங்களுடனும் எழுத முடியுமோ அவ்வளவு ஆதாரங்களுடனும், அவ்வளவு படங்களுடனும், அவ்வளவு விளக்கங்களுடனும் எழுத வேண்டும். அண்ணா வானொலியில் பேசிய பேச்சுகளுக்கும் பொது மேடைகளில் பேசிய பேச்சுகளுக்கும் கிடைக்கக் கூடிய ஒலிப்பதிவுகளை வரிசைப் படுத்தி தொகுத்துப் படி செய்து பாதுகாக்க வேண்டும்.

அண்ணா இருக்கும் புகைப்படங்கள் அனைத்தையும் தொகுக்க வேண்டும். நாளிதழ்களில் அறிக்கை விட்டு நண்பர்களிடத்தும், நிலையங்களிடத்தும் இருக்கும் புகைப்

படங்கள் பலவற்றையும் தொகுக்க வேண்டும். இத் தொகுப்பைக் கால முறைப்படி வரையறை செய்து இந்திய அரசு 'மகாத்மா காந்தி' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள பெரும்படத் தொகுப்பு ஒன்றை முன் மாதிரியாகக் கொண்டு 'அண்ணா படத் தொகுப்பு' ஒன்று வெளியிட வேண்டும்.

'அண்ணா ஆய்வுக் கூட' த்தில் அவர் படித்த நூல்களும் தாள்களும், அண்ணாவைப் பற்றிப் பிறர் இகழ்ந்தும், புகழ்ந்தும் எழுதியவையும், பேசியவையும் அண்ணா பயன்படுத்திய பொருள்களும் தொகுக்கப்படவேண்டும். 'அண்ணா ஆய்வுக்கூட' த்தில் அண்ணா இருக்கும் திரைப் படங்கள், அண்ணா கதை உரையாடல் எழுதிய திரைப் படங்கள், அவ்வப்போது காட்டப் பெறுவதற்காகத் தொகுக்கப்பட வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'கல்கி' நினைவுச் சொற்பொழிவுகள் நிறுவப் பெற்றுள்ளது போல அண்ணா நினைவுச் சொற்பொழிவுகள் நிறுவப் பெற்று ஆண்டு தோறும் அவர் பற்றியும் அவர் பற்றியன பற்றியும் ஆய்வுரைகள் நிகழ் ஏற்பாடு செய்ய வேண்டும். பல்வேறு தலைப்புகளில் அண்ணாவின் எண்ணங்களைப் பாகுபடுத்தி 'அண்ணா கலைக் களஞ்சியம்' ஒன்று வெளியிடப் பெற வேண்டும்.

'அண்ணா ஆய்வுக் கூட' த்தில் அண்ணா பற்றிய விவரங்களைச் சேர்ப்பதற்கு என்றே ஓர் ஆய்வுக்குழு அமைய வேண்டும். அதன் அறிவுரைகட்கு ஏற்ப மேற்கண்ட திட்டங்களையும் மேலும் தோன்றும் திட்டங்களையும் நிறைவேற்ற ஆய்வாளர்கள் சிலர் தேவையெனப் பெறல் வேண்டும். அவர்கள் தம் மனக் கருதி-தமிழகம் முழுவதும் சுற்றி-நம் கடமைகளைச் செய்து புகழ்பெற வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட சமுதாயத் திற்கும் தமிழகத்திற்கும் செய்த தொண்டினைச் சிறப்பிக்க நான் சமர்ப்பிக்கும் சிறு காணிக்கையாக இந்நூல் அமையும் என கருதுகின்றேன். மன்றம் இதழில் வெளிவந்த இக் கட்டுரைகளை வெளியிட அன்புடன் இசைவு தந்த டாக்டர் நாவலர் அவர்களுக்கு கையற்கலை பதிப்பகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புள்ள,

தையற்கலை சுந்தரம்

11. 7. 1981

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அண்ணாவோடு வாழ்ந்த அந்தச் சிறைவாசம் | 9 |
| 2. | சிபார்சுக்குப் போக — சிபார்சு | 17 |
| 3. | நந்தவனமும் நாயும் | 19 |
| 4. | அண்ணாவும் பத்திரிகைத் தொடர்பும் | 21 |
| 5. | ராயுடன் சில நாட்கள் | 24 |
| 6. | வெற்றிலைப் பாக்கும் மாணவப் பருவமும் | 28 |
| 7. | அண்ணாவும் தொழிற்சங்கமும் | 26 |
| 8. | அண்ணாவும் ஆச்சாரியாரும் | 20 |
| 9. | பச்சையப்பன் தந்த மாணிக்கம் | 32 |
| 10. | அண்ணாவும் கழகமும் | 33 |
| 11. | அழகிரியின் இறுதி நாட்கள் | 35 |
| 12. | தெருக்கூத்து வேடிக்கை | 38 |
| 13. | ஆங்கில வகுப்பில் அண்ணா | 40 |
| 14. | சேதுப்பிள்ளை பட்டபாடு | 42 |
| 15. | கல்லூரியில் அண்ணா | 45 |
| 16. | முதல் நாடக முயற்சி | 47 |
| 17. | அண்ணாவும் மாணவர் இயக்கமும் | 49 |
| 18. | அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்களின் முதல் முயற்சியும் தோல்வியும் | 52 |
| 19. | சந்திரோதயம் நாடகத்தில் அண்ணா | 55 |
| 20. | மறுமுயற்சி — ஆனால் வெற்றி! | 57 |
| 21. | அரண்மனையில் வாழ்ந்த கட்சி ஆலமரத்தடிக்கு வந்தது | 59 |
| 22. | புகையிலை நறுக்கும் கத்திரிக்கோல் | 61 |
| 23. | நாடகத்தில் பாட பேதம் | 63 |
| 24. | சிறையில் பூனை வளர்ப்பு | 65 |
| 25. | பேச முடியாமற்போன ஒரே கூட்டம் | 68 |
| 26. | புரிந்து கொள்ளாத அறிமுகம் | 71 |
| 27. | வெறுங் காவலில் போடக் கடுங் காவலில் புகுந்தார் | 73 |
| 28. | சாமியார் 'ஆசாமி' யார் ஆனார்! | 75 |
| 29. | காவற்கூடத்தில் கடமையுணர்ச்சி | 77 |
| 30. | யாருக்கு ஊசி! | 79 |
| 31. | பரீட்சை சமயத்தில் காய்ச்சல் | 82 |
| 32. | நடிப்புத் திறமையின் நயம் | 85 |

33. "எனது வாரிசு நீதான்!" 87
34. ஒரே மேடையில் பேச போட்டியாளருக்கு அழைப்பு 89
35. இளமைக் குறும்பு கொடுத்த தொல்லை 91
36. போட்டி போடாப் பொறுமைப் பண்பு 93
37. பாடுவதில் தேறவில்லை 95
38. ஐயப்பாட்டிற்கு ஆளான நிலைமை 97
39. எழுதும் ஆற்றல் 99
40. சொற்பொழிவு ஆற்றும் ஆற்றல் 101
41. உரையாடும் ஆற்றல் 104
42. சிறந்த நடிகர் 106
43. அண்ணா ஆச்சாரியார் அறிமுகம் 108
44. எளிய வாழ்க்கை 111
45. புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திய விழா 114
46. அண்ணாவைப் பற்றி அழகிரி 117
47. கறுப்புச் சட்டைப் படை 120
48. 1947 ஆகஸ்டு 15 123
49. தூத்துக்குடி மாநாடும் ஈரோடு மாநாடும் 126
50. வடநாட்டில் — இந்து முசுலிம் போர் 129
51. மனச் சான்றுக்கு மாறாகப் போகாமை 132
52. நண்பருக்காகத் தன்னலம் துறக்கும் தன்மை 135
53. ஆங்கிலப் பேராசிரியரைப் பற்றி 138
54. புகைவண்டி போயிற்று!—பிறகு டிக்கட்டு வந்தது! 140
55. காரியந்தான் பெரிது வீண் வீரியம் அல்ல 143
56. ஆபத்து ஒன்று அகன்றது 146
57. "யாரையடா சொன்னாய் அது!" 149
58. முன்பே விளக்கினார் — நீ புரிந்துகொள்ளவில்லை 152
59. மீசை பலியாயிற்று! 155
60. "குரங்கு நிலையிலேயே இருக்கிறாய்" 158
61. படாடோபத்திற்கு பணியாமை 161
62. வரும் பொருள் உரைக்கும் தன்மை 164
63. அருமையும் எளிமையும் 167
64. அண்ணாவும் இசைப் பெரும் புலவரும் 170
65. அண்ணாதுரை பாதை 173
66. சிற்றூர்களில் "எலக்ஷன்" 174
67. அறிஞர் அண்ணா. 176

## அண்ணாவோடு வாழ்ந்த அந்தச் சிறைவாசம்

1953-ம் ஆண்டு சூலைத் திங்கள் 14-ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் மும்முனைப் போராட்டத்தில் குதித்தது. கழகத்தின் ஒப்பற்ற ஒரு பெரும் தலைவராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்த பேறிஞர் அண்ணா அவர்களின் அறப்போர்க் கட்டளைகளைத் தாங்கிக் கொண்டு கழகத்தின் கட்டிளங்காளையர் ஆயிரமாயிரமாக அணி அணியாக ஆங்காங்கு திரண்டனர். கழகத்தின் முன்னணியினர் ஆங்காங்கு அறப்போர்ப்படைகளுக்குத் தலைமை தாங்கினர். அந்த ஒரு நாளிலே மட்டும் தமிழகம் முழுவதிலும பத்தினையாயிரத்திற்கு மேற்பட்ட கழக வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.

சூலைத் திங்கள் 14-ஆம் நாள் தான் பிரஞ்சுப் புரட்சி வெற்றிகொண்ட நாளாகும்! அந்த நாள்தான் பிரெஞ்சுப் புரட்சிப் படை வெகுண்டெழுநது வீறுகொண்டு பாய்ந்து கொடுஞ்சிறையாக விளங்கிய பாஸ்டிலி சிறையைத் தகர்த்து நொறுக்கிய நாள்! --ஆணவ அரசும், ஆதிக்க அதிகாரிகளும், சர்வாதிகார மன்னனும், யதேச்சாதிகார பிரபுக்களும விரட்டியடிக்கப்பட்ட நாள்!— அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டு 'சமத்துவம —சகோதரத்துவம் — விடுதலை' என்ற முழக்கம் வெற்றிக் களிகொண்ட நாள்! — பிரான்சு நாட்டில வலலரசு வீழந்து நல்லரசு ஏற்படக் காரணமாக விளங்கிய நாள்!

வரலாற்றுச் சிறப்பு பெற்று விளங்கிய அந்த சூலை 14-ஆம் நாளைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் மும் முனைப் போராட்டத்திற்கு உரியதாகத் தேர்ந்தெடுத் தார்கள்.

ஒரே நாளில் மூன்று முனைகளில் போராட்டங்கள் நடத்திக் காட்டப் பட்டன. ஒரு முனை அப்பொழுது முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் அலுவலகத்திற்கு முன்னால் நடைபெற்ற குலக்கல்வி எதிர்ப்பின் சார்பான மறியல் போராட்டம் ஆகும்; மற்றொரு முனை தி.மு. கழகத்தின் உரிமை வேட்கையை 'முட்டாள் தனமானது' என்று இழித்துக்கூறிய பண்டித நேருவுக்குப் பாடம் கற்பிப் பதற்காகவும், கழகத்தின் வலிமையை உணர்த்துவதற் காகவும் மேற்கொள்ளப்பட்ட இரயில் நிறுத்தப் போராட் டம் ஆகும்; மூன்றாவது முனை வடநாட்டான் ஆதிக் கத்தை நிலைநாட்டும் வகையில் வடநாட்டான் பெயரைத் தாங்கி நின்ற — 'டால்மியாபுரம்' — என்ற புகைவண்டி நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்ற உரிய தமிழ்ப் பெயராக மாற்றி அமைக்கும் போராட்டமாகும்.

போராட்டம் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே, போராட்டத்தை தூண்டிவிட்டோம் என்றகுற்றம் சுமத்தப்பட்டு அறிஞர் அண்ணா அவர்களும், நானும், தோழர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், தோழர் சம்பத்து அவர்களும் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட் டோம். நாங்கள் ஐவரும் சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடந்த நேரத்தில்தான் கழக முன்னணியினரும், கழக வீரர்களும் ஊக்கத்தோடும், உள்ளக் கிளர்ச்சியோடும் மூன்று முனைகளிலும் நின்று அறப்போர் புரிந்தார்கள்.

மாநில முதல் நடுவர் நீதிமன்றத்தில் எங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்

பட்டன. நாங்கள் எங்களுடைய நோக்கங்களையும், நடத்தைகளையும் கூறி எதிர்வழக்காடினோம். இரண்டு தினங்களுக்குப்பிறகு எங்கள் வழக்குகள் முடிவுற்று எங்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. எங்களுக்கு மூன்று திங்கள் சிறை வாழ்வு தண்டனையாக அளிக்கப்பட்டது. தண்டனை பெறுவதற்கு முன்பே, அதாவது வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே நாங்கள் ஈட்டுறுதி கொடுத்துவிட்டு வெளியே வர மறுத்துவிட்டு இரண்டு திங்கள்களுக்கு மேல் சிறைவாழ்வைப் பெற்றேன். தண்டனைக்குப் பிறகு மூன்று திங்கள்கள் சிறைவாழ்வைக் கழிக்கவேண்டி நேரிட்டது.

சென்னை மத்திய சிறையில் நானும் அறிஞர் அண்ணா அவர்களும் ஒரே கொட்டடியில் அடைக்கப்பட்டோம். மற்ற நண்பர்கள் தனித்தனிக் கொட்டடிகளில் அடைக்கப் பட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களோடு நான் சிறையில் கழித்த அந்த நாட்கள் என்றென்றும் எனது மனதை விட்டு அகல முடியாத நாட்களாகும்.

அந்த நாட்களிலும் நானும், ஏனைய நண்பர்களும் அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்துபெற்றஅறிவுரைகள்—விளக்கவுரைகள்—தெளிவுரைகள் — கனிவுரைகள் — கருத்துரைகள் — அரசியல், பொருளியல் சமூகவியல் பற்றிய உண்மைகள் மிகப் பலவாகும்.

நாள்தோறும் மாலை 4–30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையில் (அதாவது எங்களைக் கொட்டடிக்குள் அடைக்கும் நேரம் வரையில்) சிறையிலுள்ள பெரிய அரச மரத்தடியின் மேடையில் அமர்ந்து அறிஞர் அண்ணா அவர்களோடு அளவளாவுவோம். நாங்கள் எழுப்புகிற ஐயங்கள், வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தெள்ளத்தெளிவாக நாங்கள் மறுப்புரை கூற முடியாத வகையில் விளக்கங்கள் அளிப்

பார்கள். சில நேரங்களில் ஒரு திங்கள், இரண்டு திங்கள் தண்டனை பெற்றுச் சிறைப்பட்ட கழகத் தோழர்களும் மாலை நேரங்களில் அறிஞர் அண்ணாவிடம் வந்து உரையாடி மகிழ்வார்கள்.

தண்டனை பெற்ற மும்முனைப் போராட்ட வீரர் களெல்லாம் வெளியேறிய பிறகு நாங்கள் ஐவர் மட்டும் இரண்டு திங்கள்களுக்கு மேல் தனியே இருக்கும்படி நேர்ந்தது. சிறையிலுள்ள பிற குற்றக்கைதிகளைக் காணும் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் அவர்களின் தனிப்பட்ட சமூகச் சூழ்நிலைகளை அறிந்துகொள்வதிலும், குற்றம் புரிந்ததற்கான காரணங் களைத் தெரிந்து கொள்வதிலும், இவர்களின் உளப்பாங் கைப் புரிந்துகொள்வதிலும், தனி ஆவல் காட்டி வந்தார்கள்.

மாலை 6-00 மணிக்கு எங்களையெல்லாம் எங்களுக் குரிய கொட்டடிகளில் அடைத்துவிடுவார்கள். அறிஞர் அண்ணாவும் நானும் ஒரேகொட்டடியில் அடைக்கப்பட் டிருந்ததால் இரவு வெகுநேரம் வரையில் அவர்களோடு உரையாடி மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் இரவுமூன்றுமணி வரையில் தூங்க மாட்டார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் தூங்க முயலு வார்கள். என்னால் இரவு பதினோரு மணி அல்லது பன்னி ரண்டு மணிவரையில் தான் தூங்காமல் சமாளிக்க முடியும். பிறகு என்னையுமறியாமலேயே தூங்கிவிடுவேன். அண்ணா வுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதே தூங்கிவிடு வேன். எனக்குத் தூக்கக் கலக்கம் ஏற்பட்டவுடனே கொட்டாவி வந்துவிடும். நான் கொட்டாவி விடத் தொடங்கும போது அண்ணா அவர்கள் 'தூக்கத்திற்கு முதல் மணி அடித்தாகிவிட்டது! "இரண்டாவது மணி அடித்தாகிவிட்டது!" என்று கேலி செய்து கொண்டே இருப் பார்கள். நான் முடிந்தவரையில் சமாளித்துப் பார்த்து

விட்டுப் பிறகு என்னை அறியாமலே தூங்கி விடுவேன்; அறிஞர் அண்ணா அவர்கள் அறைக் கதவின் கம்பிகளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, கம்பிகளுக்கு இடையில் வெளித்தாழ்வாரத்திலிருந்து வரும் மின்விளக்கு வெளிச்சத்தில் ஏதேனும் அவர் விருப்பிய ஒரு நூலைப்படித்துக் கொண்டிருப்பார்கள். இடையிடையே நான் விழித்துக் கொண்டு பார்க்கும்போதும் அவர்கள் படித்துக்கொண்டே இருப்பார்கள். சில இரவு நேரங்களை அண்ணா அவர்கள் கட்டுரைகள் எழுதப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'பிரெஞ்சுப்புரட்சி', 'பிரான்சு நாட்டை ஆட்டிப் படைத்த ரிஷ்லு', 'ஜியார்டனோ புருனோ', 'ரஸ்புடீன்' போன்ற வரலாற்றுக் கட்டுரைகளை அறிஞர் அண்ணா அவர்கள் சிறையில்தான் எழுதினார்கள். பின்னர் அவற்றைத் 'திராவிட நாடு' ஏட்டில் வெளியிட்டார்கள். சில நாட்களில் அண்ணா அவர்கள் அகநானூறு, கலித்தொகை, புறநானூறு, திருக்குறள் போன்ற இலக்கியங்களின் சிறந்த பகுதிகளைப் படிக்கச்சொல்லி விளக்கவுரையும், கருத்துரையும் கேட்பார்கள். நான் அவற்றிலுள்ள, நயங்களை எடுத்துச் சொல்லும் போது நயங்களைப் பெரிதும் வியந்து மகிழ்வதோடு, புலவர்களுக்குத் தோன்றாத சில நயங்களையும் சுட்டிக் காட்டுவார்கள். அண்ணா சுட்டிக்காட்டும் நயங்கள் எண்ணி எண்ணி மகிழத்தக்கவையாக இருக்கும்.

சில நேரங்களில் அண்ணா அவர்கள் தம்முடைய இளமைப்பருவக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள், நீதிக்கட்சியில் சேர்ந்து தொண்டாற்றியபோது ஏற்பட்ட அனுபவம், பெரியாரோடு சேர்ந்து பணியாற்றியபோது நிகழ்ந்த விளைவுகள் போன்றவற்றைக் கதை கதையாகச் சொல்லுவார்கள். அவையெல்லாம் கேட்கக் கேட்க வியப்பூட்டுவனவாகவும், சுவை பயப்பனவாகவும், தெளிவுதருவனவாகவும் இருக்கும்.

சில வேளைகளில் அவர் படிக்க விரும்புகிற ஆங்கில நூல்களை என்னிடத்தில் தந்து சிறைக் கதவு அருகில் உட்கார்ந்து படிக்கச் சொல்லி அவர்கள் படுக்கையில் படுத்தவாறே கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

பெரும்பாலும் இரவு நேரங்களில்தான் அண்ணா அவர்கள் உற்சாகத்தோடும், உள்ளக் கிளர்ச்சியோடும் காணப்படுவார்கள். இரவு நேரத்தில் அதிகம் சாப்பிடமாட்டார்கள். நான் டீயாவது காப்பியாவது போட்டுத் தருவேன். அதைக் குடித்துவிட்டு நீண்டநேரம் விழித்துக் கொண்டிருப்பார்கள். இரவு மூன்று மணிக்கு மேல்தான் தூங்க முயலுவார்கள். பகல் 10 மணி வரையில் தூங்குவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுக்குவேண்டிய எல்லா வசதி வாய்ப்புகளையும், டணிகளையும் முறைப்படி ஒழுங்காகச் செய்வதில் நான் கண்ணும் கருத்துமாக இருப்பேன். சிறையில் தரும் உணவுகளையும், காணவரும் நண்பர்கள் தரும் பழங்கள், ரொட்டி போன்றவைகளையும் வாங்கிப் பக்குவப்படுத்தி வைத்து அண்ணா விரும்பும் நேரத்தில் விரும்பும் அளவுக்கு விருப்பமானவைகளை வழங்குவதில் என்னைநானே பழக்கப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தேன்

பகல்நேரங்களில் தோழர் என். வி. என். அவர்களைக் கிண்டல் செய்வதிலும், வேடிக்கைப் பேச்சுப் பேசுவதிலும் பொழுதைக் கழிப்பார்கள் தோழர் என்.வி.என். அவர்கள் முகச்சவரம் செய்துகொண்டிருந்த நேரத்தில் அவரது மீசையைச் சரிசெய்வதாகக் கூறிக் கத்தரிக்கோலை வாங்கி அவரது அரை மீசையை அடியோடு எடுத்துவிட்டார். தோழர் என்.வி.என். அப்படியே பதறிப்போய் விட்டார். அரை மீசைபோய் விட்டதே என்று மிகவும் கவலைப்பட்டு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அண்ணாவும் நாங்களும் அவரைக் கேலி செய்து விழுந்து விழுந்து சிரித்து

மகிழ்ந்தோம். தோழர் என்.வி. என் அவர்கள் வேறு வழி யில்லாமல் மற்றொரு பாதி மீசையையும் எடுத்துவிட்டார். இப்படிச் சிறு விளையாட்டுக்கள் புரிந்து மகிழ்வதிலே அண்ணாவுக்குத் தனி விருப்பம் உண்டு.

சிறைச்சாலையில் எங்களுக்குக் குறிப்பிட்ட சில நாள் இதழ்களை மட்டும் அன்றாடம் தருவார்கள். அவற்றில் எங்களுக்குத் தெரியக்கூடாத செய்திகளும், கழகச் செய்தி களும் கறுப்புமையால் அடிக்கப்பட்டிருக்கும். கிடைக்கும் செய்திகள் முழுவதையும் அண்ணா அவர்கள் ஒன்று விடாமல் படித்து முடித்து விடுவார்கள்.

சிறைச்சாலையில் எவ்வளவு வசதிக் குறைவு இருந் தாலும் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்கிற உள்ளத்தோடுதான் ஒவ்வொருவரும் சிறைவாழ்வை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அறி வுறுத்துவார். சிறைப்பட்ட கழகத்தோழர்கள் ஒவ்வொரு வரும் சிறை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்று எல்லோர்க்கும் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். சிறையில் வசதிகள் கேட்பதையோ அல்லது வசதிகளைக் கோரிப் போராடுவதையோ அண்ணா அவர்கள் அறவே விரும்புவதில்லை. ஒரு நாள் 'சி' வகுப்பிலே இருந்த கழகத் தோழர்கள் ஆரம்பத்தில் சிறுநீர்ப் பானையை அறையி லிருந்து வெளியேற்ற மறுத்துவிட்டனர். 'சி' வகுப்புக் கைதிகள் சிறுநீர்ப் பானைகளை அவரவரேதான் அகற்ற வேண்டும் என்பது சிறையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கமாகும். சிறையதிகாரிகள் எவ்வளவோ சொல்லியும் கழகத் தோழர்கள் சிறுநீர்ப் பானைகளை அறையைவிட்டு விடியற்காலையில் அகற்ற மறுத்துவிட்டனர். பகல் 10 மணி வரையில் அதிகாரிகளுக்கும் கழகத்தோழர்களுக்குமிடையே சச்சரவு நடந்து கொண்டிருந்தது. பிறகு சிறை அதிகாரி

ஒருவர் இந்த நிலைமையை அண்ணாவிடம் தெரிவித்து, அண்ணாவின் உதவியை நாடினார். அண்ணா அவர்கள் என்னை அனுப்பிக் கழகத் தோழர்களை சிறை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி அறிவுரை கூறிவிட்டு வரும்படி சொன்னார்கள். நான் போய் அண்ணாவின் கருத்தைக் கூறினேன். அவர்கள் கேட்கவில்லை. நிலைமையை அண்ணாவிடம் வந்து கூறினேன். அண்ணா அவர்கள் உடனே தாம் வந்து எல்லாச் சிறுநீர்ப்பானைகளையும் வெளியே அகற்றுவதாகவும், கழகத்தோழர்கள் அனைவரும் ஒதுங்கி உட்கார்ந்து கொள்ளட்டும் என்று சொல்லச் சொல்லி என்னை மீண்டும் அனுப்பினார். நான் அண்ணா அவர்கள் கூறியதை அப்படியே வெளியிட்டேன். கழகத் தோழர்கள் உடனே தங்கள் செயலுக்காக வருந்திக் கடமையை ஆற்றினர். பின்னர் அண்ணாவிடம் வந்து கண்ணீர் சிந்திய வண்ணம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டனர்.

சிறையதிகாரிகளும், சிறைக்காவலர்களும் அறிஞர் அண்ணா அவர்களின் மீது தனிஅன்பும், தனிமதிப்பும் வைத்திருந்தனர். கைதி செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்குறச் செய்வதில் அண்ணா அவர்கள் ஒருபோதும் தயங்கியதில்லை. அறிஞர் அண்ணா அவர்களோடு நாங்கள் வாழ்ந்த சிறை வாழ்வு எங்களுக்கெல்லாம சிறந்த பண்பினையும் பயனையும் வளர்க்கும் பணிகளுக்கு ஊக்கம் தருவதாக அமைந்திருந்தது. எவ்வளவோ நிகழ்ச்சிகளைச் சிறை வாழ்வைப் பொறுத்து அடுக்கடுக்காய்ச் சொல்லலாம் என்றாலும ஏடு இடந்தராது என்று அஞ்சி அவற்றைச் சொல்லாமல் விடுகிறேன். அன்புக்கும், அறிவுக்கும், ஆற்றலுக்கும், பண்புக்கும் எடுத்துக்காட்டாகவிளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும்புகழ் என்றென்றும வாழ்க! அவரது புகழொளி நடக்செல்லாம் வழி காட்டுவதாக!

முரசொலி, அறிஞர் அண்ணா மலர், 1972.

## சிபார்சுக்குப் போக-சிபார்சு

அறிஞர் அண்ணா அவர்கள் படித்து முடித்தவுடன் அவரை அரசாங்க வேலையில் எதிலேனும் அமர்த்த வேண்டும் என்பது அவர் வீட்டாரின் எண்ணம். அண்ணாவின் சிற்றன்னை தொத்தா அவர்கள் அண்ணா வைப் பார்த்து அடிக்கடி அவரை போய்ப் பார், இவரைப் போய்ப் பார் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார்களாம்

அரசாங்க வேலையில் அமராது பொதுப் பணியிலேயே ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது அண்ணாவின் எண்ணம். அவ்வப்போது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துக்கொண்டே வருவது அவரது வழக்கமா யிருந்து வந்தது.

ஒரு தடவை காஞ்சிபுரத்திலுள்ள முக்கியமான ஒருவரிடம் ஒரு சிபார்சுக் கடிதம் பெற்று, சென்னை உயர் நீதி மன்றத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அதிகாரி ஒருவரைப் போய்ப் பார்க்கும்படி அண்ணா அவர்கள் அனுப்பப்பட்டாராம். அந்த அதிகாரிக்குத் தம்மை அறிமுகப்படுத்தி வைப்பதற்காக ஒருவரைக் கூட அழைத்து கொண்டு அண்ணா அவர்கள் அவரிடம் சென்றார்களாம்.

“இவர்தான் சி. என். அண்ணாத்துரை, உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்” என்று அண்ணாவுடன் வந்தவர் அந்த அதிகாரியிடம் அண்ணாவை அறிமுகப்படுத்தி வைத் தாராம். அவர் உடனே “உங்களைக் காணவேண்டும் என்று

நீண்ட நாட்களாக விரும்பியிருந்தேன். நல்ல வேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள். அண்ணாத்துரை! உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும் என்று விரும்பினேன். நான் டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆவதற்கு எல்லாவித தகுதியுடைய வனாக இருந்தும், பல வருடங்களாக என்னைத் தேர்ந் தெடுக்காமல், என்னைப் புறக்கணித்து, வேறு யார் யாரை யோ தேர்ந்தெடுக்கிறார்கள். நீங்கள் ஏ. இராமசாமி முதலியாருக்கு மிகவும் வேண்டியவர்களாமே! நீங்கள் எப்படியேனும் அவரிடம் சிபார்சு செய்து, என்னை டிஸ்டி ரிக்ட் முன்சீப வேலைக்குத் தேர்ந்தெடுக்கும்படி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாராம்.

அண்ணாவிற்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை யாம். கோட்டுப் பைக்குள் இருந்த சிபாரிசுக் கடிதத்தை அப்படியே கையால் கசக்கிக்கொண்டு, ''என்னால் முடிந்த வரையில் பார்க்கிறேன் தங்களைச் சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அண்ணா அவர்கள் வந்துவிட்டார்களாம்.

மன்றம், நாள்: 1. 1. 54.

## கண்ணகி வழக்கு

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் வழக்கறிஞர்கள் தமிழில் வாதாடுவதை நாம் பார்க்கமுடியும். தமிழில் தானே வாதாடினாள் கண்ணகி. அவள் கூறிய வாதங்களை ஆங்கில மொழியால் அல்ல—வேறு எந்த மொழியாலும் அளிக்க முடியாது. அரசர்கள் ஆணைகளைத் தமிழில்தானே செய்தார்கள்; நாம் புதிதாக எதை யும் செய்யவேண்டியது இல்லை. இழந்ததைப் பெற்றால் போதும்.

அறிஞர் அண்ணா

# நந்தவனமும் நாயும்

1935-ல் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில், பெத்து நாயக்கன் பேட்டையில், அறிஞர் அண்ணாவை எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரருக்கு ஆதரவாகப் பலப்பல சொற்பொழிவாளர்கள் வந்தார்களாம். அவர்களில் ஒருவர் திரு. வி. கல்யாணசுந்தரனார் ஆவாராம்.

தேர்தல் கூட்டமொன்றில் திரு. வி. க. அவர்கள் சொற்பொழிவாற்றும்போது, "நந்தவனத்தில் நாயொன்று செத்துக்கிடந்தால், மக்கள் நாயை அகற்றுவாரோ அல்லது நந்தவனத்தை அழிப்பாரோ! நந்தவனத்தை அழிக்கார்! ஒருக்காலும் அழிக்கார்! நாயையே அகற்றுவர்! அதுபோல காங்கிரஸில் தீயவர் சிலர் இருந்தால், தீயவரை அகற்றுவது நன்றா? அல்லது அதற்காகக் காங்கிரஸையே அழிப்பது நன்றா? கூர்ந்து பாரமின்! தீயவரை அகற்றுவதன்றோ நல்லாரின் கடமை! நந்தவனத்தைத் தூய்மைப் படுத்திக் காப்பாற்றுவது போல், காங்கிரஸையும் காக்க வேண்டும் என்பேன்" என்று கூறினாராம்.

அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, "திரு வி. கல்யாண சுந்தரனார் பேசும் போது நந்தவனத்தில் நாய் செத்துக் கிடந்தால் நாயை அகற்றுவதா? அல்லது நந்தவனத்தை அழிப்பதா? என்று கேட்கிறார். நல்லவர்கள் சுகம்பெறவும், நலிவடைந்தோர் குணம் பெறவுமே நந்தவனம் அமைந்திருக்கிறது.

நல்ல மனிதர்கள் நுழையவேண்டிய நந்தவனத்தில் நாய் நுழையலாமா? நாய் நுழைந்தால் பின் அது நந்தவன மாகுமா? நலிந்தவர்க்கும் நலம் பயக்கவேண்டியநந்தவனம், நாயைச் சாகடிக்குமா? நாயும் சாகிறதென்றால், நந்த வனத்தில் மணம் வீசவில்லை விஷக்காற்று வீசுகிறது என்று தானே பொருள்படும். நாயையும் சாகடிக்கும் விஷக்காற்று வீசும் நந்தவனம் ஊரின் நடுவே இருக்கலாமா? அதனை அழித்துப் புதிதாக ஒன்றைத் தோற்றுவிப்பது தானே நல்லவர் செய்யும் கடமையாக இருக்க முடியும்'' என்று பதிலிறுப்பாராம்.

காங்கிரஸ்காரர்கள் வழக்கம்போல் அதற்குச் சமா தானம் கூற முன்வர முடியாமல், வேறு முறைகளில் திருப்பு வார்களாம்.

மன்றம், நாள்: 1. 2. 54.

## பாடுபட்டோர் பணம்

முழுவயிறு காணாதோர், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர்—ஆகிய இவரெல்லாம் தருகின்ற வரிப்பணமே, கோட்டை யாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுகளாய், அமுல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

அறிஞர் அண்ணா

## அண்ணாவும் பத்திரிகைத் தொடர்பும்

கல்லூரியில் படிக்கும் போதே அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பத்திரிகைகளில் கதைகள் எழுத வேண்டும் எனபதில் ஊக்கமும், ஆவலும் மிகுதியும் உண்டு. அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கையில், "ஆனந்த விகடன்", "ஆனந்தபோதினி" ஆகிய பத்திரிகைகளில் சில கதைகள் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார்.

1935-ல் அறிஞர் அண்ணா காலஞ்சென்ற தோழர் பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து, அவருக்குத் துணையாக நின்று, தொழிற்சங்க நடவடிக்கைகளில ஈடுபட்டிருந்தார். அப்பொழுது "பாலபாரதி" என்ற வாரப் பத்திரிகைக்கு அண்ணா அவர்கள் ஆசிரியராக இருந்து, தொழிலாளர் நலம பேணிக் கட்டுரைகள் எழுதி வந்தார். அந்தப் பத்திரிகை சில திங்கள்கள் நடைபெற்றுப் பிறகு நின்று விட்டது.

பிறகு 1936-ல் அப்பொழுது செங்குந்தமித்திரன் அச்சகத்தின் நிர்வாகியாக இருந்த காஞ்சி மணிமொழியார் அவர்களோடு கூட்டாகச் சேர்ந்து "நவயுகம்" என்ற சிறந்த அறிவு விளக்க வாரப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். பொருளாதார நெருக்கடியின் காரணமாகச் சில திங்கள்களுக்குப் பிறகு அது வெளிவர வில்லை.

பின்னர் இந்தி எதிர்ப்புக் காலத்தில் 1938-ம் ஆண்டு வாக்கில் "விடுதலை" நிலையத்தில் ஆசிரியர் பொறுப் பேற்று அதில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் அரும் பணியாற்றினார். அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையைத் தமிழகத்திலுள்ள அனைவரும் அறிந்து கொள்ள அப்பொழுதுதான் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது.

"விடுதலையை" விட்டு நீங்கிய பிறகு 1942-ம் ஆண்டில், காஞ்சிபுரத்திலிருந்து, சொந்தப் பொறுப்பில் "திராவிடநாடு" வார இதழைக் கொண்டு வந்தார். "திராவிடநாடு" மாணவர்களையும், தமிழறிந்தவர்களை யும் தமிழார்வங் கொண்டோரையும் பெரும் வகையில் இயக்கத்தில் கொண்டு வந்து சேர்த்ததோடு, நீதிக் கட்சி யின் சிமான்கள், புராணப் பண்டிதர்கள், கதா காலட்சேபக் காரர்கள், பணககாரர்கள், அரசியல் சூதாடிகள் ஆகியோரை விரட்டி விரட்டியடிக்கவும் ஆரம்பித்தன. அது ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுற்றுச் சிறப்புற்றோங்கி நடந்தேறி வருவதாயிற்று.

1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியபோது அதற்குப் பக்கத்துணையாக இருக்க வேண்டித் தோழர் டி. எம். பி. அவர்கள்முயறசியில் அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு "மாலைமணி" நாள் கருத்திதழ் வெளிவந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஊட்டம் பெறுவதற்கு அது பேருதவியாக நின்று நிலவியது. பொருளாதாரத் தட்டுப்பாட்டால் ஓராண்டு காலத்திற் குள் அது நிற்கும்படி ஏற்பட்டுவிட்டது.

கழகத்தின் முழுப் பொறுப்பிலே நாளிதழ் ஒன்று கொண்டுவர வேண்டும் என்ற விடாமுயற்சியின் விளைவாக 1953 ஜூன் 15-ம் நாளிலிருந்து "நம் நாடு" அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகிறது. "நம் நாடு" சிறந்த முழுத்திறம் படைத்த

நாளிதழாக வெளிவரவேண்டும் என்றஉறுதிப்பாட்டோடு அதற்கான நடவடிக்கைகளில் முயற்சி செலுத்தி வருகிறார்' ஓர் ஆங்கில வார இதழைத் துவக்குவதற்கான முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்.

அறிஞர் அண்ணாவின் எழுத்து, பத்திரிகை யுலகிலே இற்றை நாளில் நல்லதொரு புரட்சியை உண்டாக்கி விட்டது; மாணவர் உலகை அடியோடு மாற்றிவிட்டது என்றால் மிகையாகாது.

மன்றம், நாள் : 1-3-54

## புளியம் பழக் கதை போய்விட்டது

தமிழ் இலக்கியங்களிலே, 'வெளவால் மனப் பான்மை' என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார். மாமரத்திலே தலைகீழாகத் தொங்கிக் கொண் டிருக்கும் வெளவால், புளியம் பழத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்குமாம், அதுபோல அது வரை நாம மாமரத்தில் தொங்கிக் கொண்டு புளியம் பழத்தை நினைத்துக் கொண்டிருந்தோம இப்பொழுதுதான் 'நாம் தொங்கிக் கொண் டிருப்பது மாமரம்' என்பதை உணர்ந்து மாம் பழத்தை நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்! வெளவால் மனப்பான்மையிலிருந்து விலகி, கிளி மனப்பான்மைக்கு வந்திருக்கிறோம்; 'எதையும் சொந்திப் பார்த்து சுவையை அறிவோம்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்' முழுச்சுவையையும் உணரும் மனப்பான்மை நம்மிடம வளர்ந்து வருகிறது!

அறிஞர் அண்ணா

## ராயுடன் சில நாட்கள்

அரசியல் பேரறிஞர் எம். என். ராய் அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேற்றையும், அவருடன் சில நாட்கள் உடன் உறையும் வாய்ப்பினையும் அறிஞர் அண்ணா அவர்கள் பெற்றிருந்திருக்கிறார்கள்.

அறிஞர்ராயின் அழைப்பின் பேரில், பெரியார் ராமசாமியோடு அறிஞர் அண்ணா அவர்கள், வடநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டுச் சில முக்கியமான நகரங்களில் சொற்பொழிவாற்றினார்கள். அப்பொழுது டேராடூனில் அறிஞர் ராயின் விருந்தினராக இருக்கும் வாய்ப்பு அறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்டது. எம். என். ராயும் அவரது துணைவியார் எலென் ராயும் மகிழ்ச்சியோடு வரவேற்று, அறிஞர் அண்ணாவோடும் பெரியாரோடும் பேசி மகிழ்ந்தார்களாம். அண்ணாவுக்கு அடிக்கடி டீ சாப்பிடுவதில் மிக்க விருப்பம் என்பதைத் தெரிந்துகொண்டார் எலென். எம். என். ராய் சொல்லுவதைக் குறிப்பதும், மடல்களுக்கு விடையிறுப்பதும், டைப் அடிப்பதும் ஆன செயல்களை ராய்க்கு உதவியாக எலென்ராய் அவர்கள் செய்வார்களாம். சமையல் செய்யும்போது இருவரும் சேர்ந்தே செயவார்களாம். ராய் அவர்களின் எளிய வாழ்வும், சலிப்படையாமல் பேசும் பண்பும், ஆழ்ந்த அறிவும், அன்புச் சொல்லும் அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டு விட்டனவாம்.

ஏம். என். ராய் அவர்கள் கோவைக் கூட்டத்தில் பேசும் போது, கூட்டத்தில் எதிர்ப்புக் கூச்சலும், கலகமும் ஏற்பட, அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து பேசிக் கூச்சலையும், கலகத்தையும் அடக்கியதோடு, ராய் அவர்கள் தொடர்ந்து பேசுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்களாம்.

தம்முடைய கருத்துப் பரவுதலுக்கேற்ற பக்குவம் தென்னாட்டில் இருப்பதால், தம்முடைய பிற்காலத்தைத் தென்னாட்டிலேயே கழிக்க விரும்புவதாகக்கூட ஒரு முறை அண்ணாவிடம் பேசிக் கொண்டிருக்கும் போது ராய் அவர்கள் குறிப்பிட்டாராம்.

மன்றம், நாள் : 15-3-54

## மோகனப் புன்னகை

ஆனை அந்தப் புன்சிரிப்பு என்ன செய்துவிடுது என்கிறீங்க. அவ, கல்யாணியில் ஆரம்பித்துக் காம்போதியில் போய்த்தான் முடிக்கட்டுமே, பெரிய வித்வான்கூட, அதைக் குற்றம்னு சொல்ல மாட்டான். அவனேகூட, இராகம் தவறி விட்டதுன்னு சொல்லட்டும், அந்த மகாவித்வான், அடடா! இராகமாவது தவறுவதாவது! நீங்க பாடினது அபூர்வமான முறை அல்லவா! மற்றதுகள், ஏற்கெனவே பாடாந்திரமான இராகங்களைப் பாடுகிறதுகள். ஒரு புது இராகமே அல்லவா நீங்க உற்பத்தி செய்துவிட்டீர்கள் என்று புகழ்வான்; எல்லாம் அந்த மோகனப் புன்னகைக்குத் தான்.

அறிஞர் அண்ணா

—2—

## வெற்றிலைப்பாக்கும் மாணவப் பருவமும்

அறிஞர் அண்ணா அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், இடைநிலை வகுப்பில் பயின்று கொண்டு இருக்கும்போது, இப்பொழுது பச்சையப்பன் கல்லூரித் தலைவராக இருக்கும் பேராசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார்.

அண்ணா அவர்களின் வகுப்பிற்கு ஷேக்ஸ்பியர் பாடத்தைக் கிருஷ்ணமூர்த்தி அய்யர்தான் கற்பித்து வந்தாராம். இடைநிலை வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போதோ, வெற்றிலைப்பாக்கு ஓயாமல் போடுவது அண்ணாவின் பழக்கம். ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி அய்யர் வகுப்பு எடுத்துக்கொண்டிருக்கும்போது, அண்ணா அவர்கள் வெற்றிலைப்பாக்குப் போட்டு மென்றுகொண்டிருந்தாராம். அண்ணா அவர்கள் ஏதோ மென்றுகொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட பேராசிரியர், "வாயில் என்ன மென்று கொண்டிருக்கிறாய்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாராம்.

அதற்கு அண்ணா அவர்கள் "வெற்றிலைப்பாக்கு"! என்று தமிழில் பதில் கூறினாராம்.

"வெளியில் போய் அதைத் துப்பிவிட்டு வா" என்றாராம் ஆசிரியர்.

"துப்பமாட்டேன்" என்றாராம் அண்ணா.

"ஏன் துப்பமாட்டாய்?"

"இனிமேல் வேண்டுமானால் போடவில்லை. இப்பொழுது துப்பமாட்டேன். ஏனென்றால், இது காசு கொடுத்து வாங்கியது."

"நீ இப்பொழுது போய்த் துப்பிவிட்டு வராவிட்டால் உன்னை மூன்று நாட்களுக்கு என் வகுப்பில் நுழையக் கூடாத தடை விதிப்பேன்" என்றாராம் பேராசிரியர்.

"வெளியே வேண்டுமானாலும் போய்விடுகிறேன். ஆனால் வாயில்போட்டிருப்பதை மட்டும் துப்பமாட்டேன்" என்று கூறினாராம் அண்ணா.

"அப்படியானால் வெளியே போய்விடு. மூன்று நாளைக்கு வகுப்பில் நுழையக்கூடாது" என்று கட்டளையிட்டாராம் பேராசிரியர்.

அண்ணா அவர்கள் எழுந்து விறுவிறு என்று வெளியே வந்துவிட்டாராம்.

அதற்குப்பிறகு அண்ணா அவர்கள், வகுப்பில் வெற்றிலைப் பாக்கு போடுவதில்லையாம். அந்த அளவுக்கு அடங்கி நடக்க இசைந்தவர், அன்று துப்பமறுத்ததற்குக் காரணம், போட்டுவிட்டதைத் துப்புவதில் யாருக்கும் பயனில்லை என்பதினாலேயேயாகும் என்று கூறினாராம்.

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்க அண்ணா அவர்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழிலேயே பதிலிறுத்தாராம், வேண்டுமென்று!

மன்றம் 1-4-54

## வாழ்க தமிழ்

வாழ்க தமிழர்கள் வளமெலாம் பெற்று!
வாழ்க தமிழர்கள் வையகம் வாழ்ந்திட!
வாழ்க தமிழ் அறம் தாரணி தழைத்திட!
வாழ்க தமிழ் மொழி இனிமை பொங்கிட!

அறிஞர் அண்ணா

## அண்ணாவும் தொழிற்சங்கமும்

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் தொழிற் சங்க நடவடிக்கைகளில்தான் முதலில் ஈடுபட்டார். தொழிலாளர்களின் நிலை உயரவேண்டும், அவர்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும், தொழிற்சங்கம் வலுப்பெறவேண்டும் என்பதிலே தணியா ஆர்வங்கொண்டு 1934, 1935, 1936 ஆண்டுகளில் பாடுபட்டார்.

அறிஞர் அண்ணாவைத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முக்கிய காரணமாக இருந்தவர் காலஞ்சென்ற தோழர் பாசுதேவ் ஆவார்கள். அண்ணா அவர்களின் வீட்டார், அண்ணாவை ஏதேனும் ஒரு அரசாங்க வேலையில் அமர்த்தவேண்டும் என்பதிலே ஆர்வங்காட்ட, அண்ணாவோ அரசியல் நடவடிக்கைகளிலேயே ஆர்வங் காட்டிவந்தார். தோழர்கள் பாசுதேவ், ஆல்பர்ட் ஜேசுதாசன் ஆகியவர்களோடு சேர்ந்து தொழிற்சங்க பணி புரிந்து வந்தார். தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலமாக, அந்த நாட்களில், காங்கிரசிலே இருந்த தோழர் என். வி. நடராசனுக்கும் அண்ணாவுக்கும் தொடர்பு உண்டு; ஆனால் அரசியலில் இருவரும் எதிர் எதிர் கட்சியினர்.

தோழர் ஜம்னாதாஸ் மேத்தா தலைமையில், லக்ஷ்மண புரியில் நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் தோழர் ஆல்பர்ட்

ஜேசுதாசன் போன்றவர்களோடு, பிரதிநிதியாகச் சென்றிருந்தாராம். சென்னைத் தலைவர்கள், மாநாட்டில் அண்ணாவுக்கு உரிய இடம் அளிக்காமல், தங்கள் பின்னால் ஓடிவரக்கூடிய 'ஆட்டுக்குட்டி' போல நடத்தினார்களாம். மாநாட்டுத் தலைவர்களிடம் அண்ணாவை அறிமுகம் செய்து வைப்பதையும் அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லையாம். மாநாட்டில் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தின்மீது சிறிது நேரம் பேசவேண்டிய வாய்ப்பு கிடைத்ததாம். மாநாட்டினர் அண்ணா அவர்களின் பேச்சில் ஒன்றித் திளைத்து, மகிழ்ந்து, தணியாப் பற்றுக் கொண்டுவிட்டனராம். பிறகு மாநாடு முடியும் வரையில் தலைவர்கள் அண்ணாவைக் கண்டு பேசவிரும்புவதும், தொண்டர்கள் அண்ணாவின் பின் ஓடுவதும் ஆன காட்சிகள், மற்ற சென்னைத் தலைவர்களை இருந்த இடம் தெரியாமல் மறக்கடித்து விட்டனவாம். மாநாட்டின் விஷயாலோசனைக் குழுக்கூட்டத்தில் அண்ணா அவர்களின் கூற்றுக்கு நல்ல மதிப்பும், செல்வாக்கும் இருந்தனவாம். அந்த மாநாட்டில்தான் அண்ணா அவர்கள் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிற்சங்க காங்கிரசில் ஈடுபட்டிருந்த அறிஞர் அண்ணா அவர்களை நேரடி அரசியல் கட்சியில் ஈடுபடும்படி செய்தவர், தோழர் "சண்டே அப்ஸர்வர்" பி. பாலசுப்பிரமணியம் ஆவார்கள்.

மன்றம் 1-5-54

## அண்ணாவும் ஆச்சாரியாரும்

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய காலத்தில் பொதுவிவாதக் கூட்டங்களில் தாமே சென்று வலுவில் கலந்துகொள்வது அவரது வியப்புக்குரிய பழக்கமாக இருந்தது.

சென்னையில், பொது மண்டபங்களில் விவாதக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும்போதெல்லாம், அறிஞர் அண்ணாவை அம்மண்டபங்களில் பார்த்துக் கொள்ளலாம். அண்ணா அவர்கள் வந்து கூட்டத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற உணர்வு, கூட்டத்தினரிடையே பரபரப்பையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கும். கூட்டத்தின் தலைவர் அன்று எடுத்துக் கொள்ளப்படும் பொருள் குறித்து ஒட்டியோ வெட்டியோ பேசுவோர் கூட்டத்தில் உண்டா என்று கேட்டுவிட்டால் போதும், உடனே அண்ணா அவர்கள் மேடைமீது தாவி, தம் கருத்துக்கு இயைந்த பக்கத்தில் நின்று சொல்லம்புகளை மாற்றார் தடுக்கவும் தயங்கவும் இயலாத வகையில் தொடுப்பார். கூட்டம் பெரும்பாலும் அண்ணாவின் பக்கம் நிற்கும்.

ஒருபொழுது சென்னை ஒய். எம். சி. ஏ. விவாத மன்றத்தில் ''ஆலயப் பிரவேசத்துக்கு ஆகமத்தின் அனுமதி தேவையா?'' என்ற பொருள் பற்றித் தோழர் சி. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் ஒரு விவாதக் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு அண்ணாவும் சென்றிருந்

தார். பொருளை ஒட்டியும் வெட்டியும் சிலர் பேசினர். அண்ணா அவர்கள் பேசும்வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு மேடைமீது பாய்ந்து நின்று, ஆலயப்பிரவேசத்துக்கு ஆகமத்தின் அனுமதி அவசியமில்லை என்பது பற்றிப் பேசத் தொடங்கினார். கடல்மடை திறந்தாற்போல் அண்ணாவின் வாயினின்றும் கருத்துவெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டேயிருந்தது. அண்ணாவின் பேச்சு காரசாரமாக இருப்பதைக் கண்ட ஆச்சாரியார் அடிக்கடி சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றார். அண்ணா அவர்கள் சற்று விலகி நின்றுகொண்டு, "ஆலயப் பிரவேசத்துக்கு ஆகம சாஸ்திரத்தின் அனுமதி உண்டா என்று ஆராயத் தொடங்குகிறார்கள் சிலர். தலைமை வகிக்கும் ஆச்சாரியார் எந்த ஆகம சாஸ்திர விதியை ஆராய்ந்து காந்தியார் மகனுக்குத் தம் மகளை மணம் செய்து கொடுத்தார்?" என்று பேசிக்கொண்டு செல்லும்போது, "சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசாதே!" என்று எச்சரிக்கை செய்தார்.

உடனே அண்ணா அவர்கள், ஆச்சாரியார் பக்கம் திரும்பிப் பார்த்து, நீர் பொதுச் சொத்தாக்கப்பட்டு விட்டீர். உமக்கு என்று சொந்த விஷயம் இருப்பதாக யாரும் ஏற்பதில்லை. உமது ஒவ்வொரு நடவடிக்கையையும் பொதுமக்கள் கவனித்தே தீருவர்" என்று காரசாரமாக விடையிறுத்தார்.

ஆச்சாரியர் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தோழர் டி. செங்கல்வராயனிடம், "பார் எப்படி விஷத்தைக் கக்குகிறான் என்று பார்" என்று சொல்லி ஆயாசப்பட்டுக் கொண்டார்.

அண்ணாவின் சொல்லாற்றலை அன்றுதான் ஆச்சாரியார் முதன் முதல் அறிந்துகொண்டார்.

மன்றம், நாள் 15-5-54

## 'பச்சையப்பன்' தந்த மாணிக்கம்

அறிஞர் அண்ணா அவர்கள், பச்சையப்பன் அறநிலையத்தைச் சார்ந்த கல்விச் சாலையைத் தவிர, பிறிதொரு கல்விச்சாலையில் பயின்றாரில்லை. அறிஞர் அண்ணா காஞ்சியிலுள்ள பச்சையப்பன் ஆரம்பப் பள்ளியால் எடுக்கப் பட்டுக் காஞ்சிப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியால் வளர்க்கப்பட்டுச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியால் சிறப்பிக்கப் பட்டவராவார். "அறிஞர் அண்ணா, நான் தந்த மாணிக்கமே!" என்று சொல்லிக்கொள்ளும் முழு உரிமை 'பச்சையப்பன் கல்விச் சாலைக்கே' உரியதாகும்!

*மன்றம், நாள் 1-6-54*

## இரத்தத்தில் ஊறியது

*ஒற்றுமை என்பது இரத்தத்தில் ஊறியது! சிந்தை அணு—ஒவ்வொன்றிலும் சேர்ந்தே இருப்பது! உள்ளத்தால் உண்மை உண்மையென்று மெய்ப்பித்துக் காட்டக் கூடியது!*

**அறிஞர் அண்ணா**

## அண்ணாவும் கழகமும்

1937-38-39-ம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் விறிட்டெழுந்து, ஆளவை ஆட்சியை அலக்கழித்துக் கொண்டிருக்க, அதற்குள் ஆச்சாரியார் அமைச்சர் குழு உலகப் பெருபோரில் பிரிட்டிஷாருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்துப் பதவியைவிட்டு வெளியேற, அது வெளியேறியவுடன் கட்டாய இந்தியும் ஒழிந்துபோக, தமிழக அரசியலுலகில் தெளிவும் அமைதியும் அற்ற நிலை ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களெல்லாம் நாட்டையும், அரசியலையும் பற்றிக் கவலைப்படாமல், தங்கள் தங்கள் சுயநலப் போக்கைப் பற்றி மட்டுமே கவலைபபட்டுக் கொண்டிருந்த நேரம். அந்த நேரத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் இராமசாமி, அரசியலை வெறுத்துவிட்டுச் சுயமரியாதை இயக்கத்தை வலுவடையச் செய்து, சமுதாயத் துறையில் தீவிரமாக வேலை செய்ய வேண்டும் என்ற நீடு சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். அரசியலையும் பொருளாதாரத்தையும் அறவே ஒதுக்கிவிட்டு, வெறும் சமுதாயக் கொள்கையை மட்டும் மேற்கொள்வதைவிட, அரசியல்-பொருளியல்-சமூகவியல் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு அமைப்பே நாட்டிற்குத் தேவையான நலமெல்லாம் படைக்கும் என்பது அறிஞர் அண்ணாவின் எண்ணமாக இருந்தது. இந்த அடிப்படையில் பணிபுரிவதற்கான சூழ்நிலையை உருவாக்க, அறிஞர் அண்ணா அவர்கள் 1942-ல் காஞ்சிபுரத்தில் 'திராவிடர் கழகம்' என்ற

பெயரில் முதன் முதல் கழகம் ஒன்றை நிறுவினார்கள். அதனையொட்டி ஆங்காங்கு சில கழகங்கள் தோன்றவே, பெரியார் இராமசாமி அவர்களும் அந்த அமைப்பை ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்குச் சூழ்நிலை உருவாகியது.

பிறகு 1944-ல் சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநில மாநாட்டில், அதுவரையில் ஜஸ்டிஸ் கட்சியில் புல்லுருவிகளாக இருந்து வந்த பட்டம்-பதவி-பணக்காரத் திமிர்பிடித்தவர்களை வெளியேற்றும் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய அப்பொழுதே, 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்பதைத் 'திராவிடர்க் கழகம்' என்று மாற்றவேண்டும் என்ற தீர்மானத்தையும் கொண்டு வந்து அறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள்.

பிறகு நாளடைவில் கருத்து மேலும் வளர, 'திராவிடர்க்குரிய கழகம்' அதாவது 'திராவிடர்க் கழகம்' என்று இனத்தின் அடிப்படையில் பெயர் அமைவதைவிட, 'திராவிடத்துக்குரிய கழகம்' அதாவது 'திராவிடக் கழகம்' என்று நாட்டின் அடிப்படையில் பெயர் அமைவது சாலச் சிறந்தது என்றும் உணர்வு ஏற்பட்டது.

1949-ம் ஆண்டில் 'திராவிட முன்னேற்றக் கழகத்'தை நிறுவ முற்பட்டபோது, 'திராவிடம் என்ற இடத்திற்குரிய முன்னேற்றக் கழகம்' என்னும் பொருள்படும்படியாகத் திட்டவட்டமாக அறிஞர் அண்ணா அவர்கள் பெயரிட்டார்கள்.

அமைப்புக்குக் 'கழகம்' என்ற பெயரை இட்டு அதற்கும் 'திராவிட' என்ற அடைமொழியைக் கொடுத்த பெருமையும், சிறப்பும் அறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

மன்றம், நாள் 15-6-54

# அழகிரியின் இறுதி நாட்கள்

அஞ்சாநெஞ்சன் என்று உச்சரித்தால், உடனே ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி அவர்களின் எடுப்பான தோற்றமும்' எழுச்சியான பேச்சும முன்வந்து நிற்கும். பகுத்தறிவு இயக்கத்துக்குக் கோட்டை எழுப்பிய வீரர்களிலே முக்கிய மானவராகவும் முதன்மையானவராகவும் வைத்துப் போற்றப்படத் தகுந்த பெற்றி வாய்ந்தவர் அவர் என்றால்' அது மிகையாகாது.

மாற்றாரின் வாய்ப்பேச்சோ, வாள் வலிவோ, பண வலிவோ, படைவலிவோ அவரை அவரது வாழ்நாட்களில் வீழ்த்த முடிந்ததில்லை. ஆனால் விஷப்பூச்சிகள் அவரது உடலுக்குள் வஞ்சகமாக நுழைந்து இறுதியில் அவரை வீழ்த்திவிட்டன. க்ஷயரோகக் கிருமிகள் அவரை வாட்டி வதைத்துவிட்டன. வெற்றிப் புன்னகையோடு கவலையற்று நாடெங்கும் உலாவிவந்த அவர், இறுதி நாட்களில் நோய் வாய்ப்பட்டு இரங்கத்தக்க நிலையில் துன்பத்தில் உழன்றார்.

அவர் சென்னை தாம்பரத்திற்கு அடுத்துள்ள சந்தோஷ புரத்தில் உள்ள சானிடோரியத்தில் நோயாற்றிக்கொள்ள வந்தார். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் அழகிரிசாமியின் உடல்நிலையைக் கண்டுவர ஒருநாள் மாலை சென்றார். அழகிரிசாமியின் வீரத்தோற்ற

நினைவோடு சென்ற அண்ணா, விஷக்கிருமிகளுக்கு இரை யான உடலின் தோற்றத்தைக் கண்டு கண்கலங்கினார். அழகிரிசாமி, குற்றுயிரும் குறையுயிருமாக இருக்கும் தன்னை வறுமை மிக விரைவிலே கொண்டு போகும் போலிருக்கிறது என்ற கருத்தை இருமல் இடை இடையே வர சில சில சொற்களால் தெரிவித்தார். அண்ணாவால் நீண்ட நேரம் இருந்து அவரது துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கத் தாள முடியவில்லை. நோய் தீராதமுறை யில் அழகிரிசாமி அன்று இரவே தஞ்சைக்குப் புறப்படு கிறார் என்பதை அறிந்துகொண்ட அண்ணா ஏதேனும் பொருளுதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் விரைந்து வெளியேறினார்கள்.

அண்ணா அவர்கள் முன்பு 'சந்திரோதயம்' நாடகம் நடத்திய விதத்தில் மிச்ச தொகை சுமார் ருபாய் எழுநூறு தோழர் டி. சண்முகம் அவர்களிடத்தில் கொடுத்து வைத் திருந்தார். அதை வாங்கித் தோழர் மதியழகன் அவர் களிடம் கொடுத்தார். தோழர் மதியழகன் அதனை வாங்கிக்கொண்டு விரைந்து சென்று, தாம்பரம் நிலையத் தில் புகைவண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டிருந்த தோழர் அழகிரிசாமியிடம் கொடுத்தார். அந்த ருபாய் அவரது நோயைப் போக்கத் துணையாக இல்லாவிட்டா லும், அழகிரிசாமிக்குச் சிறிது மன ஆறுதல் அளிக்கத் துணையாக இருந்தது.

மேலும் அண்ணா அவர்கள் அப்பொழுது கூட்டம் ஒன்றுக்கு ரூ. 100 தோழர் அழகிரிசாமிக்கு நிதியாக அளித்துவிட்டு இரசீதைக் காட்டினால்தான், கூட்டத் திற்குத் தாம் வர இயலும் என்று நிபந்தனை போட்டார்கள். அந்த வகையில் சில நூறு ருபாய்கள் தோழர் அழகிரிசாமிக்கு இறுதி நாட்களில் உதவி செய்தன.

தோழர் அழகிரிசாமி மறைந்த பிறகு, அவர்து குடும்பம் அல்லற்படக் கூடாது என்று அறிஞர் அண்ணா, என். எஸ். கே., டி. பி. பொன்னுச்சாமி ஆகியோரின் இடைவிடா முயற்சியால், நிதியொன்று சேர்க்கப்பட்டுக் கடனில் மூழ்கியிருந்த சொததுக்கள் மீட்கப்பட்டுக் குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்டன. தோழர் சௌந்திரபாண்டியன் பி. டி. இராசன் ஆகியோரின் உதவியாலும் அழகிரிசாமியின் சொத்துக்கள் சிறிதளவு மீட்கப்பட்டன.

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் இறுதி நாட்களில் நோய் அவரை வாட்டினாலும், மனம் வாடாதவாறு சிறிதளவு ஆறுதல் அளிக்கும் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அது அழகிரிசாமிக்குச் சிறிதளவு மகிழ்ச்சியைத் தந்த து.

மன்றம், நாள் 1-7-54

## தாமரை மூடிக்கொள்வது ஏன்?

ஒரு ஆடவனும் அவன் ஆருயிர்க் காதலியும் சரசமாடுவதை வேறோர் பெண் காண நேரிட்டால், வெட்கித் தலை குனிந்து கண்களை மூடிக்கொள்ள மாட்டாளா? அதேபோலத்தான். சந்திரன் எனும் மணாளன், அல்லிப்பூவாகிய தன் மனையாளுடன் விளையாட ஆரம்பிக்கிறான். சந்திரன் உதித்ததும் அல்லி மலருகிறதல்லவா? காதல் விளையாட்டுத் தானே அது. அல்லியும் சந்திரனும் இப்படிச் சரசமாடுவதைக் கண்டதும் பத்மாவுக்கு வெட்கம்; கண்களை மூடிக்கொள்கிறாள்.

அறிஞர் அண்ணா

## தெருக்கூத்து வேடிக்கை

தெருக்கூத்து வேடிக்கை பார்ப்பதில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு இளம் வயதிலிருந்தே விருப்பம் நிரம்ப உண்டு. தெருக்கூத்தை ஒரு பொழுது போக்காகவும், நகைச்சுவை பருகும் வாய்ப்பாகவும் கொள்ளுவது அவரது பண்பாகும் தெருக்கூத்து நடிகர்களின் உணர்ச்சிகரமான நடிப்புகளில் ஒன்றி நின்று, நடிப்பின் நயத்தைக வியந்து, அகமகிழ்ச்சி கொள்வதிலே அறிஞர் அண்ணா அவர்களுக்கு எப்பொழுதும் ஆவல் உண்டு.

அவரின் பள்ளிப் பருவ காலத்தில் காஞ்சியில் எங்கு தெருக்கூத்து நடந்தாலும், அங்கு முதலில் சென்று உட்கார்ந்து, இறுதிவரையில் இமைகொட்டாமல் பார்த்திருந்துவிட்டு, கூட்டம் கலைந்து எல்லோரும் வீடு திரும்பியதற்குப் பிறகு, கடைசியாக வீடுவந்து சேருவது அவரது வழக்கம். இப்பொழுதும் சுற்றுப்பயணத்தை ஒட்டி வெளியூர் நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, எங்கேயேனும் சாலை ஓரத்தில் தெருக்கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்தால் தாம் ஏறிவரும் நிலவூர்தி (கார்) வண்டியைத் தொலைவில் நிறுத்திவைத்துவிட்டு, யாரும் அறியாவண்ணம், ஒதுக்கமான இடத்தில் நின்றுகொண்டு காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருப்பார். அறிஞர் அண்ணா அவர்கள் தங்களது தெருக்கூத்தைக் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி எப்படியேனும்

தெரிந்து கொண்டுவிடும்போதெல்லாம், தெருக்கூத்து நடிகர்கள் மிக உணர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் நடிக்கத் தொடங்கி விடுவார்கள்.

அண்ணா அவர்கள் ஆரம்பப் பள்ளி மாணவராக இருந்தபோது, அவரோடு ஒத்த அவருடைய நண்பர்களைக் கூட்டிக்கொண்டு, தமது வீட்டுக்கு அடுத்துச் சில வீடுகள் தள்ளி, ஒரு வீட்டின் மாட்டுக் கொட்டிலில் வேடங்கள் புனைந்துகொண்டு நாடகம் ஒன்று நடத்திக் கொண்டிருந்தார்களாம். அச்செய்தியை அறிந்த அண்ணாவின் பாட்டியார் பொங்கி எழும் சினத்தோடு சென்று, நாடகம் ஆடிக்கொண்டிருந்த அண்ணா அவர்களை, வேடத்தோடு பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, வீட்டில் வைத்து அவர்களின் முதுகில் சில அடிகள் சாத்தினார்களாம். அப்பொழுது அண்ணா அவர்களுக்கு நடிப்பதுபற்றி அச்சம் பிறந்தது என்றாலும், நடிப்பதிலே அவர்கள் கொண்டிருந்த ஆர்வம், நாளுக்கு நாள் மேலோங்கி, அந்த அச்சத்தை அடியோடு அகற்றிவிட்டது.

சிறுவயதிலிருந்தே அண்ணா அவர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்த ஆர்வந்தான் நாடகம் எழுதுவதிலும், நாடகம் நடிப்பதிலும் மிகச் சிறந்த பேரறிஞராய் ஆக்கிவிட்டிருக்கிறது.

இயக்கக் கருத்துக்கள் அடங்கிய நாடகங்களைத் தெருக்கூத்து நடிகர்களைக் கொண்டு, ஆங்காங்கு, பரந்த வெளிகளில், எளிய முறையில் நடத்திக்காட்ட வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் நீங்கா விருப்பமாகும். கற்றறிவற்ற பாமர மக்களின் பொது அறிவு வளர அது சிறந்த ஏற்ற கருவியாக விளங்கும் என்பது அண்ணாவின் உறுதியான எண்ணமாகும்.

மன்றம், நாள் 1-8-54

## ஆங்கில வகுப்பில் அண்ணா!

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது ஆங்கிலத்தில் கட்டுரையெழுதுவதிலும், பேசுவதிலும் சிறந்து விளங்கினார்கள். அவர் கல்லூரி முதல் வகுப்பில் படிக்கும்பொழுதே, அவருடைய ஆங்கிலக் கட்டுரைகளை எடுத்து, ஆசிரியர்கள் மற்ற மாணவர்களுக்கு வகுப்பில் படித்துக் காட்டுவார்களாம்.

ஆனால் அவர் இரண்டாவது வகுப்பில் படித்த பொழுது, ஆங்கிலக் கட்டுரை வகுப்பிற்கு வந்த ஆசிரியருக்கு அண்ணா எழுதிய உயர்தர ஆங்கில நடை அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

'அண்ணாதுரை! உன்னுடைய கட்டுரையில், நீண்ட வாக்கியங்கள் பல வருகின்றன. கட்டுரையென்றால், சிறு சிறு வாக்கியங்களாக இருக்கவேண்டும்'' என்று ஆசிரியர் சொன்னார்.

''சரி கவனத்தில் வைத்துக் கொள்ளுகிறேன்'' என்று அண்ணா அந்த வகுப்பில் உட்கார்ந்துவிட்டார்.

அடுத்த ஆங்கிலக் கட்டுரை வகுப்பில், அண்ணா கட்டுரையெழுதி முடித்ததும், ஆசிரியர் அதை வாங்கிப் படித்தார்.

''ஒரு காலத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவன் பெயர் ராபர்ட்.''

இப்படிக் கட்டுரை ஆரம்பித்தது. நான் சொன்னதைப் பையன் அப்படியே கடைப்பிடித்தது அவருக்குச் சற்று மகிழ்ச்சியைத் தந்தது. மேற்கொண்டு கட்டுரையைப் படித்தார்.

"அவன் காலையில் எழுந்தான். வெளியில் வந்தான். சந்தையை நோக்கி நடந்தான். சந்தைக்கு வந்தான். அங்கு ஒரு கடையிருந்தது.

இப்படி வாக்கியங்களெல்லாம் எழுவாய் பயனிலை இவைகளை மட்டும் கொண்டதாய், மிகச் சிறு சிறு வாக்கியங்களாக இருந்தன. வகுப்பில் இருந்த மற்ற மாணவர்கள் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கேலியைப் புரிந்துகொண்டதும், ஆசிரியர் கட்டுரையை வைத்துவிட்டு, 'இப்படி கட்டுரை முழுவதும் சிறு சிறு வாக்கியங்களாகப் போட்டுவிட்டாயே, ஏன்?" என்று அண்ணாவைக் கேட்டார்.

நீங்கள் தானே, நீண்ட வாக்கியங்கள் கூடாது; சிறு சிறு வாக்கியங்களாக இருக்கவேண்டுமென்று சொன்னீர்கள்" என்று அண்ணா பதிலளித்தார்.

"அதற்கு ஒரேயடியாக வெறும் சிறு வாக்கியங்களாகவே கட்டுரை முழுவதும் இருக்க வேண்டாம் ஆங்காங்கு சில நீண்ட வாக்கியங்களும் வரலாம்!" என்று ஆசிரியர் சொன்னார். அதிலிருந்து அண்ணாவின் கட்டுரையை அவர் குறை கூறுவது கிடையாது!

மன்றம், நாள் 15-8-54

## சேதுப்பிள்ளை பட்ட பாடு

கம்பராமாயணம் ஆக்கநெறிக்கு ஆகும் நூலா-ஆகாத நூலா என்பது பற்றிய விவாதங்கள், தமிழ்நாடெங்கணும் தலைதூக்கி நிற்கும் நிலை, 1942-43-44-ம் ஆண்டுகளில் ஏற்பட்டது.

கம்பராமாயணம் பொன்னேபோல் போற்றப்பட்டுப் புவியுள்ள அளவும் காப்பாற்றப்படவேண்டிய நூலாகும் என்னும் கருத்துப்படத் தோழர்கள் ஆர். பி. சேதுப் பிள்ளை, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், ச. சோம சுந்தர பாரதியார், டி. கே. சிதம்பரநாதனார் ஆகியோர் பேசிவந்தனர்.

கம்பராமாயணம் ஆரிய மக்கள் தேவர்களெனவும், ராமன் முதலியோர் கடவுள்களாக வழிபடவேண்டியவர் களெனவும், அவர்களது செயலே சிறந்த செயலெனவும் தமிழர்களை எண்ணச் செய்ததோடல்லாமல், அதற்கு தூபதீப நைவேத்தியங்காட்டி வந்தனை வழிபாடு செய்தால் போகிற கதிக்கு நல்லகதி ஏற்படும் என்று நம்பச் செய்ததால், அதன் நோக்கத்தையும், விளைவையும் கண்டித்துப் பெரியார் ராமசாமியும், அறிஞர் அண்ணாவும் நாடெங்கும் எடுத்துரைத்து வந்தனர்.

கம்பராமாணயத்தைப்பற்றி அறிஞர் அண்ணா அவர் களுக்கு என்ன தெரியும், சிறந்த தமிழ்ப் புலவரோடு

அவ்ரை விவாதத்துக்கு விட்டால், அவர் உறுதியாகத் தோற்றுப் போய்விடுவார். அப்படித் தோற்றுப் போய் விட்டால் கம்பராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சி வீழ்ச்சியுற்றுப் போய்விடும் என்று கருதிக்கொண்டு சென்னைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் கம்பராமாயண விவாதக் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்தனர். கூட்டம் 9-2-1943 செவ்வாயன்று மாலை 4-30 மணிக்குச் சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளையோடு விவாதம் நடத்தும்படி அறிஞர் அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். விவாதக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி இந்து அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் தோழர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தார்.

மண்டபம் முழுவதும் மாணவர்களும், பொதுமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர். தலைவர் கூட்டத்தைத் துவக்கி முதலில் அறிஞர் அண்ணா அவர்களைப் பேசுவதற்கு அழைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் கம்பனின் புலமைத் திறனைத் தாம் மறுக்கவில்லை, கம்பராமாயணத்தின் சொல்லாழம், பொருள் செறிவு, உவமை அழகு, அணி அழகு ஆகியவற்றை தாம் வெறுக்க வில்லை என்றும், ஆனால் கம்பராமாயணத்தின் நோக்கத் தையும், விளைவையும் வன்மையாகத் தாம் எதிர்ப்பதாக வும் கூறி சுமார் 1½ மணிநேரம் பேசினார்கள்.

பிறகு பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுந்து, அறிஞர் அண்ணாவின் ஆணித்தரமான வாதங் களுக்கு நேருக்கு நேர் விடையிறுக்கமாட்டாமல், பத்து நிமிடநேரம் ஏதோ சில பொருத்தமற்றவைகளைக் கூறி, மற்றோர் முறை இவ்விஷயமாக அண்ணா அவர்கள் அழைப்பின், காஞ்சிபுரம் சென்று இது குறித்துப் பேசுவேன்

என்று சொல்லிவிட்டு அமர்ந்துவிட்டார். தலைவர் அவர்கள் முடிவுரையில் விவாதம் மேலான முறையில் இருந்ததற்காக மகிழ்வதாகக் கூறித் தாம் ஏதொன்றும் கூறுவதற்கில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொண்டார்.

அதற்குப் பிறகு காஞ்சிபுரம் வரத் தயாரா என்று "திராவிட நாடு" இதழ்மூலம் கேட்டும், தோழர் சேதுப் பிள்ளை அவர்கள் விட்டால் போதும் என்ற முறையில் வாய்திறவாமல் வாளாயிருந்துவிட்டார். முதல் விவாதத்தில் பட்டபாடு அவருக்குப் போதுமென்றாகிவிட்டது போலும்!

மன்றம், நாள் 1-9-54

# இரத்தத்தின் இரத்தம்

மாணவர்கள் யார்? அவர்கள் நம் இரத்தத்தின் இரத்தம். அவர்கள் நம் குடும்பத்துப் பிள்ளைகள் அவர்கள் நம்எதிர்காலத்தின் உருவங்கள். அவர்கள் ஒன்றை விரும்புகிறார்கள் என்றால் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயக் கடமை என்று கருதுகிறேன்

அறிஞர் அண்ணா

# கல்லூரியில் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது பாடங்களையோ, நோட்சுகளையோ அப்படியே உருப்போட்டு, பரிட்சையில் பதில் எழுதும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. அவர் பாடங்களையும், அத்துடன் மேற்கோள் காட்டும் மற்ற நூல்களையும் விரிவாகப் படித்து, அவற்றின் கருத்துக்களை நன்கு மனதில் கொண்டு விடுவார். பின் அவற்றை வைத்துப் பரிட்சையில் தமது நடையிலேயே எழுதிவிடுவது வழக்கம்.

அண்ணா அவர்கள் கல்லூரி இரண்டாவது வகுப்பில் படிக்கும் பொழுது, ஆங்கில வகுப்பை எடுத்த பேராசிரியர் ஒருவர், பாடஞ் சொல்லிக் கொடுப்பதில் சிறந்தவர் என்று கருதப்பட்டவர். அவர் வகுப்பில் கொடுக்கும் கேள்வி—பதில்களையும், குறிப்புகளையும், மாணவர்கள் உருப் போட்டு வைத்துவிட்டால் போதும், பரிட்சையில் 'பாஸ்' செய்துவிடலாம் என்ற நம்பிக்கையிருந்தது. அண்ணா மட்டும், வகுப்பில் நோட்சுகள் எடுத்துக் கொள்வதில்லை. மற்ற மாணவர்களெல்லாம் தான் சொல்வதை ஒன்று விடாமல் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கும் பொழுது, அண்ணா மாத்திரம் பேசாமல் உட்கார்ந்திருப்பதை பேராசிரியர் பார்த்து விட்டார்.

"அண்ணாதுரை! நீ ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்" என்று ஆசிரியர் கேட்டார்.

"நான் குறிப்பு எடுக்கவில்லை!" என்று அண்ணா பதிலளித்தார்.

"ஏன்?"

"அவற்றை உருப்போட்டு அப்படியே ஒப்பிக்க வேண்டாமென்று நான் நினைத்தேன்."

"கர்வம் பிடித்தவன்! உட்கார்!" என்று ஆசிரியர் சொல்லி உட்காரவைத்தார். அண்ணாவும் நோட்சுகளை எழுதவில்லை.

கடைசியாக பல்கலைக் கழக இண்டர் தேர்வு நடந்து, பரிட்சை முடிவுகள் வெளிவந்ததும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலப் பாடத்தில் முதலாவதாகத் தேறியிருந்தார். அதற்காக அவருக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது. பரிசு வழங்கும் விழாவில், பரிசுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும் அவருடைய ஆங்கில ஆசிரியர் எதிர்ப்பட்டு வாழ்த்தினார்.

நன்றியைத் தெரிவித்துவிட்டு, "சார்! உங்களுடைய நோட்சை நான் உருப்போட்டு ஒப்பித்திருந்தால், பாஸ் செய்திருப்பது நிச்சயம்; ஆனால் இந்தப் பரிசைப் பெற்றிருக்க முடியாது" என்று வேடிக்கையாக, அண்ணா சொன்னார்.

ஆசிரியர் சிரித்தபடி, "நீ செட்டிக்காரன் என்று எனக்குத் தெரியுமே!" என்று சமாளித்துக் கொண்டார்.

மன்றம், நாள் : 15-9-54

## முதல் நாடக முயற்சி

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பொது வாழ்க்கையில் இறங்கிய பிறகும், நாடகத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம், அவரது உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

கற்றறிவில்லார் கையில் சிக்கிப் பிற்போக்குத் தன்மையில் போய்க் கொண்டிருந்த நாடக உலகைக் கற்றறிவாளர் கைக்கு மாற்றி, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் அதனால் பலன் ஏற்படும்படி செய்யவேண்டும் என்பது, அறிஞர் அண்ணாவின் ஆவல், அதற்கான வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு நீண்ட நாட்கள் ஏற்படாமலேயிருந்தன.

காஞ்சீபுரத்தில்தம்சொந்தமுயற்சியில் "திராவிடநாடு" வார இதழ் தொடங்கி நடத்திக்கொண்டு வரும்போது, அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் வேரூன்றி இருந்த கருத்து, செழித்து வளர்ந்து, பூத்துக், காய்த்துக், கனியத் தொடங்கிற்று. அதன் விளைவாக "சந்திரோதயம்" என்னும் நாடகம உயிர்பெற்று எழுந்தது. அதில் அறிஞர் அண்ணாவும், இயக்கத் தோழர்களும், "திராவிட நாடு" அலுவலகத்தில் பணியாற்றி வந்தோரும் பங்கு ஏற்று நடிப்பது என்னும் முயற்சி உருப்பெற்றது. நாடகம் சரியாக இருக்குமா இருக்காதா என்ற ஐயப்பாடும், அதனை முதலில் எங்கு நடத்திக் காட்டுவது என்ற அச்சமும்

அண்ணாவுக்கு ஏற்பட்டன. ஐயப்பாட்டையும், அச்சத்தையும் போக்கிக் கொள்ள, வடஆர்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரத்தில், அந்த நாடகத்தை நடத்திப் பார்ப்பது என்னும் முடிவில், 1943—ம் ஆண்டில் முதல் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. நாடகம் யாவரும் போற்றிப் புகழும் வண்ணம் அமைந்ததோடு, அறிஞர் அண்ணா நடிப்பிலும் மிகச் சிறந்து விளங்குபவர் என்னும் உண்மையும் வெளிப்பட்டது. அண்ணா அவர்கள், ஆண்டி, அப்துல்லா, துரைராஜ், தொழிலாளி, மடாதிபதி, ஜமீன்தார் ஆகிய வேடங்களைத் தாங்கி, மிகத் திறம்பட நடித்து மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். பிறகு அந்த நாடகம் தமிழ் நாடெங்கும் நடித்துக் காட்டப் பட்டது.

"சந்திரோதயம்" நாடக உலகில் ஒரு புரட்சியையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கிற்று என்னலாம். "சந்திரோதயம்" நாடகத்தைக் கண்ட பிறகு புதுப்புது சீர்திருத்த நாடகங்கள் தோன்றின; சீர்திருத்த நாடகாசிரியர்களும சீர்திருத்த நடிகர்களும் கிளம்பினர். பெரும்பாலான நாடகக் கம்பெனிகள் புராண நாடகங்களைக் கைவிட்டுச், சீர்திருத்த நாடகங்களையே நடித்துக்காட்ட ஆரம்பித்தன. இதற்கெல்லாம் காரணம் "சந்திரோயம்" என்றால் அது மிகையாகாது.

மன்றம், நாள் : 1-10-54

## அகமும் முகமும்

முகத்தில் புன்னகையும் அகத்தில் நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும், சிந்தனையில் தன்னலம் கருதாத் தன்மையுமிருந்தால் போதுமானது.

அறிஞர் அண்ணா

## அண்ணாவும் மாணவர் இயக்கமும்

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் அரசியல் உலகில் தோற்றங் கொள்வதற்கு முன்பு, தமிழகத்தில். மாணவர் இயக்கம், காங்கிரஸ் கட்சி சார்பினதாகவும், கம்யூனிஸ்ட்டுக் கட்சி சார்பினதாகவுமே இருந்து வந்தது. நீதிக்கட்சியின் கொள்கைகளும், பகுத்தறிவியக்கத்தின் கருத்துக்களும் மாணவரிடையே பரவுவதற்கான வழியையும், வகையையும் வகுத்தவர் அறிஞர் அண்ணா அவர்களே யாவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும், எடுத்துக் கூறும பொருளும், விளககிக்காட்டும தன்மையும் மாணவா உலகைத் தமபால் ஈர்க்கும் தன்மையனவாக இருந்தன. இப்பொழுது அண்ணாவைப் பின்பற்றி பள்ளி தோறும், கல்லூரிகள் தோறும் மாணவர் படைகள் திரண்டவண்ணமிருக்கின்றன. திராவிட மாணவ இயககத்துக்குத் தூண்டுகோலாகவும் அடிப்படையாகவும், எடுத்துக் காட்டாகவும், எழுச்சி தருவனவாசவும் துவக்கத்தில் அமைந்தவை இரண்டு கல்லூரிகள். அவை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் குடந்தைக் கல்லூரியுமாகும்.

1943-ம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில சொற்பொழிவாற்ற வந்திருந்த காலை, அங்குள்ள விருந்தினர் விடுதியில் மூன்று நாட்கள்

தங்கியிருந்தார்கள். அப்பொழுது பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த ஆர்வமிக்க மாணவர்கள் அண்ணா அவர்களைச் சூழ்ந்துகொண்டு, இரவு பகல் ஓயாமல் அடுக்கடுக்காகக் கேள்விமேல் கேள்வியாகப் பொழிந்து கொண்டேயிருந்தார்கள். அண்ணா அவர்கள் அவற்றிற் கெல்லாம் பொறுமையுடன் விளக்கந் தந்தார்கள். நீதிக் கட்சி பணக்காரர்—பட்டம் பதவியாளர்—கொள்கை யற்றோர்—குணக்கேடர்— உலுத்தர்—உல்லாசக்காரர் ஆகியோர் கையில் சிக்குண்டு இருப்பதைச் சுட்டி, அது மக்கள் கைக்கு மாற்றப்பட்டால் மாணவர்களின் ஒத்துழைப்பு இயக்கத்திற்கு நிரம்ப கிடைக்கும் என்ற கருத்தை மாணவர்கள் வலியுறுத்திக் கூறினர். மாணவர் கள் தங்கள் படிப்புமுடிந்ததும் இயக்கப் பணியில், இறங்கித் தமக்கு ஒத்துழைப்புத் தந்தால், நீதிக்கட்சியிலுள்ள வீணர் களை விலக்கிவிட்டு, அதனை மக்கள் கட்சியாக ஆக்கிக் காட்டத் தம்மால் இயலும என்று அண்ணா அவர்கள் கூறி னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அளித்த ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் மிக்க ஆர்வங் கொண்டு பாடுபடத் தொடங்கினார்கள். அதன்விளைவாக முதல் திராவிட மாணவர் மாநாடு 1944-ல் குடந்தையில் நடைபெற்றது.

1944 மே திங்களின் அண்ணா அவர்கள் தலைமையில் ஈரோட்டில் திராவிட மாணவர் பயிற்சிக்கான முதல் மாநாடு நடைபெற்றது. மாநாடு முடிந்தவுடன் மாணவர் கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சென்று சொற்பொழி வாற்றிக் கொள்கை விளக்கம் செய்யத் தலைப்பட்டனர்.

பின்னர் 1944 ஆகஸ்டு திங்களில் சேலத்தில் நடை பெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் கட்சியின் பெயரை 'திராவிடர் கழகம்' என்று மாற்றிய

தோடு, நீதிக்கட்சியிலிருந்த வீணர்களையும் விரட்டியடித்துக் கட்சியை மக்கள் கட்சியாக்கினார்கள். மாணவர்களுக்குத் தாம் அளித்த வாக்குறுதியை அண்ணா அவர்கள் திறம்பட நிறைவேற்றிக் காட்டினார்கள்.

அறிஞர் அண்ணாவின் சுட்டுவிரல் காட்டிய வழியில் செல்ல திராவிட மாணவர் குழாம் நாளுக்குநாள் திரண்டு வரும் காட்சி கண்கூடாகும்!

*மன்றம், நாள் 15-7-54*

## காலமே கேள்விகுறி

பெரிய கல்வி நிபுணர்கள் எல்லாம் கருதுவது இப்போதைய தேர்வு முறைக்கும், மாணவர்களின் அறிவுக்கும் சம்பந்தமிலலை என்பதுதான். இப்படி நான் சொல்லுவதால், மாணவர்களை, தேர்வைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுவதாகப் பொருளல்ல! மாணவர்கள் தரத்தைத் தேர்வுகள்தான் நிருபிக்கும் என்று உலகம ஒத்துக் கொண்டிருக்கும் வரையில, தேர்வில் வெறறியடையப் பாடுபடவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்விகளைக் கேட்கும்பொழுது பயனுள்ளவைகளைத்தான் கேட்க வேண்டும். ஆசிரியர்களும மாணவர்களின் ஐயங்களை நீக்கத் தயங்கக் கூடாது. ஏனென்றால் இப்பொழுது காலமே கேள்விக் குறியாக மாறியுள்ளது! போன தலைமுறையில் இல்லாத சந்தேகங்கள் இத்தலைமுறையில சந்தேகங்களாக எழுந்துள்ளன! அந்த அளவுககு ஏராளமான பிரச்சினைகள் வளர்ந்துள்ளன. 'பாடத்திட்டங்களைத திருத்தி அமைக்க வேண்டும்' என்பதை நான் வரவேற்கிறேன். பகுத்தறிவு தரும் பாடங்களே அமையவேண்டும்.

**அறிஞர் அண்ணா**

## அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்களின் முதல் முயற்சியும் தோல்வியும்

1942, 1943—ம் ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், திராவிட இயக்கக் கருத்துடைய மாணவர்கள் மிகவாசப் புகாதிருந்த நிலை. அப்பொழுது காங்கிரஸ் கருத்துடைய மாணவர்களும், கம்யூனிஸ்டுக் கருத்துடைய மாணவர்களும் பல்வேறு துறை மாணவர் சங்கங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

தோழர்கள் க. இராமையா (அன்பழகன்) இரெ. தண்ட பாணி (இளம்வழுதி) இரா. நாராயணசாமி (நெடுஞ் செழியன்) மற்றும் முப்பது மாணவர்கள் தாம் நீதிக்கட்சி (திராவிட இயக்க)க் கருத்துக்களில் பற்றுகொண்டு' 'திராவிடநாடு' 'குடிஅரசு' இதழ்களை வாங்கிப் படித்துக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர்.

1942-ல் அறிஞர் அண்ணா அவர்களை வரவழைத்துப் பல்கலைக்கழகத்தில் பேச வைக்க வேண்டும் என்று இயக்க மாணவர்கள் ஆர்வங் கொண்டார்கள். அப்பொழுது பல் கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தவர் நீதிக்கட்சிப் பற்றுடையவரான சர் கே. பி. ரெட்டி நாயுடு காரு ஆவார். தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் தோழர் கா. சுப்பிர மணியப்பிள்ளை எம்.ஏ.,எம்.எல் ,இருவருடையஅனுமதியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்பேரில், அறிஞர் அண்ணா

அவர்களை வரவழைப்பதற்கான கடிதப் போக்குவரத்து நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களும் வருகை தர இசைந்தார்கள். பின்னர் சர் கே. வி. ரெட்டியிடம் மாணவர்கள் அனுமதி கேட்கப் போயினர். அறிஞர் அண்ணா அவர்களுக்கு இடம் அளித்தால், பார்ப்பனப் பேராசிரியர்களும் பிறரும், தம்மைக் குற்றஞ்சாட்டி விடுவார்களோ என்று அஞ்சிய சர் கே. வி. ரெட்டி நாயுடு காரு அனுமதிதர மறுத்துவிட்டார். தமிழ்ப் பேராசிரியர் சிபார்சின் பேரிலாவது அனுமதி கிடைக்குமா என்று மாணவர்கள் முயன்றனர். அதுவும் தோல்வியில முடிந்தது. ஏனெனில் அந்தக் காலத்தில்தான் கம்ப ராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சி நாடெங்கும் ஓங்கிநிற்கிறது. பழம் பண்டிதர்களின் கண்டனக் கணைகள் அறிஞர் அண்ணாவின் மீது போகுமிடத்திலெல்லாம் வீசப்படும் நேரம். அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும், பிற பழம் பண்டிதர்களும் அறிஞர் அண்ணாவுக்கு எவ்வகையிலும் அனுமதி அளிக்கக்கூடாது என்று, பேராசிரியர் கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்களிடம் வற்புறுத்திக் கூறிவிட்டனர். பேராசிரியர் கா. சு. பிள்ளைக் அண்ணாவை வரவழைப்பதில் வெறுப்புக் கொள்ளவில்லை என்றாலும், சுற்றுச் சூழ்நிலையின் காரணமாக, அனுமதியளிக்கவோ, உதவியளிக்கவோ மறுத்துவிட்டார்.

குறிப்பிட்ட நாளில் அண்ணா அவர்கள் சிதம்பரம் வந்து சேர்ந்தார்கள். ஆனால் பல்கலைக்கழகத்தில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்களைக் கொண்டு எப்படியேனும் கூட்டம் நடத்திவிட வேண்டும் என்ற ஆர்வத்தால் கிளர்ந்தெழுந்த மாணவர்கள் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்களின் ஒத்துழைப்பின் பேரில், சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்

பள்ளி மண்டபத்தில், பொதுக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தனர். தோழர் க. அன்பழகன் மிக ஊக்கத்தோடு பணியாற்றினார். அண்ணா அவர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள இசைந்தார்கள்.

கூட்டத்திற்குப் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா அவர்கள் ''இளம் உள்ளம்'' என்னும் பொருள் பற்றி அழகியதோர் கருத்துமிக்க சீரிய சொற்பொழிவாற்றினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களின் முதல் முயற்சி தோல்வியுற்றது என்றாலும், ''மீண்டும வருகிறேன்'' என்று அண்ணா அவர்கள் அளித்த ஆறுதல் மொழியின் காரணமாக, மாணவர்களின் உள்ளத்தே மூண்டெழுந்த கனல் அடங்காமல் சுடர்விட்டு எரிந்து கொண்டேயிருந்தது.

மன்றம், நாள்: 15-10-54.

## மாணவர் கடமை

நம் நாட்டில் படித்தவர்களைவிட, பாமர மக்கள், படிக்காத மக்கள் தான் அதிகம் உள்ளனர். உங்களில் பலருடைய பெற்றோர்கள் பள்ளிக் கூடத்துக்கே சென்று இருக்க மாட்டார்கள். அடிப்படிப்பட்ட நிலையில் நீங்கள். இன்றைய மாணவாகள்—உங்களால் பாமர மக்களுக்கு நன்மை கிடைக்க ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும்.

அறிஞர் அண்ணா

## சந்திரோதயம் நாடகத்தில் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்ட பொழுதில், முதலில் சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராகப் பெயர் பெற்றார். பின்புதான், அவர் ஒரு சிறந்த நாடகாசிரியர் என்பதும், அத்துடன் நாடகங்களில் நடித்த பொழுது அவருடைய நடிப்புத் திறமையும் வெளிப்பட்டது. முன்பு புறம்பானதாகக் கருதப்பட்ட நாடகக்கலையில், அரசியல்காரர்களும், படித்தவர்களும் ஈடுபட்டு, அரசியலுக்கு நாடகத் துறையை சிறந்ததொரு பக்கத்துணையாக ஆக்கிய பெருமை அண்ணாவைச் சாரும்.

அறிஞர் அண்ணா முதலில் எழுதி, நடித்த நாடகம் "சந்திரோதயம்" ஆகும். அதில் முக்கிய பாகமான துரைராஜ் வேடத்தை அண்ணா அவர்கள் ஏற்று நடித்தார்கள். மற்றும் அதில் நடித்தோரில் பலர், அண்ணாவுக்குத் தெரிந்த நண்பர்கள், "திராவிட நாடு" அலுவலகத்தில் பணியாற்றியவர்கள். அதற்கு முன் நடித்துப் பழக்கமில்லாதவர்கள் ஆவார்கள். அவர்கள் எல்லோரையும் வைத்து, அண்ணாவின் "சந்திரோதயம்" வெற்றிகரமாக நடந்தேறியதுடன், கட்சிக்கொள்கைகளை நாடக அளவில் பரப்புவதற்கு வழிகாட்டியாக இருந்தது. சந்திரோதயத்தின் வெற்றிக்கு முக்கியக் காரணமாயிருந்தது, அண்ணாவின் எழுத்தும் நடிப்பும்தான்.

1943 இறுதியில் சிதம்பரத்தில் அண்ணாவின் "சந்திரோதயம்" நடைபெற்றது. அண்ணா துரைராஜாக நடித்தார்.

நாடகத்தில் வரும் துரைராஜ், கடைசியில் விஷத்தைக் குடித்து இறக்கும் கட்டம் வந்தது. துரைராஜ் விஷக் கோப்பையைக் கையிலெடுத்து அருந்தப் போனான்.

திடீரென்று "நிறுத்துங்கள்!" என்று கூச்சல் வந்தது. எங்கிருந்து என்று பார்த்தால், நாடக மேடையிலிருந்தல்ல. கீழிருந்து, நாடகத்திற்கு தலைமை வகித்தவர் எழுந்து நின்று அவ்வாறு சொன்னார். ஒருவருக்கும் ஒன்றும் புரிய வில்லை. நாடகம் அப்படியே தடைபட்டது. துரைராஜ் விஷக் கோப்பையைக் கையில் பிடித்தபடி இருந்தார். தலைமை வகிப்பவர் மேடைமீது ஏறினார். "இது கூடாது அண்ணா அவர்கள் விஷங் குடிப்பது கூடாது, அவர் ஏன் செத்துப்போக வேண்டும்? அவர் இஷ்டப்பட்டால், இது போல ஜமீன்தாராக இருக்க முடியாமல், போய்விடாது. அண்ணா விஷங் குடிப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார். மற்றவர்கள் அவரைச் சமாதானப் படுத்தி உட்கார வைத்தார்கள். அந்த அளவு அண்ணாவின் சோகப் பேச்சும் நடிப்பும் அதில் இருந்தது.

மன்றம், நாள்: 15. 11. 54.

## அந்நியர் யார்

நாம் சாப்பிடாத உணவுப் பொருளை 'அந்நியப் பதார்த்தம்' என்று சொல்கிறோம். அதைப் போலவே நமக்குப் புறம்பானவர்களை அந்நியர்கள் என்று சொல்லுகிறோம்.

அறிஞர் அண்ணா

## மறுமுயற்சி-ஆனால் வெற்றி!

1942-ல் சர் கே. வி. ரெட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த காலத்தில், அறிஞர் அண்ணா அவர்களை வரவழைக்க முயற்சி எடுத்து, அந்த முயற்சி தோல்வியுறவே, திராவிட இயக்க மாணவர்கள் வேறொரு வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

சர் கே. வி. ரெட்டி இயற்கை எய்திய பிறகு தோழர் எம். இரெத்தினசாமி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக வந்தார். அப்பொழுது தமிழ்த் துறைப் பேராசிரியராகத் தோழர் கா. சு. பிள்ளை அவர்கள் இருந்தார்கள். தோழர் க. அன்பழகன் தமிழ் இலக்கியக் கழகத்தின் செயலாளராக இருந்தார். திராவிட இயக்க மாணவர்களின் ஒத்துழைப்பின் பேரில் தோழர் க. அன்பழகன் அவர்கள்விடாமுயற்சிசெய்து அறிஞர் அண்ணா அவர்களை வரவழைப்பதற்கான அனுமதியைத் துணை வேந்தரிடம் பெற்றார். அறிஞர் அண்ணா அவர்களின் வருகை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மட்டு மல்லாமல், மாணவ உலகிடையே புதியதொரு வரலாற்றை ஏற்படுத்துவதாகவும், மாணவ இயக்க வளர்ச்சிக்கு ஊட்டம் ஊட்டுவதாகவும் இருந்தது.

தமிழ்ப் பேரவை, தமிழ் இலக்கியக் கழகம் ஆகிய இரண்டின் சார்பாகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில்

ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்குப் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி அறிஞர் அண்ணாவைப் பற்றி அரிய பாராட்டுரை ஒன்று வழங்கினார். மாணவ உள்ளங்களெல்லாம் அடைய முடியாததொன்றை அடைந்துவிட்டதைப் போல் பெருமித உணர்ச்சியோடு களிகொள்ள, அறிஞர் அண்ணா அவர்கள் "ஆற்றோரம்" என்னும் பொருள் பற்றி அழகுபட, ஆர்வம் மிக, நகைமிளிர, நயம் சிறக்க, சொல் இனிக்க, பொருள் பொதிய அருவியின் வீழ்ச்சியென அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் தமிழ்ப் பேச்சின் அருமையைக் கேட்டறிந்த செவிகள், அதைவிட மேலாக விளங்கிய அவரது ஆங்கிலப் பேச்சின் அருமையையும் கேட்டறியும் வாய்ப்பினையும் பெற்றன. துணைவேந்தர் தோழர் எம். இரெத்தினசாமி அவர்கள் தலைமையில் "பழைய உலகமும் புதிய உலகமும்" (The world Old and New.) என்னும் பொருள் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். இந்த இரண்டு பேச்சும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்பொழுது படித்துக் கொண்டிருந்த செயல் மாணவர்கள் சிலர்க்கு, அறிஞர் அண்ணாவைச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் கொள்ளும்படி ஊக்கமளித்தன என்றால் மிகையாகாது.

அந்தத் தடவை அண்ணா அவர்கள் விருந்தினர் விடுதியில் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து தங்கினார்கள். அப்பொழுதுதான் தேனடையை மொய்க்கும் தேனீக்கள் போல் அறிஞர் அண்ணாவைச் சுற்றிக்கொண்டு மாணவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டதும், அண்ணா அவர்கள் விடையிறுத்ததும், மாணவர்களை மாணவ நிலைக்குப் பிறகு பொதுப்பணிக்கு அழைத்ததும், மாணவர்கள் இசைந்ததும் ஆகும்.

மன்றம், நாள்: 1. 12-54.

## அரண்மனையில் வாழ்ந்த கட்சி ஆலமரத்தடிக்கு வந்தது

1910-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி (தென்னிந்திய நலவுரிமைச்சங்க) மாநாட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கட்சியின் தலைவராகவும், அறிஞர் அண்ணா அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியார் அவர்கள் தலைமையின் கீழ் நீதிக்கட்சி வந்த காலத்திலிருந்தே, அதாவது 1938-லிருந்தே, பெரியார் இராமசாமியும், அறிஞர் அண்ணாவும் அரசியல் கருத்துக்களோடு பொருளாதார-சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் நாட்டில் பரப்பலாயினர். சுருங்கக் கூறின் மாளிகையிலே மட்டும் உலாவிவந்த கட்சியை மரத்தடிக்குக் கொண்டுவர விரும்பினர்.

பொருளாதார-சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குப் பிற்போக்கு வாதிகளாய் விளங்கிய நீதிக்கட்சியைச் சார்ந்த சில பழைய பிரபுக்களும், பணக்காரர்களும், பட்டதாரிகளும் நீதிக் கட்சியின் தலைமைப் பதவியைப் பெரியாரிடத்திலிருந்து பிடுங்கிவிடவேண்டும் என்று எண்ணினர் அதற்கான முயற்சிகளையும் செய்தனர்.

1944-ம் ஆண்டில் சேலத்தில் நீதிக்கட்சி மாநாடு கூட்ட ஏற்பாடு ஆயிற்று. அந்த மாநாட்டில் பெரியார் அவர்களின் தலைமையை மாற்றி, அந்தப் பதவிக்குக் காலஞ் சென்ற சர் ஆர். கே. சண்முகம் அவர்களையாவது அல்லது வேறு எந்தப்பிரபுவையாவது கொண்டுவர சில பிரபுக்களும், பிரபுக்களை அண்டினோரும் ஆதரவு தேடும் படலத்தைத் துவக்கினர். பிரபுக்களின் போக்கு பெரியாருக்குக் கலக்கத்தையும், வேதனையையும் தந்தது. நீதிக்கட்சியை விட்டு விட்டு சுயமரியாதை இயக்கத்திலேயே தம் கவனத்தைச் செலுத்தலாமா என்றுகூட பெரியார் அவர்கள் எண்ணினார்கள். அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், "நீதிக்கட்சியிலிருந்து பதவி வேட்டைக்காரர்களை நாம் விரட்ட வேண்டுமேயொழிய நாம் நீதிக்கட்சியைவிட்டு விலகக் கூடாது" என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அரண்மனையிலிருந்த கட்சியை ஆலமரத்தடிக்குக் கொண்டு வரவே அறிஞர் அண்ணா அவர்கள் அரும்பாடுபட்டார்கள்; அதற்கான முறையில் முயன்றார்கள்.

'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' என்ற கட்சியின் பெயரை 'திராவிடக்கழகம்' என்று மாற்றியமைக்கும் தீர்மானத்தையும், அரசாங்கம் தந்துள்ள கவுரவப் பட்டங்களையும், பதவிகளையும், கழக உறுப்பினர்கள் துறந்துவிட வேண்டும் என்றும், அப்படித் துறக்க வில்லையானால் அத் தகையோர் கழக உறுப்பினர்கள் ஆகமாட்டார்கள் என்றும் கருத்தமைந்த தீர்மானத்தையும் 1944-ம் ஆண்டில் சேலத்தில் நடந்த நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். பட்டம்-பதவி வேட்டைக்காரர்கள் கட்சியை விட்டு ஓடினர்; கட்சி பட்டாளி மக்களின் கைக்கு வந்து சேர்ந்தது. அறிஞர் அண்ணா அவர்களின் குறிக்கோள் வெற்றிகரமாக ஈடேறியது.

மன்றம், நாள்: 15. 12. 54.

## புகையிலை நறுக்கும் கத்திரிக்கோல்

1948-ஆம் ஆண்டில் பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் ஒன்று, சென்னை பெரம்பூர் புகை வண்டி நிலையத்திற்கு எதிரிலுள்ளமைதானத்தில் கூட்டப்பட்டது. அந்த விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப் பட்டிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று பகற்பொழுதில் தோழர் க. அன்பழகன் அவர்கள் வீட்டில் தங்கியிருந் தார்கள். ஓய்வான நேரத்தில் 'சேப்டி ரேசர்' மூலம் முகச் சவரம் செய்து கொண்டார்கள். மீசையைச் செம்மைப் படுத்த வேண்டி தோழர் அன்பழகனிடம் கத்திரிக்கோல் ஒன்று கேட்டார்கள். தோழர் அன்பழகன் அவர்கள் பெரியதொரு கத்தரிக்கோலைக் கொண்டு வந்து கொடுத் தார். அந்தக் கத்திரிக்கோல் மீசையைச் செம்மைப் படுத்துவதற்குப் பதிலாகச் சீர்குலைத்துவிட்டது. இறுதியில் மீசை முழுவதுமே எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எப்பொழுதும் மீசையோடு காட்சியளித்துவந்த அண்ணா அவர்கள் அன்று பொதுக் கூட்டத்தில் மீசையில்லாமல் காட்சியளிக்க வேண்டியிருந்தது.

அந்த நேரம் அறிஞர் அண்ணா அவர்கள் இயக்க நடவடிக்கைகளில் மிகவாகத் தொடர்பு கொள்ளாமல் ஒதுங்கியிருந்த நேரமாகும். தாம் மீசையில்லாமலிருப் பதைத் தமது அரசியல் போக்கோடு சிலர் தொடர்பு

படுத்திப் பார்க்கக்கூடும் என்பதை உணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதே ஏற்ற ஒரு இடத்தில் அதனை வெளிப்படுத்திவிட்டார்கள். "இன்று எனக்கு மீசையில்லாமலிருப்பதைக் கண்ட சிலர், இது என்ன புதுமையாக இருக்கிறதே என்று வியப்படைகிறார்கள்; வேறு சிலர் இதற்கு ஏதேனும் அரசியல் காரணம் இருக்கவேண்டுமென்று ஐயப்படுகிறார்கள். இதற்கு ஒரு காரணமும் இல்லை. தோழர் அன்பழகன் அவர்கள் வீட்டில் நான் முகச்சவரம் செய்து கொண்டேன். மீசை நறுக்குவதற்காகத் தோழர் அன்பழகன அவர்களைக் கத்தரிக்கோல் கேட்டேன். அவர் புகையிலை நறுக்கும கத்திரிக்கோல் ஒன்றினைக் கொண்டு வந்து கொடுத்தார். அதன் விளைவால் என் மீசை முழுவதும் எடுக்க வேண்டியதாயிற்று. அவ்வளவுதான்!" எனனும் கருததுப்பட கூறினார்கள் கூடியிருந்த மக்கள் கொலலெனறு சிரித்துச் சிரிபபொலி கிளப்பினர்.

மன்றம், நாள்: 1. 1. 55.

## குறிக்கோளின்றேல் நாடு குலையும்

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின் நாடு குலையும் எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக் குழப்பம். கொதிப்பு. அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

அறிஞர் அண்ணா

## நாடகத்தில் பாட பேதம்

"சந்திரமோகன்" நாடகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் காகபட்டர் வேடந்தாங்கி, அப்பகுதியைச் சிறப்புற ஆக்கினார். காகபட்டருக்குப் பிரதம சிடனாக ரங்கு என்பவன் வருவான். அதில் திரெளபதியைப் பற்றிய உரையாடல் காகபட்டருக்கும் ரங்குவிற்கும் நடைபெறும்.

"திரெளபதிக்கு ஐந்து கணவன்மார்கள். ஒரே சமயத்தில் தருமர் சொக்கட்டான் ஆடவும், பீமன் சாப்பாடு போடவும் அருச்சுனன் உலாவப் போகவும், சகாதேவன் தருமநூல் படிக்கவும், நகுலன் குதிரைச்சவாரி செய்யவும் கூப்பிட்டால் அவள் என்ன செய்வாள்?" என்று காகபட்டர் ஒரு கேள்வி கேட்பார்.

"என்ன செய்ய முடியும்? ரொம்பச் சங்கடந்தான்" என்பான் ரங்கு.

நினைப்பதற்கே இவ்வளவு சங்கடம் என்கிறாயே, இதைப்போல எவ்வளவுசங்கடங்களை அந்தப் பதிவிரதை தாங்கியிருப்பாள்!" என்பார் காகபட்டர்.

"என்ன செய்தாள், ஸ்வாமி?" என்று கேட்பான் ரங்கு.

"திரெளபதி உடனே கிருஷ்ணபரமாத்மாவை நினைத்துக்கொண்டாள். அப்பொழுது கிருஷ்ணபரமாத்மாருக்மணியுடன் ஊஞ்சலில் உட்கார்ந்து சல்லாபித்துக் கொண்டிருந்தார். கிருஷ்ணபரமாத்மா யாருடன் இருந்தார்?" என்று சிடனைக் காகபட்டர் கேட்பார்.

"ருக்மணியுடன்!" என்று ரங்கு சொல்ல வேண்டும்.

ஆனால் ஒருநாள் 'சந்திரமோகன்' நாடகத்தில் இந்தக் கட்டம் வந்த பொழுது, "கிருஷ்ணபரமாத்மா யாருடன் இருந்தார்?" என்று காகபட்டர் கேட்டபொழுது, "ருக்மணியுடன்!" என்று சொல்வதற்குப் பதில் ரங்கு வேடம் போட்டவர் "திரௌபதியுடன்" என்று தவறிச் சொல்லிவிட்டார். மிகத்தவறான பதில்! நாடகமேடையில், பக்கத்தில் இருப்பவர்களுக்கு ரங்கு சொன்ன பதில் தவறானது, பாடத்தில் இல்லாதது என்று தெரியும்! காக பட்டர் வேடத்தில் வேறு யாரும் இல்லாதிருந்தால் திகைத்துப் போயிருப்பார்கள். ஆனால் அறிஞர் அண்ணா சமாளித்துக்கொண்டு "ஏண்டா, மண்டு! ராதா, ருக்மணி சத்தியபாமா, ஆயிரம் கோபிகைகள் இவ்வளவு பேரும் இருப்பது கிருஷ்ணபரமாத்மாவுக்குப் போதாதென்று, திரௌபதியையும் அவருடன் அனுப்பி வைத்துவிட்டாயா என்று சொன்னார்.

கைதட்டலில் கொட்டகை அதிர்ந்தது, ரங்குவேடத்தில் இருந்தவன் பெருமூச்சுவிட்டான், "தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன், நான் மண்டு, ஸ்வாமி!" என்று நிலைமையைச் சமாளிப்பதற்காக அண்ணா அவர்கள் சேர்த்துக் கொண்ட இந்த பதில் பின்பு பாடமாகவே நாடகத்தில் சேர்ந்துவிட்டது.

நாடகத்தில் பலருக்கு பாடங்கள் தவறிப் போய்விடுவதுண்டு. அண்ணா அவர்கள் அவற்றைத் தெரிந்து, ஏதாவது கேள்வி—பதில் தந்து சமாளித்துக் கொண்டு விடுவது வழக்கம்.

மன்றம், 15-2-59.

# சிறையில் பூனை வளர்ப்பு

அறிஞர் அண்ணா அவர்கள், மும்முனைப் போராட்டத்தின் விளைவாக மூன்று திங்கள் சிறைத் தண்டனை ஏற்றுச் சென்னைச் சிறையில் இருந்த போது, பொழுது போக்குக்காகக் கொண்டிருந்தவைகளிலே பூனை வளர்ப்பு ஒன்றாகும்.

சிறைச்சாலைக்குச் சென்ற சிலநாட்களில், ஒரு தாய்ப் பூனை இரண்டு குட்டிகளை அழைத்துக் கொண்டு, நாள் தோறும், இரவில், அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த கட்டிடம் பக்கம் வருவதும், அறைகளில் ஏதேனும் இருக்கிறதா என்று தேடுவதும், பிறகு போய்விடுவதும் ஆன காட்சி அறிஞர் அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனால் அந்தப் பூனைகளுக்கு ஏதேனும் உணவு திரட்டி வைத்திருக்க வேண்டும் என்ற இரக்க உணர்வு அவருக்குப் பிறந்தது.

அன்று முதல் அண்ணா அவர்கள் நாள்தோறும் தமக்குக் கொடுக்கப்படும் பாலில் ஒரு பகுதியைப் பூனைகளுக்கென்று ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்கள். தாய்ப் பூனையும் இரண்டு குட்டிகளும் வரும்போது, அவர் அறையின் இரும்புக் கதவுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு ஒரு அலுமினியக் கிண்ணத்தை இரும்புக் கம்பிகளுக்கு இடையில் விட்டு, வெளியே வைத்து, அதனைக் கம்பிகளுக்

சருகில் தள்ளிவைத்துக்கொண்டு, உள்ளே இருந்தபடியே நீண்ட குவளையிலிருக்கும் பாலை அந்தக் கிண்ணத்தில் ஊற்றுவார்கள்.

தாய்ப்பூனை முதலில் குட்டிகளைச் சாப்பிடவிட்டு விட்டுத் தான் காத்துக் கொண்டிருக்கும். அந்தக் குட்டிகளில் ஒன்று பருத்து வலிவுள்ளதாகவும், மற்றொன்று மெலிந்து வலிவற்றதாகவும் இருந்தன. வலிவுள்ள குட்டி வலிவற்ற குட்டியை அப்பால் தள்ளிவிட்டுத்தானே பாலையெல்லாம் குடிக்க முயலும். அப்பொழுது தாய்ப்பூனை வலிவுள்ள குட்டியை அப்பால் தள்ளிவிட்டு வலிவற்ற குட்டி சாப்பிடுவதற்கு இடம் ஏற்படுத்திக் கொடுக்கும். குட்டிகள் இரண்டும் சாப்பிட்டு முடிந்ததற்குப் பிறகுதான் தாய்ப் பூனை குடிக்க முயலும். பால் மிச்சம் இருந்தால் குடிக்கும்; இல்லையானால் குட்டிகளை அழைத்துக் கொண்டு போய் விடும். இந்தக் காட்சி அறிஞர் அண்ணாவுக்கு வியப்பையும் பொழுது போக்கையும் தரும்.

பிறகு இரண்டு கிண்ணங்களில் இரண்டு குட்டிகளுக்கும் தனித்தனியே அண்ணா அவர்கள் வைத்தார்கள். பருத்த குட்டி தனக்கு வைத்த பாலை அவசரமாகக் குடித்துவிட்டு, மெலிந்த குட்டிக்கு வைத்த பாலை குடிக்க முயலும். அப்பொழுது அண்ணா அவர்களும் தாய்ப்பூனையும் பருத்த குட்டியை அப்பால் அனுப்பி விட்டு மெலிந்த குட்டி குடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்கள். பிறகு தாய்ப்பூனை வெளியே படுத்திருக்கக் குட்டிகள் இரண்டும் உள்ளே வந்து விளையாடும். இரவில் நீண்டநேரம தூக்கம் வராத அண்ணா அவர்களுக்கு இது பொழுதுபோக்காக இருக்கும்.

கடைசி சில நாட்களில் மெலிந்த பூனைக்குட்டி வராமல் தாய்ப்பூனையும் பருத்த குட்டியும் மட்டுமே வந்தன. இரண்டு மூன்று நாட்கள் கழித்து கேட்டறிந்த

போது அந்தப் பூனைக்குட்டியை யாரோ அடித்து இறந்து போய்விட்டது என்று தெரியவந்தது. அந்தச் செய்தியைக் கேள்வியுற்ற அறிஞர் அண்ணா அவர்கள் எதையோ பறி கொடுத்துவிட்டது போன்ற இரக்கவுணர்வோடு இரண்டு மூன்று நாட்கள் காணப்பட்டார்கள்.

மன்றம், 1.3.55.

## நல்ல பயன் தரும் நாற்றங்கால்

எனக்கு குழந்தைகளைப் பார்க்கும்போது எதிர் காலத்தையே பார்ப்பதுபோன்ற உணர்வு ஏற்படுவது உண்டு! நமது வாழ்க்கையிலுள்ள துன்ப துயரங்களும், நலிவும் மெலிவும் நீக்கப்பட்ட எதிர்காலத்தை அந்தக் குழந்தைகளின் உருவில் காண்கிறேன். ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் மாறி வாழ்வில ஏற்றம் பெறவேண்டும்! அந்தப் பிள்ளைகளின் மூலம்தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும்! கஷ்ட நஷ்டங்கள் துடைக்கப்படும்! வயலுக்கு நாற்றங் காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல் எதிர் கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராகப் பிள்ளைகள் இருக்கிறார்கள். நாற்றங்கால் பயிர், பார்ப்பதற்குப் பச்சைப் பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல; அதை நன்றாக வளர்த்து விரிவான வயலில், முறையாக நட்டு, ஒழுங்காக வளர்த்தால், தரமான பயன் கிடைக்கும. அது போல் பள்ளிப் பிள்ளைகள் எனும் நாற்றங்கால்-பயிராக - நன்றாக - ஒழுங்காக வளர்ந்து வரும் ஆசிரியர்கள் இந்த நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்,

அறிஞர் அண்ணா

## பேச முடியாமற்போன ஒரே கூட்டம்

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடக் கழகம் ஆகிய அமைப்புகள் தோன்று வதற்கு முன்னால், நீதிக்கட்சியில் சார்ந்திருந்து, பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த போது, தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அவலூர்பேட்டைக்கு ஒருமுறை அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவலூர்ப்பேட்டை வைதீகப் பெரியவர்கள், பணக் காரர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்துவந்த காலம் அது. பகுத்தறிவியக்கக் கொள்கைகளிலே பற்றுக் கொண்ட ஒரு சில இளைஞர்கள் அறிஞர் அண்ணா அவர் களை வரவழைத்து அவ்வூரில் எப்படியேனும் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்திவிட வேண்டும் என்று முயன்று அரும் பாடுபட்டுக் கூட்டினார்கள். அறிஞர் அண்ணாவும் இசைந் தார்கள்.

அவலூர்ப்பேட்டையில் மணியக்காரராய் இருந்த பெரி யவர் ஒருவர் தம்மைப் பொருட்படுத்தாமல் 'பொடியர்கள்' பொதுக்கூட்டம் கூடுகிறார்களே என்பதைக் கண்டு சினங் கொண்டு, எப்படியேனும் கூட்டத்தை நடத்தவொட் டாமல் செய்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

பொதுக்கூட்டம் ஆரம்பமாகி அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்திருக்கும்போது அந்தமணியக்காரர் கூட்டத்

திடை வந்து நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டு, அவர் முன்னரே ஏற்பாடு செய்து வைத்திருந்தபடி பறை யடிப்போரைப் பார்த்து, "தப்பட்டையை அடியுங்கடா..." என்று கட்டளை பிறப்பித்தார். அவ்வளவுதான் கூடியிருந் தோர் காது செவிடுபடும்படியாகப் பறையடிப்போர் பறை யொலி கிளப்பினர். அறிஞர் அண்ணாவால் ஏதும் பேச முடியவில்லை. "நான் சிறிது நேரத்தில் முடித்துக்கொள் கிறேன். அதைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள்!" என்று அண்ணா அவர்கள் அந்த மணியக்காரரை கேட்டுக் கொண்டார்கள் "அதெல்லாம் முடியாது! அடியுங்கடா..." என்று மணியக்காரர் மேலும் கடுமையாகக் கட்டளை யிட்டார்.

"அதிக நேரம் பேசப்போவதில்லை, சிறிது நேரந்தான்" என்றார் மீண்டும் அண்ணா அவர்கள்.

"யாரைக் கேட்டுக்கொண்டு பேசவந்தாய்? என்னையா கேட்டுக் கொண்டு வந்தாய்? இல்லையே?" என்றார் மணி யக்காரர்.

"பொதுமக்கள் கூடிவிட்டார்கள். இவர்களை எழுந்து போகச் சொல்லுவது உங்கள் ஊருக்கு நல்லதல்ல. இப் பொழுதுதான் கேட்கிறேன், பேசவிடுங்கள்" என்று அண்ணா அவர்கள் கேட்டார்கள்.

"அப்படியானால் ஐந்து நிமிடம் பேசு" என்று அவர் அனுமதி தந்தார். அவரது கட்டளையின்பேரில் தப்பட்டை ஒலி நின்றது. அண்ணா அவர்கள் பேச்சைத் தொடங்கி பேசிக்கொண்டேயிருந்தார்கள். ஐந்து நிமிடங்கள் ஆன வுடனேயே பறையொலி எழுப்பும்படி மணியக்காரர் கட்டளையிட்டுவிட்டார். பறைகள் பெரும் ஓசை கிளப்பின. அண்ணா அவர்கள் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் மணியக்காரர் கூட்டம் நடத்த அனுமதிக்கவில்லை.

மணியக்காரரை எதிர்த்துப் பேசும் ஆற்றல் அப்பொழுது யாருக்கும் ஏற்படாததால், எல்லோரும் வாளா இருந்து விட்டனர். கூட்டம் கட்டிய இளைஞர்கள் அப்பொழுது அண்ணா அவர்கள் எதிரில் வர அஞ்சி மறைந்துவிட்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் பேசமுடியாமல் இறங்கிய ஒரே மேடை அதுதான்.

மறுநாள் காலையில் சிற்றுண்டி அருந்த ஒரு உணவு விடுதிக்கு அருகில் அண்ணா அவர்கள் சென்றபோது, அங்கிருந்த மணியக்காரர் அண்ணாவை வரவேற்றுச் சிற்றுண்டி முதலியவைகளை வாங்கி வழங்கினாராம். முதல் நாள் இரவுக் கூட்டம் ஏன் தன்னால் நிறுத்தப் பட்டது என்பதற்கான காரணத்தை அவர் சொல்லும் போது, கூட்டத்தை நடத்தவிட்டால், இளைஞர்கள், எப்பொழுதும் தம்மை மதிக்காமல் போய்விடுவார்கள் என்றும், அவர்களுக்கு அத்து இருக்கவேண்டும் என்பதற்குத் தான் கூட்டத்தைத் தாம் நிறுத்தினதாகவும் கூறினாராம்.

மன்றம், நாள்: 15-3-55.

## தகுதியுள்ள தமிழ்

ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன் படுத்தப்படுகிறதோ அந்த அந்தக் காரியங் களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதி உள்ள மொழி என்றால அது 'தமிழ், தமிழ்' என்று சொல்லத் தயக்கப்பட மாட்டேன். அவ் வளவு வளம் உள்ள மொழி.

அறிஞர் அண்ணா

## புரிந்து கொள்ளாத அறிமுகம்

தோழர் டி. சண்முகம் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டாண்மைக் கழகத் தலைவராக இருக்கும்போது, அறிஞர் அண்ணா அவர்கள், அவரோடு காரில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்ப் பகுதிக்குச் செல்ல வேண்டிய வாய்ப்பு ஒன்று ஏற்பட்டது. இது நடைபெற்றது ஏறத்தாழ 1944-ஆம் ஆண்டாக இருக்கக்கூடும்.

தோழர் டி. சண்முகம் அவர்கள் காரில் சென்றுகொண்டிருக்கும்போது இடையில், ஒரு சிற்றூரில், மாவட்டாண்மைக் கழகத்தைச் சேர்ந்த துவக்கப் பள்ளி ஒன்றைக் கண்டாராம். அதனைப் பார்வையிடலாம் என்று கருதிக் காரை நிறுத்திவிட்டு, அறிஞர் அண்ணாவையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தில் நுழைந்தாராம். அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர் அரசியல் அறிவும் பொது அறிவும் அற்ற ஒருவராக இருந்ததால் அண்ணாவை அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. தோழர் டி. சண்முகம் தலைமையாசிரியரிடம் பள்ளிக்கூடத்து நிலைமைகளைப்பற்றிச் சிறிதுநேரம் கேட்டறிந்துவிட்டு, அறிஞர் அண்ணாவைச் சுட்டிக்காட்டி "இவர் யார் தெரியுமா?" என்று தலைமையாசிரியரைக் கேட்டாராம்.

"யார் என்று தெரியவில்லையே!" என்று தயக்கத்தோடு தலைமையாசிரியர் கூறினாராம்.

"இவரைத் தெரியாது? என்னய்யா நீ தலைமையாசிரியர்!" என்றாராம் தோழர் சண்முகம்.

"எங்கேனும் பார்த்திருப்பேன், சரியாக நினைவு இல்லை!" என்று கூறினாராம் தலைமையாசிரியர்.

"இவர் தெரியாது!... இவர்தானய்யா அண்ணாதுரை! அண்ணாதுரை என்று தோழர் டி. சண்முகம் சொல்ல, அப்பொழுதும் அண்ணாவை யாரென்று அந்தத் தலைமையாசிரியரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"இவர்தானய்யா அண்ணாதுரை! சந்திரோதயம்! நாடகம்! தெரியாது? என்று தோழர் சண்முகம் மீண்டும் கேட்டாராம்.

"ஓகோ! நாடகக் காண்ட்ராக்ட்காரரா..." என்று இழுத்தாற்போல் கூறினாராம் தலைமையாசிரியர்.

"இல்லையா! சந்திரோதயம்! துரைராஜ் வேஷம்... நடிக்கல்லே என்று கேட்டாராம்.

"ஓகோ! நடிகரா?..." என்று புரிந்துகொண்டவர் போல தெளிவுபடுத்திக் கொண்டாராம் தலைமையாசிரியர்,

"என்னய்யா இது!... இவரைத் தெரியாது? விடுதலைப் பத்திரிகை! எழுதுவாரு!... பேசுவாரு!... அண்ணாதுரை!... தெரியாது?..." என்று மேலும் விடாமல் வினாவினாராம்.

தலைமையாசிரியர் தாம் புரிந்துகொள்ளாததை இனியும் காட்டிக் கொள்ளக்கூடாது என்று கருதி, "ஓகோ! இப்பொழுது தெரியுது! தெரியுது! பார்த்திருக்கிறேன்! இப்பொழுதான் நினைவுக்கு வருகிறது!" என்று கூறினாராம். உள்ளபடியே அப்பொழுதும் அவர் புரிந்துகொள்ளவில்லையாம்.

இந்த உரையாடல்களுக்கிடையே அறிஞர் அண்ணா அவர்கள் நின்று கொண்டு என்ன செய்வதென்று தோன்றாமல் தத்தளித்தாராம். அந்த இடத்தைவிட்டு அகன்றால் போதும் என்றாகிவிட்டதாம்!

மன்றம், நாள்: 1-4-55.

## வெறுங்காவலில் போடக் கடுங்காவலில் புகுந்தார்

1938-ஆம் ஆண்டில், ஆச்சாரியாரின் கட்டாய இந்தி நுழைப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்பட்டபோது, அறிஞர் அண்ணா அவர்கள் அதில் ஈடுபட்டு சட்ட வரம்புக்கு மீறிய சொற்பொழிவாற்றினார் என்று ஆச்சாரியார் ஆட்சியால் குற்றஞ்சாட்டப்பட்டு, நான்கு திங்கள்கள் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் சென்னைப் பெருஞ்சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் சிறைபுகுமுன்னரே இந்தி எதிர்ப்புத் தொண்டர்களும், தலைவர்களும் பலராகச் சிறை புகுந்தனர். நண்பர்கள் பலர் இருந்த போதிலும், உண்ணுவதும், உறங்குவதும், உரையாடுவதும் ஆன செயல்களிலேயே பொழுதெல்லாம் கழிவது அண்ணாவுக்கு ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை. எனவே இரண்டாம் வகுப்பு வெறுங்காவல் தண்டனையைக் கடுங்காவல் தண்டனையாக மாற்றிக் கொள்வதன்மூலம் ஊக்கமும், மனக்கிளர்ச்சியும் பெறலாம் என்று கருதித் தமக்குக் கடுங்காவல் தண்டனை கொடுக்கும்படி உரிய அதிகாரிகளை அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டார். அதிகாரிகளும் அவ்வாறே சில நாட்கள் கழித்து அளித்தனர்.

அறிஞர் அண்ணாவின் போக்கு பலராலும் பாராட்டப் படவேண்டியதாக இருந்ததோடு மட்டுமல்லாமல், சிறையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியால் மிக மேம்பாடுற்றதாகவும் கருதப்பட வேண்டியதாக மாறிற்று.

அறிஞர் அண்ணா அவர்கள் என்று இரண்டாம் வகுப்புக் கடுங்காவல் தண்டனையை விரும்பி ஏற்றுக் கொண்டார்களோ அதே நாளில் திருவாசகமணியாக விளங்கும் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல்வகுப்பு வெறுங்காவல் தண்டனையைத் தாங்கிக் கொள்ளமுடியாமல், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியேற விரும்பினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் வெறுங்காவல் தண்டனையை வெறுத்துக் கடுங்காவல் தண்டனையை ஏற்றுக், கடுங்காவலுக்குரிய உடுப்புகளை அணிந்து கொண்டு சிறையிலுள்ள ஒரு வாயிலிலே நுழையும்போது, தோழர் கே. எம். பாலசுபபிரமணியம் அவர்கள் மன்னிபபுக் கேட்டுக்கொண்ட நிலையில் வீட்டுக்குப் போக வெளியேறினார். இருவரும் வாயிலில் ஒருவரையொருவர் கண்டு கொண்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் அவரைப் பார்த்துக் கேலிச் சிரிப்பு சிரிக்க, அவர் அசட்டைச் சிரிப்பு சிரித்தாராம். அண்ணா அவர்கள் அவரைப் பார்த்து, அவரைப்போலவே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு முன்னரே வெளியேறிவிட்ட ஒருவர் பெயரைச்சொல்லி, அவர்தான் வெளியே அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பார், வேறு யாரும் இருக்கமாட்டார்கள் வரவேற்க என்று சிரித்துக் கொண்டே கூறி அனுப்பினார்களாம். அறிஞர் அண்ணா கூறியதுபோல மன்னிப்புக் கேட்டுக் கொண்டவரை, முன்னரே மன்னிபுக் கேட்டுக்கொண்ட ஒருவர்தான் வரவேற்று நின்றாராம்!

மன்றம், நாள் 15-4-55

## சாமியார் 'ஆசாமி'யார் ஆனார்!

"திராவிடநாடு" அலுவலகப் பொறுப்பாளராக இருந்துவரும் தோழர் ஈழத்து அடிகள் ஒரு காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஈழத்து சிவானந்த அடிகளாக விளங்கினார்.

கையிலே கமண்டலம், உடலிலே காவி உடை, கழுத்திலே உருத்திராக்கக் கொட்டை, நெற்றியிலே திருநீற்றுப் பட்டை, காலிலேகட்டை, தலையோ மொட்டை இந்தத் தவத்திருக் கோலத்தோடுதான் அவர் 1938 ஆம் ஆண்டிற்கு முன்னால் காட்சியளித்தார். ஈழநாட்டிலே பிறந்து, சிறுவயதிலேயே 'தவத்திருக்கோலம்' பூண்டு 'ஸ்தலயாத்திரைகள்' பலசென்று, இறுதியாகக் கருவூரில் 'அறிவுதயக் கழகம்' என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்திக் கொண்டு, 'சிவபூசை' 'சக்திபூசை'களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தமிழினிடத்தே ஆழ்ந்தபற்றும் அதன் வளர்ச்சியிலே அக்கறையும் கொண்டு விளங்கினார். தோழர் இராசகோபாலாச்சாரியார் 1938-ல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன் என்று அறிக்கைவிட்டபோது, அதனை எதிர்த்து ஆச்சாரியாருக்கு முதல் தந்தி அடித்தவர் ஈழத்துச் சிவானந்த அடிகளே யாவார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அவர்தான் துவக்கினார். பிறகுதான் நாவலர் பாரதியார், பெரியார் இராமசாமி அறிஞர் அண்ணா போன்றவர்கள் கலந்துகொண்டார்கள். ஈழத்துச் சிவானந்த அடிகள் இந்தி எதிர்ப்பின் முதல் சர்வாதிகாரியாகப் பணியாற்றிச் சிறை புகுந்தார்

ஈழத்து அடிகள் காவியுடைத் தோற்றத்தோடு சிறை புகுந்திருந்தகாலை, அறிஞர் அண்ணா அவர்களும் சென்னையில் சிறைபுகுந்தார்கள். இருவரும் 'பி' வகுப்பில் வைக்கப்பட்டிருந்தனர். இருவரும் ஒருவரையொருவர் காணவும், ஒருவரோடொருவர் அளவளாவவும், ஒருவருக் கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் மிக்க வாய்ப்பும், பொழுதும் ஏற்பட்டன. அறிஞர் அண்ணாவின் கருத்துக்கள் ஈழத்து அடிகளைக் கவர்ந்தன. 'பக்திச் சாமியார்' பகுத்தறிவுச் சாமியாரா'கச் சிறிது சிறிதாக மாறத் தொடங்கினார். 'அடிகளாரின்' உள்ளத்தை நன்கு அறியும் வாய்ப்பினைப் பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள், அடிகளாரின் உள்ளம் மண்ணாசை — பெண்ணாசை— பொன்னாசை எதையும் எப்பொழுதும் விட்டதில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள். 'அடிகளாரின்' பொய்மை வாழ்க்கையைப் பற்றி அண்ணா அவர்கள் அடிக்கடி கேலியும் கிண்டலும் செய்யும் போதெல்லாம் "நான் மட்டும் இப்படியல்ல; இந்த உடையில் இருக்கும் எல்லாச் சாமியார்களும் இப்படித்தான்; இதற்கு விதிவிலக்கு அரிதிலும் அரிது" என்று ஈழத்து அடிகள் குசப்புவாராம். கோணல் வாழ்க்கையைவிட்டு, நேரான வாழ்க்கைக்கு நேர்முகமாக உள்ளன்போடு வரச்சொல்லி அண்ணா அவர்கள் அடிகளாரைச் சிறையில் வற்புறுத்து வார்களாம்.

ஈழத்துச் சிவானந்த அடிகள் வெளியில் வந்த பிறகும் சிலநாட்கள் காவியுடையோடு காட்சி அளிக்க, அறிஞர் அண்ணா அவர்கள் "உள்ளத்திலே ஆசை அவ்வளவும் இருக்க, காவியுடையேன்? திருநீற்றுப் பட்டையேன்?" என்று கேலி செய்ய, ஸ்ரீலஸ்ரீ ஈழத்துச் சிவானந்த அடிகள் பொய்மை வாழ்க்கையைவிட்டு, உண்மையான நேர்மை யான வாழ்க்கையில் புகுந்து, தூய வெள்ளையுடைக்கோலம் பூண்டு தோழர் ஈழத்து அடிகளாக மாறினார். அண்ணா வின் அறிவுரை 'சாமி'யாரை 'ஆசாமி'யாராக ஆக்கிற்று! சிறையில் ஏற்பட்ட பலன்களில் இதுவும் ஒன்று!

மன்றம், நாள் 1-5-55

## காவற்கூடத்தில் கடமையுணர்ச்சி

மும்முனைப் போராட்டக் காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், சென்னைக் காவற்கூடத்தில் தள்ளப் பட்டிருந்தபோது, சுமார் 500-க்கு மேற்பட்ட கழகத் தோழர்களும் அதில் புகும்படி நேரிட்டது.

அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் சிலரும் 'பி' வகுப்பில் அரசியலாரால் வைக்கப்பட்டிருந்தனர். மற்றைய தோழர்கள் எல்லோரும் 'சி' வகுப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

சிறைபுகுந்த கழகத் தோழர்கள், சிறைக்கூடத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடமையும், கட்டுப்பாடும் தவறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்தி அதனைக் காத்துவருவதிலே அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்துவந்தார்கள். சிறைக்கூடத்தில் சிலபல மாற்றங்கள் தேவை என்றால், அவற்றை அரசாங்கத்திடம் பெற முயலவேண்டுமேயொழிய, சிறை அதிகாரிகளோடு மோதிக் கொள்வதில் பலனில்லை என்பதை நன்கு உணர்ந்தே அண்ணா அவர்கள் கடமையை வற்புறுத்தினார்கள்.

ஒருபொழுது, சிறைக்குள் ஒரு குழுவாக நுழைந்த சுமார் 30 கழகத் தோழர்கள், காலையில் வரிசையில் உட்காரவும், அறைக்குவளிருக்கும் சிறுநீர்ப் பானைகளை வெளிக்கொண்டுவரவும், சோற்றினைச் சென்று வாங்கிக்

கொள்ளவும், மறுத்துவிட்டனர். சிறை வார்டர்களுக்கும், அந்தத் தோழர்களுக்கும் தகராறுகள் வளர்ந்தன. இச் செய்தி அறிஞர் அண்ணா அவர்கள் காதுக்கு மாலை 4 மணி அளவிற்கு எட்டிற்று உடனே அண்ணா அவர்கள் தோழர் நெடுஞ்செழியனை அவர்களிடம் அனுப்பி, கழகத் தோழர் கள் தங்கள் தங்கள் சிறுநீர்ப்பானைகளை வெளியே எடுத்து வைக்கமுடியாது என்றால், நாள்தோறும் தாம் வந்து எல்லோருடைய சிறுநீர்ப்பானைகளை எடுத்துவைக்கவும், தட்டுகளிலே சோறு வாங்கிக்கொண்டு வந்து அவரவர் அறைகளிலே வைக்கவும் தயாராக இருப்பதாகச் சொல்லச் சொல்லி, அவர்களது அனுமதி பெற்றுவரும்படிக்கூறினார். அப்படியே தோழர் நெடுஞ்செழியன் போய்ச் சொல்ல, தோழர்கள் கண்கலங்கி, தம் செய்கைக்கு வருந்தி, 'அண்ணா வரவேண்டாம்; நாங்களே முறைப்படி நடந்து கொள்கிறோம. எங்களை மன்னிக்குமபடி அண்ணாவிடம் கூறுங்கள்'' என்று விடை சொல்லி அனுப்பினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் கடமையுணர்ச்சியையும் கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் மிக வற்புறுத்தி வந்ததன் காரணமாகத்தான பொதுவாக எலலாச் சிறை களிலும், குறிபபாகச் சென்னைச் சிறையில, சிறையதிகாரி கள் பாராட்டத்தக்க வகையில் கழகத் தோழர்களின் நிலைமை இருந்தது. சிறையிலே பிற அரசியல் கட்சிக் காரர்கள் நடந்துகொண்ட விதத்தையும், திராவிட முன்னேற்றக்கழகத தோழர்கள் நடந்துகொண்ட விதத்தை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறை அதிகாரிகள், கழகத் தோழர்களைப் பாராட்டவேண்டிய நிலைமைக்கு உள்ளா னார்கள்.

மன்றம், நாள் 15-5.55

## யாருக்கு ஊசி?

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பொழுதுபோக்கு வதற்குரிய பற்றுக் கோடுகளில் மிகச்சிறந்த பற்றுககோடு காஞ்சித் தோழர் சி. வி. இராசகோபால் ஆவார்.

அறிஞர் அண்ணா அவர்களும் தோழர் சி. வி. இராச கோபால் அவர்களும் மிகச் சிறிய வயதிலிருந்தே இணை பிரியா நண்பர்கள். பள்ளிப்பருவ காலத்திலும இருவரும் ஒன்றாகவே சேர்ந்து பள்ளிக்குச் செல்வதும், ஒன்றாகவே திரும்பிவருவதும ஆன பழக்கம் பூண்டிருந்தனர். தோழர் சி வி. இராசகோபால் அவர்களின் பேச்சு, போக்கு, நடவடிக்கைகள் எல்லாம் அண்ணா அவர்களுக்கு எப் பொழுதும் நகைச்சுவை பயப்பனவாகும். அத்தகைய நகைச்சுவையினால் ஏற்படும் மகிழ்வின்பத்தைப் பெறு வதிலே அண்ணா அவர்களுக்கு எப்பொழுதுமே விருப்பம் மிகுதி அண்ணா அவர்களின் கேலியும் கிண்டலும் தோழர் இராசகோபால் அவர்களை நிலை தடுமாறவைதது் மேலும் மேலும் நகையாடற்குரியவராக அவரை வைத்துவிடும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் இராசகோபாலை பற்றிக் குறிப்பிடும்போது, அவர், தமக்கு ஒரு 'ஞாயிற்றுக் கிழமை' போன்றவர் என்று கூறுவார். அதாவது 'ஞாயிற்றுக்கிழமை' எப்படிப் பொழுது போக்குவதற் குரியதொரு நாளாக விளங்குகிறதோ, அப்படித் தோழர் இராசகோபால் பொழுதுபோக்குவதற்குரிய ஒருவராக விளங்குகிறார் என்று பொருள்,

தோழர் இராசகோபால் அவர்களை மனதில் வைத்துக் கொண்டுதான் அறிஞர் அண்ணா அவர்கள் 'சந்திரமோகன்' நாடகத்தில் பசதூர் என்ற ஒரு நகைச்சுவை உறுப்பைப் படைத்தார்கள். நாடகத்தில் அந்த உறுப்பை ஏற்று நடிக்கும் வாய்ப்பை அண்ணா அவர்கள் தோழர் இராசகோபால் அவர்களுக்கே கொடுத்தார்கள். தோழர் இராசகோபால் அவர்கள் நடித்துக்காட்டிய அந்த உறுப்பை ஏற்று வேறு யார் யாரோ நீண்டகாலமாகப் பழக்கமான நடிகர்கள்கூட நடித்துப் பார்த்தார்கள். ஆனால் தோழர் இராசகோபாலைப்போல் அவ்வளவு திறமையாக நடித்துக் காட்டியவர்கள் வேறு யாருமில்லை என்னலாம். காரணம் தோழர் இராசகோபால், அவர்களால் மட்டும்தான் அந்த உறுப்புக்குரிய நகைச்சுவையை உண்டாக்க முடியும் என்பதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் இராசகோபால் அவர்களை ஓயாமல் கிண்டல் செய்துகொண்டேயிருப்பார். ஒருபொழுது தோழர் இராசகோபால் அவர்கள் அண்ணாவிடம் வந்து தம்மை இரவு எலி ஒன்று கடித்துவிட்டதாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் சிரித்துக்கொண்டே "எலியா? உன்னையா?" என்று கேட்டார்கள்.

"ஆமாங்க! என்னைத்தான் எலி கடித்துவிட்டது!" என்று தோழர் இராசகோபால் இரக்கந் தோன்றக் கூறினார்.

"ஊசி போடணுமே! ஊசி போட்டாச்சா?" என்று அண்ணா அவர்கள் கேட்க, உடனே இராசகோபால் "இன்னும் போட்டுக்கலிங்க!" என்று கூறினார்.

உடனே அண்ணா "யாருக்கு ஊசி" என்று இராச கோபாலைப் பார்த்துக் கேட்டார்கள்,

"எனக்குத்தான்!" என்று இராசகோபால் அவசரமாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் சிரித்துக்கொண்டே "உனக்கல்ல! அந்த எலிக்கு ஊசிபோட்டாச்சா என்றுதான் கேட்டேன்!" என்றார்.

"எலிக்கு ஏன் ஊசி?" என்று இராசகோபால் கேட்க அதற்கு அண்ணா, "அதனுடைய விஷம் உன்னைப் பாதிப்பதைவிட, உனனுடைய விஷமல்லவா அதனை அதிகமாகப் பாதிக்கச் செய்திருககுமட!' என்று சிரிததுக்கொண்டே கூறினார்.

மன்றம், 1-6-55 •

# இருக்கும் இடங்கள்

பெரும்பாலானவர்களின் மூளை குழம்பியதற்குக் காரணம் வறுமை! பைத்தியக்காரச் சாலை அதன் விளைவு! கோர்ட்டு, போலீஸ், சிறை, தூக்குமேடை போல், பைத்தியக்காரச் சாலையும், வறுமையை ஒழிக்காததால், இருக்க வேண்டி நேரிட்ட இடங்கள்.

இந்த நாட்டிற்கு நிரந்தரமான செல்வத்தை தேடித் தருபவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால் அது ஆசிரியர்கள்தான். நிலையான செல்வத்தை, அழியாத செல்வத்தை, விலை மதிக்க முடியாத செல்வத்தைத் தேடித் தரும் ஆசிரியர்களை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்.

அறிஞர் அண்ணா

## பரிட்சை சமயத்தில் காய்ச்சல்

அறிஞர் அண்ணா அவர்கள் பொருளாதாரப் பகுதியில் சிறப்புப் பட்டம (பி. ஏ. ஆனர்சு) பெற்று, பின்னர் எம். ஏ. பட்டமும பெற்றார். முதல் தடவைப் பல்கலைக் கழகப் பரிட்சைக்குச் சென்றபொழுது, அவர் தேறவில்லை. காரணம் இரண்டு தாள்கள் எழுதியதற்குப் பிறகு, அவர் மேற்கொணடு பரிடசைகளுககுப் போகவில்லை. தன்னுடைய நண்பர் ஒருவருக்காகப் பரிந்துகொண்டு.

முதல் இரணடு நாட்கள் நடந்த பரிட்சையில் அண்ணா அவர்கள் மிக நன்றாக எழுதியிருந்தார். ஆனால் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் பரிட்சையில் மிக மோசமாக எழுதிவிட்டு, சோர்ந்த முகத்துடன், வெளியே வநதார். தான தோலவியுறுவது நிச்சயம என்றும், அதற்காக மேற்கொண்டு எழுதாமல் அந்த ஆண்டு நின்று கொண்டு மறு ஆண்டு எழுதப் போவதாகவும் நண்பர் சொன்னார். ஏனென்றால் சிறப்புப்பட்டப் பரிட்சைக்கு ஒருவர் ஒருதடவைக்கு மேல் முழுவதும் உட்காரக்கூடாது. வெற்றிபெற முடியாது என்று நினைப்பவர்கள் கடைசிப் பரிட்சைக்கு முன்னதாக நின்று கொண்டதாக அறிவித்து விட்டு, மறு ஆண்டு பரிட்சைக்கு உட்காருவார்கள். தனது நண்பன் நன்றாக எழுதாமல் நின்றுவிடப் போவதாக சொன்னதும், அவனிடம் இரக்கங்காட்டித் தோழமை காரணமாக, தானும் அத்துடன் நின்றுவிடப் போவதாக

அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அண்ணா அவர்கள் நன்றாகப் படித்து, முதலாவதாகத் தேர்ச்சி பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தும், நின்றுவிட்டது மற்ற மாணவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

நண்பனுக்காகப் பரிவுகாட்டி பரிட்சைக்குப் போகாமல் நின்றுவிட்டாலும் வீட்டிற்குப்போய் என்ன சொல்வதென்று அண்ணா அவர்களுக்குப் புரியவில்லை. இரு நண்பர்களும் கூடி யோசித்தனர். கடைசியாக காய்ச்சல் வந்துவிட்டதால் பரிட்சைக்குப் போகமுடியவில்லை என்று காரணங்காட்ட முடிவு செய்தனர்.

காய்ச்சலை எப்படி வரவழைப்பது? மற்றவர்கள் கல்லூரிக்குப் போனதும் அண்ணாவும் அவரது நண்பரும் குளிக்கும் அறைக்குப் போய் தண்ணீர்க் குழாயைத் திருப்பிட்டு, கீழ் உட்கார்ந்து விடுவார்களாம். தினந் தோறும் இரண்டு மூன்று மணிநேரம் தொடர்ச்சியாக இப்படி உட்கார்ந்திருந்தால், காய்ச்சல் வந்துவிடும் என்று, ஒருவாரமாகியும், அவர்கள் எவ்வளவு முயன்றும், தண்ணீர் குழாயின்கீழ் தவமிருந்தும், காய்ச்சல் மட்டும் வரவில்லை. மாறாக நன்றாகத் தண்ணீர்பட்டு, உடல் 'மினுமினு' வென்று பொலிவுடன் விளங்கியது.

பரிட்சைகள் முடிந்ததும் அண்ணா அவர்கள் வீட்டுக்குத் திரும்பாததுகண்டு, அவர்களுடைய சிற்றன்னை (தொத்தா) அவர்கள் கல்லூரி விடுதிக்கு வந்து, அண்ணாவைத் தேடிப் பிடித்து அழைத்துச் சென்றார்கள்.

மறு ஆண்டு, இருநண்பர்களும் தேர்வில் வெற்றி பெற்றனர்,

முதல் தடவை அண்ணா அவர்கள் எழுதிய இரு பரிட்சைத் தாள்களையும் திருத்திய பேராசிரியர், அந்த நம்பர் மாணவனே பல்கலைக் கழகத்தில் முதலாவதாக வருவன் என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். மற்றப் பரிட்சைகளுக்கு மாணவன் போகவில்லை என்பது பிறகு தான் அவருக்குத் தெரிய வந்ததாம்.

மன்றம், நாள்: 15. 6. 55

## பேசும் ஆண்கள்

இந்த ஆண்கள் இப்படித்தானே! பெண்களிடம் பிரேமை கொண்டுவிட்டால், பித்தமன்றோ அவர்களுக்குப் பிடித்து விடுகிறது. ஒவ்வொரு காதற் கதையும், இந்தச் சுபாவத்தைத் தானே காட்டுகிறது! மலையைச் சுமந்து வரவா, மத கரியை இழுத்து வரவா, மணிவண்ணம் வாங்கித் தரவா, என்ன செய்ய வேண்டும கூறு, உன் கட்டளையை எதிர்பார்த்து நிற்கிறேன்—என்று பேசுவார்களே!

அறிஞர் அண்ணா

## அடிப்படை உண்மை

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது. எதையும் காரணங் கண்டு ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை செயல்களை அழித்தொழிப்பதுதான் ஆகும். முனைப்புடனும் உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும

அறிஞர் அண்ணா

## நடிப்புத் திறமையின் நயம்

நாடகமேடையில் நடிகர்கள் நடித்துக்கொண்டிருக்கும் போது, வாய் தவறிய பொருத்தமில்லாத சில சொற்களும் சில நேரங்களில் வந்து விழுந்துவிடுவதுண்டு. இத்தகைய தவற்றினின்றும் தப்பினார்கள் என்று, மிகச் சிறந்த நடிகர்களில் கூட, ஒருவரையும் சுட்டிக்காட்ட முடியாது. பொதுவாக எல்லா நடிகர்களுமே இந்தத் தவறுக்கு எப்பொழுதேனும் ஒருமுறை இரையாகியேயிருப்பார்கள்.

தவற்றைத் தவறு என்று பொதுமக்கள் புரிந்துகொள்வதற்கு முன்பே, வேறு ஏதேனும் பொருத்தமான சமாதானம் சொல்லித் தப்பித்துக்கொள்வது என்பது, மிகச் சிறந்த ஒருசில நடிகர்களால்தான் முடியும்.

சென்னை ஒற்றவாடைக் கொட்டகையில், "திராவிடன்" வளர்ச்சி நிதிக்காக அறிஞர் அண்ணா அவர்கள் 'சந்திரமோகன்' நாடகத்தை நடத்தினார்கள். அதில் அண்ணா அவர்கள் வழக்கம்போல் 'காகபட்டர்' உறுப்பை ஏற்று நடித்தார்கள்.

காகபட்டரும் அவரது முக்கிய சீடனும் உரையாடும் கட்டம், சீடன் குருவிடத்தில் சில ஐயப்பாடுகளைக் கூறி விளக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றான்.

உரையாடலின்போது காகபட்டர் சீடனைப் பார்த்து, "ஏண்டா, மண்டு! கிருஷ்ணனுக்குப் பதிவிரதைகள் யார் யார்? என்று கேட்கிறார்.

அதற்குச் சீடன் "பாமா, சுமத்திரை..." என்று அடுக்கிக்கொண்டு போகிறான்.

சீடன் ராதை, ருக்மணி பெயரைச் சொல்லுவான் என்று காகபட்டர் எதிர்பார்க்கிறார். அவன் அவர்கள் பெயர்களைச் சொல்லாமல் வேறு யார் யார் பெயரையோ சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்ட காகபட்டர் சீடனை தடுத்து "டேய்! நிறுத்துடா! அவாளெல்லாம் அவருக்கு 'எக்ஸ்ட்ரா' என்று ஆங்கிலச் சொல் ஒன்றை வாய்தவறிச் சொல்லிவிட்டார். நாடகம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் உடனே கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தவற்றினின்றும் தம்மைச் சமாளித்துக் கொள்ள "என்னடா, மண்டு! குரு என்ன புதிதாக ஆங்கிலம் பேசுகிறாரே! என்று பார்க்கிறாயோ!" என்று சீடனைப் பார்த்துக் கேட்கிறார்.

"ஆமாம் சுவாமி! எப்பொழுது எப்படி ஆங்கிலம் கற்றுக்கொண்டீர்கள்?" என்று அவனும் அண்ணாவுக்கு ஏற்றபடி திருப்பிக் கேள்வி கேட்கிறான்.

உடனே காகபட்டரான அண்ணா, "நமது நாட்டுக்கு இப்போ புதிதா பரங்கியான் வந்திருக்காளே பாத்தியோ! அவாள்டேயிருந்து இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாகக் கத்துண்டுவர்ரேன்" என்று விடைகூறி நிலைமையைச் சமாளித்துக்கொள்கிறார்.

சிவாஜி காலத்திலேயே வெள்ளையர்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள் என்ற வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு நிலைமையை அண்ணா அவர்கள் சமாளித்துக் கொண்டார்கள். பிறரால் இவ்வளவு அழகாக இந்த நிலைமையைச் சமாளித்திருக்க முடியுமா? என்பது ஐயப்பாடே!

அறிஞர் அண்ணாவின் நயம்பட்ட நடிப்புத் திறமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மன்றம், நாள்: 1. 7. 55.

## "எனது வாரிசு நீதான்!"

இரண்டாவது வட்டமேசை மாநாடு இலண்டன் மாநகரில் கூடி முடிவு ஏதும் எடுக்காமல், முறிவுற்று முடிந்தவுடன் அதில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதிகள் இந்தியா திரும்பினர். அவர்களில் ஒருவரான சர். ஏ. இராமசாமி அவர்கள் சென்னை வந்து சேர்ந்தவுடன், வட்டமேசை மாநாடு பற்றிய முழு விபரங்களையும் சென்னை மக்களுக்குவிளக்கிச்சொல்ல, சென்னை நேப்பியர் பார்க்கில் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

கூட்டத்திற்கு சர். ஏ இராமசாமி அவர்கள் இசைவு தந்து வந்திருந்தார். அந்தக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்களும் சென்றிருந்தார்கள். சர். ஏ. இராமசாமி அவர்கள் பேசுவதற்கு முன்னால் சிறிதுநேரம் பேசும்படி அறிஞர் அண்ணா அவர்களைக் கூட்டம் கூட்டினோர் கேட்டுக்கொண்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களும் பேச இசைந்து அக்கால வழக்கப்படி ஆங்கிலத்தில் சிறிது நேரம் பேசினார்கள்.

வட்டமேசை மாநாடு முறிவுற்று நாட்டின் தலைவர்கள் இந்தியா திரும்பிய அதே நேரத்தில், வெளிநாடு சென்றிருந்த இந்திய கிரிக்கட் குழுவினர் வெற்றியுடன் திரும்பி வந்திருந்தனர். அறிஞர் அண்ணா அவர்கள் இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் மனதில் வைத்துக்கொண்டு,

"நமது தலைவர்கள் வட்டமேசை மாநாடு சென்று தோல்வியைச் சுமந்துகொண்டு வந்தாலும், கிரிக்கட் குழுவினர் வெற்றி ஏந்திக்கொண்டு வந்துள்ளனர். விவேகிகள் தேடித் தராத புகழை விளையாட்டுக்காரர்கள் தேடித் தந்துள்ளனர்" என்னும் கருத்துப்பட சர். ஏ. இராமசாமி அவர்களை வைத்துக்கொண்டு அஞ்சாமல் அயராமல் கூறினார்கள்.

சர். ஏ. இராமசாமி அவர்கள் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு விளையாட்டுக்காரர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது என்றும், விளையாட்டுக் காரர்கள் ஒரு குறிப்பிட்ட கோட்டிற்குள் நின்றுதான் விளையாடவேண்டும் என்றும் ஆனால் அரசியல் தலைவர்களுக்கு அப்படிப்பட்ட வரையறை ஏதும் இல்லையாதலால் வெற்றியை உறுதியாக எதிர்பார்க்க முடிவதில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.

கூட்டம் முடிந்தவுடன் சர் ஏ. இராமசாமி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் முதுகைத் தட்டிக்கொடுத்து "ஆங்கிலப் பேச்சில் எனது வாரிசு நீயாகத்தான் இருப்பாய்' என்று கூறினார்களாம்.

மன்றம், நாள்: 15. 7. 55

## ஒருதலைக் காதல்

"சூரியனுக்குத் தெரிகிறதா தாமரை தன்னிடம் இலயித்தே மலருகிறது என்ற உண்மை? ஏன் மேகத்துக்குத் தெரியுமா, மயிலின் நடனத்துக்குக் காரணம் தன்னிடம் அப்பறவை கொண்ட காதல் என்று?

அறிஞர் அண்ணா

## ஒரே மேடையில் பேச போட்டியாளருக்கு அழைப்பு

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய பிறகு, நண்பர்களின் தூண்டுதலின்பேரில் சென்னை நகரசபைத் தேர்தலில் ஈடுபடும்படி நேர்ந்தது. பெத்து நாய்க்கன் பேட்டைத் தொகுதியில் காங்கிரசை எதிர்த்து, நகரசபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார்கள்.

காங்கிரசின் சார்பாகப் பாலசுப்பிரமணிய முதலியார் என்பவர் போட்டியிட்டார். அவரும் ஒரு எம். ஏ. பட்டதாரி என்றாலும், அவருக்கு அவ்வளவாகப் பேச வராது. பொதுமேடை என்றாலே அவருக்கு தொடை நடுக்கம் ஏற்பட்டுவிடும். அப்படியே அவர் பேச முயன்றாலும், ஓரிருசொற்கள் திக்கித்திக்கிப் பேசுவார். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களோ, அப்பொழுதே ஈடு இணையற்ற பெரும் பேச்சாளராக விளங்கினார்கள்.

அண்ணா அவர்கள் தேர்தல் கூட்டம் ஒன்றில பேசும் போது, பொதுமக்களைப் பார்த்து, "நகரசபை, நீக்க வேண்டிய குறைபாடுகளையும் செய்ய வேண்டிய 'நிறை பாடுகளையும் எடுத்துச்சொல்லி; நீதிக்குப் பரிந்து பேசிச் செயலாற்ற வேண்டிய இடமாகும். இந்தப் பணியினைப் பேசும் ஆற்றல் படைத்தோரே செயலாற்றமுடியும். எனவே தேர்தலில் போட்டியிடும் எங்களிருவரையும் ஒரே மேடையில் பேசச் சொல்லிப் பார்த்து, யாரைத் தேர்ந் தெடுத்து அனுப்புவது ஏற்றது என்ற முடிவுக்கு நீங்களே

வாருங்கள்'' என்னும் கருத்துப்பட குறிப்பிட்டார்கள். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பொதுமக்களில் சிலர், ஒருநாள் காலை நேரத்தைக் குறிப்பிட்டுச், சிவஞானம் பூங்காவில், தேர்தலில் போட்டியிடும் அண்ணாவும், பால சுப்பிரமணிய முதலியாரும் ஒரே மேடையில் பேசுவார்கள் என்று துண்டு அறிக்கைகள் அச்சடித்து வெளிபடுத்தி விட்டனர்.

துண்டு அறிக்கையில் கண்டபடி குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் சிவஞானம் பூங்காவில் ஏராளமான பொதுமக்கள் கூடிவிட்டனர். அறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். காங்கிரசின் சார்பாகப்போட்டியிட்ட தோழர் பாலசுப்பிரமணிய முதலி யார், அண்ணாவோடு ஒரேமேடையில் பேச அஞ்சிக்கூட்டத் திற்கு வர மறுத்து, எங்கேயோ மறைந்து இருந்துவிட்டார். தேர்தலில் மும்முரமாக ஈடுபட்டு வேலை செய்துவந்த காங்கிரசுத் தோழர்களுக்கு என்ன செய்வதென்று தோன்ற வில்லை. கூட்டத்தினர் ''எங்கே காங்கிரசு அபேட்சகர்''? ''எங்கே பாலசுப்பிரமணிய முதலியார்?'' என்று காங்கிரசுக் காரர்களைப் பார்த்துத் திரும்பத்திரும்பக் கேட்கத் தொடங்கினர். நீண்டநேரமாகியும் காங்கிரசு அபேட்சகர் வராததால் அறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமே கூட்டத் தில் பேசி முடித்தார்கள். மக்கள் மன்றம், அண்ணாவே வெற்றி பெற்றார் என்று தீர்ப்பளித்து வெற்றிமுழக்கம் செய்தது.

நேரே ஆராய்ந்து பார்த்த மக்கள் மன்றம், அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு அளித்தது; ஆனால்நேரே ஆராய்ந்துபார்க்காதவாக்குரிமைச் சீட்டுகள், வேறுவிதமாகப் பிறபாடு தீர்ப்பு அளித்தன!

மன்றம், நாள்: 1. 8. 55.

## இளமைக் குறும்பு கொடுத்த தொல்லை

1935-ஆம் ஆண்டு சென்னை நகரசபை உறுப்பினர் பதவிக்குப், பெத்தநாய்க்கன் பேட்டைத் தொகுதியில், காங்கிரசை எதிர்த்து அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்ட பொழுது, இருசாராரின் தேர்தல் கூட்டங்கள் ஏராளமான அளவில் நடைபெற்றன. பெத்தநாய்க்கன் பேட்டையின் எல்லாப் பகுதிகளிலும் இருசாராரின் கூட்டங்களும் நடைபெற்றன.

காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட தோழர் பால சுப்பிரமணிய முதலியாருக்கு ஆதரவாக சத்தியமூர்த்தி, சீனிவாசராவ், வி. வி. கோபால ரத்தினம் போன்ற தோழர்கள் மிக மும்முரமாக வேலை செய்து வந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் தாழ்த்தப்பட்ட தோழர்கள் அதிகமாக வாழும் பகுதியில், தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசும்போது, "தாழ்த்தப்பட்ட தோழர்களை நான் சமமாக மதிப்பவன். எனவேதான் நீங்கள் சமைத்துப் போட்டஉணவைநான்உங்களோடுசமமாக உட்கார்ந்துசாப்பிட்டேன். இப்பொழுதும் உட்கார்ந்து சாப்பிடப்போகிறேன்.என்னைப்போலகாங்கிரசுத்தலைவர்களும் உங்களைச் சமமாகவா மதிக்கிறார்கள்? இல்லையே! வேண்டுமானால் நீங்கள் சமைத்தஉணவைச்சாப்பிட,அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்கள் உணவை ஒருநாளும் உண்ண மாட்டார்கள்!அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம் அவர்கள்

உங்களை எந்த அளவுக்கு' மதிக்கிறார்கள் என்பதை!" என்னும் கருத்துப்பட பேசிவிட்டுத் தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் வீட்டில் உணவருந்திவிட்டுச் சென்று விட்டார்.

பிறகு காங்கிரசுச் சார்பாக அதே பகுதியில் நடை பெற்ற கூட்டம் ஒன்றில் பேச தோழர் சீனுவாசராவ் அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு தாழ்த்தப்பட்ட தோழர் மீன்குழம்பு ஊற்றிப் பிசையப்பட்ட சோற்றை ஒரு சட்டியில் எடுத்துக்கொண்டு வந்து, தோழர் சீனுவாசராவ் அவர்களிடம் நீட்டிச் சாபபிடும்படியும், சாப்பிட்டால்தான் தங்களை அவர் சம மாக மதிப்பதாக ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறி னார். மீன் குழம்பின் வாடையையே அதுவரையில் நுகராத சீனுவாசராவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவரைச் சாப்பிட்டுக் காண்பிக்கும்படி கூட்டத்தினர் வற் புறுத்தத் தொடங்கினர். கூட்டம் குழப்ப நிலை அடைந் தது. சைவ உணவு சமைத்துப் போட்டால் வேறோர் நாள் வந்து சாப்பிடுவதாக வாக்களித்துச் சென்றாராம். தாங்கள் சமத்துவ நோக்கம் கொண்டவர்கள்தாம் என்பதைத் தாழ்த்தப்பட்ட தோழர்களுக்குக் காண்பிக்க வேண்டி, வேண்டா வெறுப்போடு வேறு வழியில்லாமல், தோழர் சீனுவாசராவும் பிற காங்கிரசுக்காரர்களும் வேறோர்நாள் போய்ச் சைவ உணவைத் தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டுக் காட்டினார்களாம்

அறிஞர் அண்ணா அவர்களின் 'இளமைக்குறும்பு' காங் கிரசுக்காரர்களை இப்படிப்பட்ட புறக்கணிக்க முடியாத தொல்லைகளுக்கு ஆளாக்கிற்று!

மன்றம், 15.8.55.

## போட்டிபோடாப் பொறுமைப் பண்பு

பொதுவாக அரசியல் உலகில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ அல்லது நிலைக்கோ போட்டியும் மோதுதலும் ஏற்படுமாயின், எப்படியேனும் மோதுதலைத் தாண்டி, போட்டியில் வென்று அந்த இடத்தையோ அல்லது நிலையையோ பிடிக்கவேண்டும் என்பது தான் பெரும்பாலோருடைய பண்பாக இருந்து வருகிறது. போட்டியும் மோதுதலும் ஏற்படுமாயின், பிறர்க்கு விட்டுக்கொடுத்துவிட்டு விலகி நிற்கும் பண்பு மிகமிகச் சிலரிடத்தில்தான் காணப்படுகிறது. இந்த அரிய பண்பு அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் மிகவும் தலைசிறந்து விளங்குவதை யாரும் எளிதில் கண்டுகொள்ளலாம்.

எதையும் போட்டி போட்டுக்கொண்டு கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் அறிஞர் அண்ணா அவர்களிடம் எப்பொழுதும் காணப்பட்டதில்லை. தம்மை ஒருவர் முந்த விரும்புகிறார் என்றால், அதற்கு இடங்கொடுத்து ஒதுங்கி நிற்பாரே ஒழிய போட்டி போட்டுக்கொண்டு முந்த ஒரு நாளும் ஒருப்பட்டதில்லை.

இட நெருக்கடிக்கிடையே இடந்தேடும் பண்பு, எந்த வகையிலும் அறிஞர் அண்ணா அவர்களிடம் எப்பொழுதும் தலை தூக்கியதில்லை. பொதுவாகப் புகைவண்டியில் இட நெருக்கடி மிகவாக இருந்தால், புகைவண்டியைத் தவறவிட்டாலும் விடுவார்களே ஒழிய இடித்துப்புடைத்துக்கொண்டு

இடந்தேடும் பண்பு அவர்களிடத்தில் இருப்பதில்லை எந்தத் துறையில் இடநெருக்கடி ஏற்பட்டாலும் அண்ணா அவர்கள் இந்தப் பண்பைத்தான் கடைபிடிப்பார்கள்.

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் கொள்கைக்கும் மக்களாட்சிப் (ஜனநாயகப்) பண்பிற்கும் முரணாகத் திருமணம் என்ற ஒரு 'ஏற்பாட்டைச்' செய்துகொண்டபோது, திராவிடக் கழகத்தை வலுக் கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டும் என்று கட்சியில் பலர் துடியாய்த் துடித்தபோது, தாம் மோதுதலையும் போட்டா போட்டி முறையையும் விரும்பவில்லை என்றும், அமைதியான முறையில் தேவையானால், புதிய அமைப்பை உருவாக்கி வளர்ப்பதையே தாம் விரும்புவதாகவும் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகக் கூறி விட்டார்கள். "போட்டியில் திராவிடக் கழகத்தைக் கைப்பற்றினோம்" என்ற நிலையைவிட "கொள்கைகளைத் தனியே நின்று காப்பாற்றினோம்" என்ற நிலை ஏற்படுவதையே அண்ணா அவர்கள் விரும்பினார்கள்.

உலகில், பொதுவாக, ஒரு அமைப்பில் இருசாரார்க்கிடையே வேற்றுமை ஏற்பட்டால், பெருமபான்மையினரிடத்தில் அமைபபை விட்டுவிட்டுச் சிறுபான்மையினர் வெளியேறுவதுதான் இயல்பான வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ அந்த இயல்பான வரலாற்றையே மாற்றி அமைததார்கள். திராவிடக் கழகத்தை சிறுபான்மையோரிடத்தில் விட்டுவிட்டு அதிலிருந்த பெரும்பான்மையோர், அமைதியான முறையில் வெளியேறித் தனி அமைப்பைத் தங்களுக்குத் தாஙகளே காணும்படியான நிலையை உருவாகக அறிஞர் அண்ணா அவர்களால்தான் முடிந்தது. இவற்றிற்கெல்லாம் காரணம் அறிஞர் அண்ணா அவர்களிடம் காணப்படும் போட்டி போடாப் பெருமைப் பண்பு ஆகும.

மன்றம், நாள்: 1.9.55

## பாடுவதில் தேறவில்லை

அறிஞர் அண்ணா அவர்கள் பாட்டுப் பாடினார்கள்— அதுவும் பொதுமக்கள் முன்னிலையில் மேடையில் பாடினார்கள் என்றால், பலரும் வியப்படையவே செய்வர். ஏனெனில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு இசைபாட அவ்வளவு இனிமையாக வராது என்பதைப் பலரும் நன்கு அறிவர். அப்படியிருந்தும் அண்ணா அவர்கள் மூன்று தடவைகள் துணிவோடு பாட்டுப் பாடிக் காண்பித்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் 1943-ஆம் ஆண்டில் 'சந்திரோதயம்' நாடகம் எழுதி, முதல் முயற்சியாக அவரே நடித்துப் பார்ப்பதற்கு, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரம் என்ற பேரூரைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு முயற்சி வெற்றிகரமாக முடியவே பிறகு பிற ஊர்களிலும் அவர்கள் நடிக்க ஆரம்பித்தார்கள். வழக்கமாக நடித்து நடிப்புக்கலையில் தேர்ந்த மிகச்சிறந்த நடிகரைப்போல் நடிக்கும் ஆற்றல், அறிஞர் அண்ணா அவர்களிடம் உண்டு என்பதைப் பலரும் அறிவர். அண்ணா அவர்கள் நடிப்பில் தேறினார்கள், ஆனால் பாட்டுப் பாடுவதில் தேறவில்லை.

அண்ணா அவர்கள் 'சந்திரோதயம்' நாடகத்தில் பலரோடு சேர்ந்தும், தனியாகவும் மூன்று ஊர்களில் பாடிப் பார்த்தார்கள். அவர்களே உணர்ந்தார்களோ அல்லது

அவரது 'இசை இனிமை'யைக் கேட்டவர்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டார்களோ, தெரியவில்லை, பாடுவதைப் பிறகு நிறுத்திவிட்டார்கள்.

அண்ணா அவர்கள் பாட்டுப் பாடும் அரிய காட்சியைக் கண்ட ஊர்கள் திருவத்திபுரம், சென்னை, திருச்சி ஆகிய மூன்று ஊர்கள்தாம்.

மன்றம், நாள்: 15.9.55

## உள்ளம் உருக்குவது கவிதை

சிந்தித்தால் உரையாற்றலாம். சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும் தான் கவிதையாற்ற முடியும் தாம் கண்டு உள்ளம் நெகிழ்ந்தவற்றை மற்றவர்கள் கண்டு நெகிழும் வண்ணம் அள்ளித் தருவது தான் கவிதை.

அறிஞர் அண்ணா

## ஓட்டை வேண்டாம்

நீங்கள் கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. துணிவுடன் நீங்கள் செயலாற்றினால் மட்டும் போதாது. பல நூற்றாண்டு காலமாக உங்கள் உள்ளங்களிலே புகுந்து கொண்டுள்ள "ஓட்டைகளை அகற்ற முன் வரவேண்டும். பகுத்தறிவு தங்கு தடையின்றி அங்கு ஆட்சி செலுத்த வேண்டும்."

அறிஞர் அண்ணா

## ஐயப்பாட்டிற்கு ஆளான நிலைமை

1946—ஆம் ஆண்டிலோ அல்லது 1947—ஆம் ஆண்டிலோ ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளத் திருச்சிக்குப் போக வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. புகைவண்டியில் ஏற எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார்கள்.

அன்றே திருச்சிக்குப் புறப்படத் திட்டமிட்டு, முன் கூட்டியே முதல் வகுப்பில் தங்களுக்கு இடங்கள் ஒதுக்கி வைத்துக்கொண்டிருந்த அண்ணாவின் நெருங்கிய நண்பர்கள் சிலர், எதிர்பாராத விதமாகத் தங்கள் பயணத்தை நிறுத்திக் கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டது அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டதும் முதல் வகுப்பு டிக்கட்டுகளை அண்ணாவிடம், கொடுத்துவிட்டு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும்படியாகச் சொல்லி விட்டுச் சென்று விட்டார்கள்.

அண்ணா அவர்கள் பயணத் துணையாக அழைத்துச் சென்றிருந்த காஞ்சித் தோழர் சி.வி. இராசகோபால் அவர்களோடு, வேறு யாரையேனும் நண்பர்களை அழைத்துக் கொள்ளலாம் என்று கருதி புகைவண்டி நிலையத்தில் வேறு யாரேனும் இருக்கிறார்களா என்று பார்த்தபொழுது, அண்மையில் காலஞ்சென்ற தோழர் எம்.எச். முகைதீன் அவர்கள் திருச்சிக்குப் போக வந்தார். அண்ணா அவர்கள் அவரையும் முதல் வகுப்புக்கு அழைத்துக் கொண்டார்கள்.

தோழர் முகைதீன் அவர்கள் பழைய இரும்பு வியாபாரியாக இருந்ததால், துருப்பிடித்த ஒரு தகரப் பெட்டியைக் கையில் வைத்திருந்தார். அத்துடன் அவர் முதல் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார்.

படாடோபமற்ற தோற்றத்தில் அறிஞர் அண்ணா அலங்கோலமான தோற்றத்தில் தோழர் சி.வி. இராச கோபால், (அவர்து தோற்றத்தைப் பற்றித்தான் எல்லோர்க்கும் தெரியுமே) அழுக்கடைந்த உடையோடு, தகரப் பெட்டியுடன் தோழர் முகைதீன் ஆகிய மூவரும் முதல் வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த டிக்கட்டுப் பார்வையிடுவோர் அனைவர்க்கும் தனித்தனியாக ஐயப்பாடு ஏற்பட்டது. ஐயப்பட்ட ஒவ்வொருவரும் அறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்திருந்த வண்டியில் ஏறி டிக்கட்டு கேட்கவும், அண்ணா டிக்கட்டுகளைக் காட்டவும், அவர்கள் பார்த்துவிட்டு இறங்கிப்போகவும் ஆன நிகழ்ச்சிகள் வண்டி புறப்படும் வரையில் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தனவாம்.

புகைவண்டி செங்கற்பட்டுச் சந்திப்பில் போய் நின்ற போது, தோழர் முகைதீன் அவர்கள் தாம் முதல் வகுப்பில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதையும் மறந்துவிட்டு, வழக்கம்போல், புகைவண்டி நிலையத்தில் ஒரு அணாத் தேநீர் விற்பவனை விளித்துத் தேநீர் கேட்டாராம். முதல் வகுப்பில் உட்கார்ந்துகொண்டு ஒருவர் ஒரு அணாத் தேநீரை விளித்துக் கூப்பிடுகிறாரே, இவர் டிக்கட்டு வாங்கியிருப்பாரோ!'' என்று ஐயப்பட்டுக்கொண்டு ஒரு பார்வையிடுவோர் வண்டியில் ஏறி, ஒருவரிடமும் டிக்கட்டு இருக்காது என்ற எண்ணத்துடன் மூவரையும் பார்த்து டிக்கட்டு கேட்டாராம். அவர் பார்வையிட்டு விட்டுப் பேசாமல் இறங்கிவிட்டாராம்.

டிக்கட்டு வாங்கவில்லையோ என்ற ஐயப்பாட்டிற்கு ஆளாக வேண்டிய நிலைமை அறிஞர் அண்ணா அவர்களுக்குத் திருச்சி போயச் சேரும் வரையில் ஏறபட்டதாம்.

மன்றம், நாள்: 1.10 55.

## எழுதும் ஆற்றல்

உலகின் சிறந்த எழுத்தாளர்களை எடுத்துக்கொண்டால், ஒவ்வொருவரும் தம் சிறந்த எழுத்தோவியங்களை எழுதுவதற்குத் தமக்கென்று சில சூழ்நிலைகளையும் போக்குகளையும் ஏற்படுத்திக் கொள்பவர்களாகவே இருந்துவரக் காண்கிறோம்.

சிறந்த எழுத்தாளர்களில் சிலர் குப்புறப் படுத்துக் கொண்டு எழுதும் பழக்கத்தையும், வேறு சிலர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு எழுதும் பழக்கத்தையும், மற்றுஞ் சிலர் அட்டாணிக் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்த நிலையில் தொடைமீது ஏட்டை வைத்துக் கொண்டு எழுதும் பழக்கத்தையும், இன்னுஞ் சிலர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மேசையில் ஏட்டை வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும், வேறு சிலர் கீழே உட்கார்ந்துகொண்டு சிறிய சாய்வு மேசையில் ஏட்டை வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும் பொதுவாகக் கொண்டிருக்கக் காண்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு நிலைகளிலும் இருந்து கொண்டு எழுதக் கூடியவர் என்றாலும், உட்கார்ந்து கொண்டு காலின்மேல் காலை மடக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டு ஒரு புத்தகத்தையோ அல்லது அட்டையையோ தொடைமீது வைத்துக்கொண்டு, அதன் மீது தாள்களை

அடுக்கி வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தைத்தான் அவர்களிடம் எப்பொழுதும் பொதுவாகக் காணமுடியும்.

பலரும் எழுத ஆரம்பித்துவிட்டுப், பிறகு சிந்தித்துச் சிந்தித்து மெல்ல விட்டுவிட்டு எழுதுவார்கள். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ எழுதுவதற்கு முன்னால் சிந்திக்க வேண்டியதெல்லாம் சிந்தித்துவிட்டு, எழுதலாம் என்ற எண்ணம் பிறந்தவுடன் மடமடவென்று வரைந்து தள்ளிகொண்டே இருப்பார்கள்; பக்கங்கள் புரண்டு கொண்டே இருக்கும்; பெரும்பாலும் அடித்தல் திருத்தல் இருக்காது மிக விரைவாகப் பேனா நகர்ந்து கொண்டே யிருக்கும்.

கட்டுரைகள், புத்தகங்கள் எழுதுவதென்றால் சிலருக்கு நாட்கள் கணக்கில் திங்கள்கள் கணக்கில் ஆகும். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களுக்கு எல்லாம் மணிகள் கணக்கிலேயே முடிந்துவிடும். ஐந்துமணி நேரம், ஆறு மணி நேரம், எட்டு மணி நேரம் என்ற கால அளவிற்குள் ஒரேயடியாக உட்கார்ந்து கட்டுரைகளோ, நூல்களோ, எழுதித் தள்ளி விடுவார்கள். பெரும்பாலும் இரவு 11 மணி அல்லது 12 மணிக்கு எழுதத் தொடங்கிக் காலை 6 அல்லது 7 மணி வரையில், விடாமல் எழுத நினைக்கும் எல்லாவற்றையும் எழுதி முடித்துவிடுவார்கள். எழுதுவதைப் போலவே படிக்க எண்ணும் நூலை எடுத்து ஒரு சில மணி நேரத்தில் படித்து முடித்துவிடுவார்கள். அரை குறையாகப் படிப்பதோ விட்டுவிட்டுப் படிப்பதோ அறிஞர் அண்ணா அவர்களிடம் காண முடியாத பண்பாகும்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கே உரித்தான அழகான—சீரிய—உயர்ந்த—எளிய—இனிய—பொருள் செறிந்த—நயம் சிறந்த—எதுகை மோனை நிறைந்த நடை, மிக்க எளிதான முறையில், மிக்க விரைவாகத், தொடர்ந்தாற் போல், துவளாமல், தொங்காமல் அறிஞர் அண்ணா அவர்களின் எழுதுகோலினின்றும் வெளிப்படுவது போன்று வேறு யாரிடத்திலும் அவ்வளவு அருமையாகக் காணமுடியாது.

மன்றம், நாள் : 15-10-55.

## சொற்பொழிவு ஆற்றும் ஆற்றல்

"கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்ற திருக்குறளின் இலக்கணத்திற்கு ஒரு தலைசிறந்த சீரிய இலக்கியம் அண்ணா ஆவார்கள்.

"அண்ணா" என்ற சொல் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களாலும், மாணவர்களாலும், பொது மக்களாலும், அன்போடும் — அருமையோடும் — ஆர்வத்தோடும் குறிப்பிடப்படும் — அழைக்கப்படும் சொல்லாக இன்று இருந்து வருகிறது. அந்த அளவுக்கு அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு எல்லோரையும் கவர்ந்திருக்கிறது.

தேன்துளியை விரும்பி வந்து எறும்புகளின் கூட்டம் எப்படி மொய்த்துக் கிடக்குமோ, அப்படி அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்க நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டு வந்து மொய்த்துக் கிடப்பதை எங்கும் காணலாம். தேனைச் சுவைக்கப் பலர்க்கும் எப்படி நா ஊறுமோ, அது போலவே அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்கப் பலர்க்கும் செவியூறுவதைப் பார்க்கிறோம்.

பலகாலமாகப் பல மேடைகளில் பேசிக்கொண்டு வந்தாலும் பலர்க்குக் கவர்ச்சிகரமாகப் பேசும் ஆற்றல் வருவதில்லை. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள்

எடுத்த எடுப்பிலேயே சிறந்த சொற்பொழிவாளர் என்று பெயர் எடுத்துவிட்டார்கள். அவர் பச்சையப்பன் கல்லூரியில் 'கலைமுதியர்' (ஆனர்சு) வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் முதன் முதல் பேச்சு மேடையில் ஏறினார்கள்; அதுவும் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி மேடையில்தான் முதன் முதல் ஏறினார்கள். என்றால், அவரது பேசும் ஆற்றல் எந்த அளவுக்கு அவரோடு இரண்டறத் தோய்ந்து கிடக்கும் இயற்கைப் பண்பாக மிளிருகிறது என்பதை உணரலாம்.

பேச எடுத்துக்கொண்ட பொருளை, எடுத்துக் கொண்ட பொருளிலேயே நின்று, நிரல்பட எடுத்து மொழிந்து, ஐயந்திரிபற விளக்கிடும் ஆற்றலும், எதுகை மோனை போன்ற அணி அழகோடு கூடிய அழகிய சொற்களை இனிய, ஓசையில் எடுத்தியம்பும் பண்பும், கேட்போர் உள்ளத்தில் நகை, வீரம், இரக்கம், அழுகை போன்ற ஒன்பது வகைச் சுவைகளையும் கிளர்ந்திடும் தன்மையும், இடையிடையே உவமைகளையும், கதைகளையும் கோர்த்திடும் அழகும், ஏற்றத்தாழ்வான குரலோடு மோதாமல்—முட்டாமல்—தயங்காமல்—தள்ளாடாமல்—தட்டுத் தடுமாறாமல் விரைவுபடாமல் ஆற்றொழுக்கென சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடும் பான்மையும், காரண காரியவிளக்கங்காட்டிவாதிடும்சிறப்பும், எளிமை—அருமை—மேன்மை—கண்ணியம்—நாகரிகம் ஆகிய அரிய பண்புகளைக் கடைப் பிடிக்கும் பாங்கும் அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் ஒன்று திரண்டு காணப்படுவது போல் வேறு யாரிடத்திலும் காணமுடியாது. அறிஞர் அண்ணா அவர்களின் குரலோசை யாழ்—குழல்—நாயனம்—மகுடி ஆகியவற்றின் ஓசைகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்தாற் போன்ற

இனிமையுடையதாகும். அவரின் குரலோசை நயமே பலரைத் தன்பால் ஈர்த்து நிறுத்திவிடும்.

சொற்பொழிவு ஆற்றும் ஆற்றலில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒப்பானவர்களோ எடுப்பானவர்களோ தமிழகத்தில் எவரும் இல்லை; இந்தியத் துணைக் கண்டத்தில் இருப்பார்களா என்பதும் ஐயப்பாடே!

மன்றம், நாள்: 1-11-55

## விழாமலே உடையும்

அழுத்திக் பிடிக்கிற காரணத்தினால் பாத்திரம் உடையாது என்று அவர்கள்கருதுகிறார்கள். இன்னும் சற்று அதிகமாக அதனை அவர்கள் அழுத்திப் பிடித்தால், அழுத்திப் பிடிக்கப் பிடிக்க அது கீழே விழாமல் கையிலேயே உடைந்து போகும்.

அறிஞர் அண்ணா

## ஓயக் கூடாது

பத்தாண்டுகளுக்கு முன்னால் சாதிமுறை சமுதாயத்தைப் பிடித்து உலுக்கி வந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் சாதிமுறை கொடுமையின் சின்னமாகவே விளங்கியது. அடுத்த பத்தாவது ஆண்டில் அது அழிந்தொழியக் கூடும். அது வரை நாம் ஓய முடியாது.

அறிஞர் அண்ணா

## உரையாடும் ஆற்றல்

இருவரோ, மூவரோ அல்லது பலரோ ஓரிடத்தில் கூடியிருக்கும்போது, கூடியிருப்போரின் கவனத்தை ஈர்க்கும் உரையாடல்கள் நடத்தி, கூடியிருப்போரை மகிழ்வித்துப், பொழுதுபோவதே தெரியாமற் செய்யும் அரும் ஆற்றல் மிகச் சிலரிடத்தே மட்டும் அமைந்திருக்கக் காண்கிறோம். அப்படிப்பட்ட பண்பும், ஆற்றலும் எவ்வளவுதான் முயன்று பார்த்தாலும் பலர்க்கு வருவதேயில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் இயல்பாகவே மிகச்சிறந்த உரையாடற்காரர் என்பதை அவரோடு நெருங்கிப் பழகுபவர்கள் நன்கு அறிவார்கள்.

சிலர் எங்கும், எப்பொழுதும், எவரோடு கூடியிருக்கும் போது, சிறந்த உரையாடற்காரர்களாகக் காட்சியளிப்பார்கள். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களோ, குறிப்பிட்ட சில நெருங்கிய நண்பர்களுடன் கூடியிருந்து உரையாடுவதைத்தான் எப்பொழுதும் விரும்புவார்கள். பலரோடு கூடியிருக்கும்படியான நிலைமை ஏற்பட்டாலும், குறிப்பிட்ட சில நெருங்கிய நண்பர்களைக் கூட்டிக்கொண்டு தனிமையான இடத்திற்குச் சென்று இருந்து உரையாடி மகிழ்வார்கள்.

அறிஞர் அண்ணாவின் உரையாடல் கேட்கக் கேட்க இனிமையாகவே இருக்கும். எவ்வளவு நேரமானாலும், மணிக்கணக்கில், நாட்கணக்கில் ஆனாலும், தெவிட்டவே

தெவிட்டாது. அண்ணாவின் உரையாடல் கேலி கிண்டல் நிறைந்ததால், நகைச்சுவை மிக்கதாய்ச் சிறிதளவு பொழுது போக்கானதாகவும், பெரிதளவு பயனறிவு பயப்பதாகவும் விளங்கும்.

அண்ணாவோடு கூட இருந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது பொழுது போவதே தெரியாது; பசி நேரம் தவறிப் போகும்; கடமைகளின் நேரங்கள் மாறிப் போகும். முறைப்படி செய்யவேண்டிய அன்றாடக் கடமைகளைப் பற்றிக் கவலைப்படாமல், உரையாடிக் கொண்டே இருப்பார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெரும்பாலும் பகல் நேரம் இரவாகவும், இரவு நேரம் பகலாகவும் மாறிவிடும். அதாவது இரவிலே நீண்ட நேரம் விழித்துக் கொண்டும், பகலிலே நீண்ட நேரம் உறங்கிக் கொண்டும் இருப்பார்கள். நண்பர்களைக் கூட்டிவைத்துக் கொண்டு இரவு நேரத்தில் நீண்டநேரம் உரையாடுவார்கள். சில வேளைகளில் பொழுதுகூட விடிந்துவிடும். கூடியிருக்கும் நண்பர்கள், உறக்கம் வரவர, அப்படி அப்படியே இருந்த இடத்திலேயே படுத்து உறங்கி விடுவார்கள். கடைசி ஒரு நண்பர் விழித்துக்கொண்டு இருக்கும் வரையில், அண்ணா அவர்கள் உரையாடிக் கொண்டிருப்பார்கள். அந்த நண்பரும் அவரையறியாமலேயே உறங்கத் தொடங்கிவிடுவாரே யானால், அண்ணா அவர்கள் வேறு வழியின்றி கண்ணை மூடிக்கொண்டு உறங்க முயலுவார்கள்; அப்பொழுதும் அவருக்குத் தூக்கம் வருவதில்லை. பொழுது விடிய விடியத் தான் அண்ணா அவர்களுக்குத் தூக்கமும் மெல்ல வந்து கொண்டிருக்கும்.

பேசும் ஆற்றல், எழுதும் ஆற்றலைப் போலவே உரையாடும் ஆற்றலிலும் அறிஞர் அண்ணா அவர்கள் தலை சிறந்து விளங்குபவர் ஆவார்கள்.

மன்றம், நாள் : 15-11-55

## சிறந்த நடிகர்

அறிஞர் அண்ணா அவர்கள் சிறந்த பேச்சாளர்—எழுத்தாளர்—உரையாடற்காரர் என்று மட்டும் பேர் பெற்றவரல்லர்; அவர் சிறந்த நடிகர் என்றும் பேர்பெற்றவராவார்.

அறிஞர் அண்ணா அவர்களின் நடிப்பைக் காணும் வாய்ப்பைப் பெற்ற நடிகர்களான என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர், எம். எம். தண்டபாணி தேசிகர், டி. கே. சண்முகம், எம். ஆர். ராதா, கே. சாரங்கபாணி, கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி போன்றவர்களும், பெரியார் ஈ. வெ. இராமசாமி மணவாள ராமானுசம், டி. செங்கல்வராயன் போன்றவர்களும் பிறரும் பலபடப் பாராட்டிப் போற்றியுள்ளார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் இளம் வயதிலிருந்தே நாடகத்திலும், நடிப்பிலும் மிக்க அக்கறை கொண்டு, அவற்றிலே பெரு விருப்புச் செலுத்தி வந்தவராவார். அவர் சிறுவயதில் உடன் பழகும் பள்ளிச் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு, மாட்டுக் கொட்டிலில் நாடகம் நடத்துவதுண்டு. எந்தத் தெருக் கூத்து ஆனாலும், எந்த நாடகம் ஆனாலும் அவற்றைப் பார்க்க அவர் தவறுவதேயில்லை.

கை கால்களை ஆட்டி, ஓடியாடிக் குதித்து நடிக்கும் பழக்கத்தை அண்ணா அவர்களிடம் காண முடியாது.

அண்ணாவின் கண்களும், முகமும் மட்டும்தான் நடிக்கும்; சில வேளைகளில் கை அசையும். இனிமையான குரலில், தெளிவான சொற்கள், அழகுபட வந்து விழுந்துகொண்டே யிருக்கும். குரலில் தேவையான அளவுக்கு ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். பேச்சு நடைகளில் பார்ப்பனீய நடை—பாகவதர் நடை — பண்டிதர் நடை — பாமரர் நடை—வேதாந்தி நடை—குருமார் நடை—அரசன் நடை—வீரன் நடை எல்லாம் அண்ணா அவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடு.

நடிகனுடைய தரத்தை உயர்த்தப் படித்தவர்களும் பொது நாடக மேடையில் தோன்றலாம் என்பதையும், அரசியல் தலைவர்களாய் இருந்தாலும் நாடகம் நடிப்பது இழுக்காகாது என்பதையும் நல்ல கருத்துள்ள சீர்திருத்த நாடகங்கள் தேவை என்பதையும், தமிழகத்தில் நிலை நாட்டிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கே முக்கியமாக உரியதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'சந்திரோதயம்' 'சந்திர மோகன்', 'நீதிதேவன் மயக்கம்', 'போர்வாள்' ஆகிய நாடகங்களில் இதுவரையில் நடித்துள்ளார்கள்.

மன்றம், நாள் : 1-2-56

## உலகப் பொது மொழி

நமது தாய் மொழியான தமிழ், உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்.

அறிஞர் அண்ணா

## அண்ணா ஆச்சாரியார் அறிமுகம்

இருபதாண்டு காலத்திற்கு முன்பு அன்பர் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் ஒருவரையொருவர் நேர்முகமாகக் கண்டு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. சென்னை ஒய்.எம்.சி.ஏ. விவாத அரங்கு ஒன்றிறகு அன்பர் ஆச்சாரியார் தலைமை வகிக்க, அறிஞர் அண்ணா அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டுசொற்பொழிவாற்றினார்கள். அதுதான இருவர்க் கிடையேயும் ஏற்பட்ட முதல் அறிமுகம். என்றாலும, அந்த அறிமுகம் அன்பர் ஆச்சாரியாரின் நீடித்த நினைவில் பதிந்திருக்கத் தக்கதாக அமையவில்லை.

அண்மையில், அதாவது 28-1-56இல், அறிஞர் அண்ணா அவர்களும், அன்பர் ஆச்சாரியார் அவர்களும் ஒருவரை யொருவர் நேர்முகமாகக் கண்டு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த அறிமுகம நினைவில் இருத்தத்தக்க அறிமுகமாக அமைந்தது என்னலாம்.

சென்னை தமிழ்க்கலை மன்றத்தைச் சார்ந்த தோழர் சுப்பையா அவர்களின் 'தமிழகம்' மாளிகையில், இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழிபற்றிய முடிவு எடுக்க, கூடிய சர்வ கட்சிகளின் வட்டமேசை மாநாட்டில் ஆச்சாரி யாரும், அண்ணாவும் கலந்து கொண்டார்கள். மாநாடு முடியும்வரையில் அண்ணா அவர்களை ஆச்சாரியார்

அறிந்துகொள்ளவில்லை. யாரோ ஒருவர் என்ற முறையில் தான் அவருடன் உரையாடல் நிகழ்த்தினார்.

மாநாடு முடிந்து கலைந்து போகும்போது, நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள், அண்ணா அவர்களையும், இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் ஆச்சாரியார் அருகே அழைத்துச் சென்று அறிமுகம் செய்துவைக்க முயன்றார்.

"இவர்தான் அண்ணாதுரை" என்று தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆச்சாரியாரிடம் கூறினார். அந்தச் சொற்றொடர் ஆச்சாரியார் காதில் அவ்வளவு சரியாகப் படவில்லை. "யாரு" என்று ஆச்சாரியார் கேட்டார். "இவர்தான் அண்ணாதுரை" என்று தோழர் ம. பொ. சிவஞானம் சற்று உரத்த குரலில் கூறினார். உடனே ஆச்சாரியார் பெருவியப்புற்று, மூக்கின்மேல் சுட்டு விரலை வைத்துக்கொண்டு, "இவரா? இவரா அண்ணா துரை?" என்று வியப்புணர்வு தோன்றக் கேட்டார். பக்கத்தி லிருந்தவர்கள் "ஆமாம! ஆமாம!" என்று கூறினர். மீண்டும் ஆச்சாரியார் "இவரா? அண்ணதுரையா? அண்ணாதுரை என்றால், ஒருபிரம்மாண்டமான, ஒரு பயங் கரமான மனிதராக இருப்பார் என்றுதான் இதுவரையில் நான் எண்ணிக்கொண்டிருந்தேன்!" என்றார்.

பிறகு தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் நெடுஞ்செழியனைச் சுட்டிக்காட்டி, "இவர்தான் நெடுஞ்செழியன்!" என்றார். ஆச்சாரியார் நிமிர்ந்து பார்த்துவிட்டு, "இவர் நெடுஞ்செழியன், சரி! இவர் அண்ணாதுரை என்கிறீர்களே!" என்று அண்ணாவைச் சுட்டிக்காட்டி வியப்போடு சிரித்துக்கொண்டு கேட்டார். பக்கத்திலிருந்த ஒருவர், "இவரைப் படத்தில் பார்ப்பதற் கும் நேரில் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக் கிறது" என்றார். ஆச்சாரியார் "நான் படத்தில்கூட இவரைப் பார்த்ததில்லை. காதால்தான் இவரைப் பற்றி

ரொம்ப ரொம்ப கேட்டிருக்கிறேன்! சுப்பையா பிள்ளை போன்றவர்கள் அடிக்கடி இப்படிக் கூட்டங்கள் கூட்டினால் தானே ஒருவரையொருவர் தெரிந்து கொள்வதற்காவது வாய்ப்பு ஏற்படுகிறது!'' என்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் இறுதி வரையில் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டே ஆச்சாரியார் முன்னிலையில் நின்றார்கள்.

இறுதியாக அண்ணா அவர்கள் "பிறகு பார்க்கிறோம்; போய் வருகிறோம்!'' என்று ஆச்சாரியாரிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்கள்.

மன்றம், நாள் 15-2-56

## அது ஒன்றே பயன் தரும்

எவ்வளவு கட்டிடங்கள் கட்டினாலும், விஞ்ஞானக் கூடங்கள் அமைத்தாலும், புதிய ரெயில் பாதைகள் போட்டாலும, புது பூங்காக் கள் அமைத்தாலும் கல்விச் செல்வம இல்லாவிடில் அவை பயன் தரமாட்டா.

அறிஞர் அண்ணா

## துணையாக்கும் கல்வி

போட்டியும் பொறாமையும், பொச்சரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நமது பாதையில் நாம் நேராக நடந்து செல்ல நமக்குத் துணையாக இருக்கக் கூடியது கல்வி போல் வேறொன்றும் இல்லை.

அறிஞர் அண்ணா

## எளிய வாழ்க்கை

அறிஞர் அண்ணா அவர்கள், பள்ளி—கல்லூரி ஆகிய வற்றில் படித்த அந்த நாட்களிலும் சரி, பொதுப்பணியில் இறங்கித் தொண்டாற்றி வரும் இந்த நாட்களிலும் சரி ஆடம்பரமற்ற மிகமிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வருபவராவார்கள்.

அறிஞர் அண்ணாவை நேரில் காணாமல் அவரின் அறிவையும், ஆற்றலையும் மட்டும் கேள்விப்படுவோர்கள் முதலில், அவர் ஒரு கம்பீரமான—ஆடம்பரமான—மிடுக் கான தோற்றமுடையவராக இருப்பார் என்றுதான் தம் மனதிற்குள் எண்ணிக்கொள்வார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அறிவும் ஆற்றலும் அற்றுக், கூழை மட்டை, பேயத்திக்கொம்பு, முருங்கைமிலாறு, தாழங்காய் ஆகியவற்றின் வரிசையிலே வைத்து எண்ணப்படக்கூடிய சிலர், நாட்டுக்கான தலைவர்கள் தாமே என்று சொல்லிக் கொண்டு ஆடம்பரமாகத் திரிவதைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட மக்கள், அறிவிலும் ஆற்றலிலும் மிகஉயர்ந்து விளங்கும் அறிஞர் அண்ணா அவர்கள் மிக்க ஆடம்பரமான தோற்றமுடையவராகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொள்வது இயல்பாகிவிட்டதே ஆகும். அப்படிப் பட்டவர்கள் அண்ணாவை நேரில் காணும்போது, தம்முடைய எண்ணத்திற்கு நேர்மாறாக அவர் தோற்ற

மளிப்பதைக்கண்டு திடுக்கிட்டுத் திகைத்து மலைத்துப் போய் நின்று விடுகின்றனர். ஆச்சாரியாருக்கே அந்த நிலை ஏற்பட்டதென்றால், மற்றவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

எளிமை — இனிமை — பொறுமை— அடக்கம் ஆகிய வற்றிற்கு அரசியல் உலகில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு காட்டவேண்டுமானால், அறிஞர் அண்ணாவைத்தான் குறிப்பிடவேண்டும். தலைமயிரை வாருவதைப் பற்றியோ, ஆடம்பரமான உடைகளை உடுப்பதைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் விரிந்து பரந்த தலைமயிருடன், அழுக்கேறிய ஆடைகளுடன், காலில் செருப்பு இல்லாமல் கையில் சடிகாரம் இல்லாமல் சட்டைப்பையில் பேனா இல்லாமல், (பெரும்பாலான நேரங்களில்) பணப்பை (மணிபர்ஸ்) இல்லாமல்காட்சியளிக்கும் அண்ணாவைத்தான் பெரும்பாலும் பார்க்க முடியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் எளிமையாகவும் இனிமை யாகவும் பழகுவதற்கேற்ற பண்புடையவர்களைத்தான் நண்பர்களாகக் கொள்வார்களே யொழிய தரம்—தகுதி— திறமை பார்த்து நட்பு செய்துகொள்ளும் ஆடம்பரப் பழக்கம் அவரிடம் அறவே கிடையாது.

அண்ணா அவர்கள் கல்லூரியை விட்டு வெளியேறிய பிறகு, வேலைக்கு எதற்கும் போகாமல், பொதுப்பணியில் நாட்டம் செலுத்திக்கொண்டிருந்தபோது அவருக்கு உற்ற நண்பர்களாக உடனிருந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் கள் சின்னக்கண்ணு, கணேசன், இரெங்கநாதன் ஆகியோர் கள். சின்னக்கண்ணு பொடிக்கடை வைத்திருந்தவர்; கணேசன் நாட்டு வைத்தியம் செய்து வந்தவர்; இரெங்கநாதன் இரவு பகலாக இயக்கத் தொண்டு செய்து வந்தவர். அண்ணா உள்ளிட்ட இந்த நால்வரையும்,

சிட்டிகைப்பொடி சின்னக்கண்ணு
கட்டிமாத்திரை கணேசன்
இராப்பட்டினி இரெங்கநாதன்
அலைந்துதிரிகிற அண்ணாதுரை

என்று பெத்து நாய்க்கன் பேட்டையிலுள்ள ஏனைய நண்பர்கள் வேடிக்கையாக அழைப்பார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையில் ஈடுபாடுடையவர்கள் என்பதற்கு, இந்த 'நண்பர் குழாமே' இனிய எடுத்துக் காட்டாகும்.

மன்றம், நாள்: 1. 3. 56.

## தனிப் பண்பாடு

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தவர்களுக்கு ஏற்பட்ட பழக்க வழக்கத்தைத்தான் நாம் பண்பாடு என்கிறோம். அதை வைத்துத்தான் தேசியக் கவி இராமலிங்கம் பிள்ளைகூட 'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கோர் குணமுண்டு' என்று பாடினார். 'தமிழன் என்று ஒரு இனம் உண்டா என்று கேட்காதே? என்ற கருத்தை வைத்துத்தான் அந்த நல்ல கவிஞர் அப்படிப் பாடியிருக்கிறார்.

அறிஞர் அண்ணா

## புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திய விழா

இற்றைக் காலத் தமிழக வரலாற்றில், பொன்னாடை போர்த்தும் விழாக்கள் பலப்பல நடைபெற்று வருகின்றன. அவற்றில் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மிக எழிலுடையதாகவும், பெருமைமிக்கதாகவும், முதன்மை வாய்ந்ததாகவும் முக்கியம் பொருந்தியதாகவும், எல்லோராலும் ஆதரிக்கப்பட்டதாகவும், எல்லாக் கட்சிகளாலும் போற்றப்பட்டதாகவும் அமைந்த ஒரு பெரும் விழா புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திய விழாவேயாகும். அது 1946-ஆம் ஆண்டில் நடைபெற்றது. அந்த விழாவினை வெற்றிகரமாக்க முன்னின்று முயன்ற பெருமையெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

அந்தப் பொன்னாடை போர்த்திய விழாவின்போது, இற்றைக்காலத் தமிழ்ப் புலவர் வேறு யாருக்கும் அளிக்காத வகையில் புரட்சிக் கவிஞர் அவர்களுக்குப்பெரும் பொற்கிழி (பணமுடிப்பு) ஒன்றும் அறிஞர் அண்ணா அவர்களின் பெரு முயற்சியால் அளிக்கப்பட்டது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்ப் பேராசிரியர் வேலையினின்றும் இளைப்பாறிப் பொதுப் பணியில் நேரடியாக இறங்கிய காலையில், அவருக்குப்

பொற்கிழி வழங்க வேண்டும் என்ற எண்ணம் நண்பர்கள் சிலர்க்கு ஏற்பட்டது. நிதி திரட்டும் முயற்சியில் தோழர்கள் கிருட்டினராசு, செல்லப்பர், டி. என். இராமன், ப. கண்ணன் ஆகியோர் தீவிர பங்கு கொண்டனர். 1945-ஆம் ஆண்டில் திருச்சியில் கூடிய திராவிடக் கழக மாநாட்டில் அந்த முயற்சிக்கு ஆதரவு தரும் வகையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. எனினும் நிதி திரட்டும் முயற்சி பாராட்டத்தக்க வகையில் அவ்வளவாக வெற்றிபெற வில்லை. பிறகு நிதிக்குழுவினர் அறிஞர் அண்ணா அவர் களின் முழு ஆதரவையும், முழுஒத்துழைப்பையும் நாடினர். அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குச் செய்திடும் சிறப்பு தமிழுக்கு—தமிழகத்திற்கு—திராவிடத் திற்கு—திராவிட இயக்கத்துக்குச் செய்திடும் சிறப்பு என்று கருதி முழுமூச்சோடு பணியாற்றத் தொடங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்கு நிதி சேர்த்திடும் பணியில் இறங்கியிருந்தது பெரியார் இராமசாமி அவர்களுக்கு விருப்பமில்லை. அந்த முயற்சியையே வெறுத்தார். அதனால் அண்ணா அவர் களையும் வெறுக்கத் தலைப்பட்டார். பெரியாரின் சினம் மூண்டு எழுந்தாலும், சீரிய பணியினைச் செய்கிறோம்—கடமையைச் செய்கிறோம் என்ற உணர்வில் அறிஞர் அண்ணா பெரியாரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பணியாற்றினார்கள். பெரியார் அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் மாறுபாடு ஏற்படக் காரணமாக இருந்தவை களில் புரட்சிக் கவிஞருக்கு நிதிசேர்த்த முயற்சியும் முக்கிய மான ஒன்றாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் சில தினங்களுக்குள் ஏறத்தாழ இருபத்தினாலகு ஆயிர ரூபாய் சேர்த்துப் பொன்னாடை போர்த்தும் விழாவையும், பண முடிப்பு

அளித்தலையும் செய்தார்கள். விழா காங்கிரசு, கம்யூனிஸ்ட்டு, சோசியலிசுட்டு, நீதிக்கட்சி, திராவிடக் கழகம் ஆகிய பல்வேறு கட்சிகளின் ஆதரவில், பல்வேறு கட்சிக் கொடிகளுடன், சென்னை பச்சையப்பன் பள்ளி விளையாட்டுத் திடலில், ஒளி விளக்குகளால் அழகுபடுத்தப் பட்ட கவர்ச்சிகரமான மேடையில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. நாவலர் பாரதியார் அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார். அறிஞர் அண்ணா அவர்கள் கவிஞருக்குப் பொற்கிழி அளித்தார்கள். தமிழகத்தின் தலைசிறந்த எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சொற்பொழிவாளர்கள் அத்துணைப் பேரும் கலந்து கொண்டு புரட்சிக் கவிஞரைப் பாராட்டினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வெற்றிகரமாக்கிய குறிப்பிடத்தக்க பணிகளில், புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திய விழாவும் ஒன்றாகும்.

மன்றம், நாள் 15-3-56

## அந்தச் சிரிப்பொலி!

இரவு மணி இரண்டு! அனைத்தும் அனைக் காததுமான நிலையில் ஆரணங்கு தான் பெற்ற செல்வத்தைப் பக்கம் படுக்க வைத்து துயிலு கிறாள். அந்தப் பசும்பொன் முகத்தினிலே, பாலும் நிலவும பாங்காகக் குழைத்துப் பொலிவு அளிக்கிறது. தூங்கும் நிலை! எனினும் கலகல வெனச் சிரிக்கிறது! கேட்டதுண்டா? கண்ட துண்டா, அந்தக் காட்சி, அந்தச் சிரிப்பொலி யைக் காட்டிலும் சுவைமிகு ஒலியினை யாழும் குழலுமா எழுப்பிடும?

அறிஞர் அண்ணா

## அண்ணாவைப்பற்றி அழகிரி

அறிஞர் அண்ணா அவர்கள் பொதுத் தொண்டில் இறங்கி இயக்கப்பணி செய்யத் தொடங்குவதற்கு முன்னால், இயக்கத்தில் ஈடும் எடுப்பும் அற்ற சிறந்த சொற்பொழிவாளராய் இயக்கத்தவராலும் பொது மக்களாலும் பெரிதும் விரும்பப்படும் பேச்சில் வல்லவராய்ப், புகழும் பெருமையும் பெற்றவராய், தாமே சிந்தித்துச் சொல்லும் அஞ்சா நெஞ்சினராய் விளங்கியவர் காலஞ்சென்ற பட்டுக் கோட்டை கே வி. அழகிரிசாமி ஆவார்கள்.

இப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்க மக்கள் திரண்டு ஓடுவதைப் போல், அந்த நாட்களில் அஞ்சாநெஞ்சர் அழகிரிசாமி அவர்களின் பேச்சைக் கேட்க மக்கள் விழுந்தோடுவார்கள்.

இயக்க வளர்ச்சியிலே அக்கறையும், கொள்கையைப் பரப்புவதிலே ஆர்வமும் கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் பின்னை நாட்களில் எப்படிப் பெரியார் இராமசாமி அவர்களுக்கு உறுதுணையாக விளங்கினார்களோ, அப்படியே அழகிரிசாமி அவர்கள் முன்னை நாட்களில் பெரியார் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் இயக்கப்பணியில் இறங்கி வேலை செய்யத் தொடங்கியகாலை, பெரியார் இராம சாமி அவர்களைப்போலவே தோழர் அழகிரிசாமி அவர்களும்

அண்ணாவைப் பெரிதும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்தார்கள். நாளடைவில் அண்ணா அவர்களை சுற்றிப் பெருமையும் புகழும் பெருமளவுக்கு வட்டமிடத் தொடங்கவே, அந்த நிலை பெரியார் அவர்களுக்கு எப்படி உள்ளூர மனப்புழுக்கத்தைத் தந்ததோ, அப்படியே தோழர் அழகிரிசாமி அவர்களுக்கும் உள்ளூர மனப்புழுக்கத்தைத் தந்தது. அந்த மனப்புழுக்கம், அண்ணாவை வெறுக்கும்படி அவரைச் செய்துவிட்டது எனலாம். கடலூர் மாநாட்டிலும், தூத்துக்குடி மாநாட்டிலும் அண்ணாவின்மீது தாம் கொண்ட பகைமையுணர்ச்சியை வெளிப்படையாகவே காட்டிக்கொண்டார். ஆனால் அண்ணா அவர்கள் தம் இயல்புக்கு ஏற்றபடி அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இருந்து வந்தார்கள்.

அழகிரிசாமி அவர்கள் மரணப்படுக்கையில் கிடக்கும் போதுதான், அண்ணாவின் அரிய பண்பாடுகளையும், அருமை பெருமைகளையும் உணர்ந்தார்; அவற்றை வாய் விட்டு சொல்லிவிட்டார். அதுவரையில் பெரியாரை உற்ற நண்பராகவும், அண்ணாவைப் படுஎதிரியாகவும் கருதிவந்த அழகிரிசாமி அவர்கள் மரணப் படுக்கையில் கிடக்கும்போது தான், தன் கருத்தை மாற்றிக் கொண்டார்.

அழகிரிசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் கிடக்கும் போது, அவரால் அதுகாறும் உற்ற நண்பராகக் கருதப்பட்ட பெரியார் அவர்கள் எவ்வித உதவியும் செய்ய முன்வராமலிருக்கும் நிலையில், அழகிரியால் படுஎதிரியாகக் கருதப்பட்ட அண்ணா அவர்கள், தான் உதவிசெய்ய ஓடோடியும் வந்தார்கள். சென்னையில் அண்ணா அவர்கள் தாம் நாடகம் ஆடியதன்மூலம் திரட்டிவைத்திருந்த ரூபாய் எண்ணூற்றுக்கு மேற்பட்ட தொகையை, அழகிரி அவர்களுக்குக் கொடுத்து உதவியதோடு, தம்மைக் கூட்டத்திற்குக் கூப்பிடுவோர் நூறு ரூபாயைத் தோழர் அழகிரி

சாமி அவர்களுக்கு அனுப்பிவிட்டுத் தம்மைக் கூட்டத்திற்குக் கூப்பிட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்திருந்தார்கள். அந்த வகையில் ரூபாய் அறுநூற்றுக்கு மேல் அழகிரியிடம் போய்ச் சேர்ந்தது. நோய்வாய்ப்பட்டு வறுமையில் கிடந்து உழன்று கொண்டிருந்த அழகிரி அவர்களுக்கு, அண்ணாவின் உதவி பெருத்த ஆறுதல் அளித்தது.

தோழர் அழகிரிசாமி அவர்கள் இறந்துபடுவதற்குச் சிலநாட்களுக்கு முன்பு தோழர் நெடுஞ்செழியன் அழகிரி சாமியைக் காண தஞ்சை சென்றிருந்தார். அதுபோது தோழர் அழகிரிசாமி, மரணப் படுக்கையில் கிடந்து, கண் கலங்கிய வண்ணம் அவரிடம் கூறிய சொற்கள்: "ஆம், தம்பீ! நான் யாரை நண்பனாகக் கருதவேண்டுமோ, அவனை என் எதிரியாகக் கருதினேன்; யாரை என் எதிரியாகக் கருதவேண்டுமோ அவரை நண்பனாகக் கருதினேன்; ஆபத்துக்காலத்தில் தானே நண்பனின் தன்மையை அறிய முடியும் என்கிறார்கள்; அத்தகைய நண்பன் அண்ணாதுரை உருவத்தில் எனக்குத் தோன்றுவான் என்பதை இதுவரையில் நான் உணராமல் இருந்துவிட்டேன்; அது என தவறு தான்! நான் குடித்தேன, ஆகவே கெட்டுப் போய்விட்டேன் என்கிறாராம் பெரியார்! எனது பலக்குறைவின் நிழலில் நின்றுகொண்டு தம் மகிழ்ச்சியைக்கட்டி மகிழ்கிறார்கிழவர்! மகிழட்டும்!. அண்ணாதுரையின் மீதுதான் எனக்கு என்ன கோபம்? அப்படி ஒன்றுமில்லை அவன் இயக்கத்தைவிட்டு ஒதுங்கிச் செல்கிறானே என்பதுதான் எனக்கு வருத்தம்! அண்ணாதுரை கண்டெடுக்கமுடியாத கருத்துக் கருவூலத்தின் பெட்டகம்! அவனுக்கு நான் கைமாறு செய்யப் போகிறேன்! என் இதயத்தில் பொங்கிவழியும் அன்பைத் தான் நான் காணிக்கையாகத் தந்ததாக நீ அவனைக் காணும் போது சொல்லு!" என்பவையாகும்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் பண்பு அறிஞர் அண்ணா அவர்களிடம் எந்த அளவுக்கு மிளிருகிறது என்பதை மேற்கண்டவற்றிலிருந்து உணரலாம்.

மன்றம், நாள்: 1. 4. 56

# கறுப்புச் சட்டைப் படை

"கறுப்புச் சட்டைப் படை" என்ற பெயரில் தொண்டர் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற தீர்மானம், முதன் முதல், 1945-ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற திராவிடக் கழக மாநில மாநாட்டில்தான் நிறைவேற்றப் பட்டது.

அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் அறிஞர் அண்ணா அவர் களேயாவார்கள், கழகத் தொண்டர் படைநிறுவுவது பற்றிப் பெரியார் இராமசாமியும் அறிஞர் அண்ணாவும் கலந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, தொண்டர் படைக்கு எந்த நிறச் சட்டையை ஏற்படுத்தலாம் என்ற பேச்சு எழுந்தது. அப்பொழுது மஞ்சள் காங்கிரசின் நிற மாகவும், சிவப்பு கம்யூனிசட்டின் நிறமாகவும், பச்சை முசுலீம் லீக்கின் நிறமாகவும், ஊதா ராடிக்கல் டெமாக்ர டிக் கட்சியின் நிறமாகவும் பொதுவாக நாட்டினரால் கருதப்பட்டு வந்தன. கழகத்தின் நிறமாக அவை தவிர்த்த வேறொர் நிறத்தைத் தேடவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. கழகத் தொண்டர் படைக்குக் கறுப்புச் சட்டையை அடையாளமாகக் கொள்ளலாம் என்றும், இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் காரியால்டியின் விடு தலைப் படை கறுப்புச் சட்டைப் படை என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது என்றும், எனவே கழகத்தின்

தொண்டர் படைக்குக் கறுப்புச்சட்டைப் படை என்று பெயரிடலாம் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணாவின் கருத்து பெரியாருக்கு ஏற்புடையதாகவே பட்டது. பிறகு அது மாநாட்டில் தீர்மான வடிவு பெற்றது.

தீர்மானம் நடைமுறைக்கு வரும்போது, வேறு உருவம் பெறத் தொடங்கிற்று. தொண்டர் படைக்கு என்று ஏற்படுத்தப்பட்ட கருப்புச்சட்டை அடையாளம், கழகத் தோழர்கள் அனைவரும் போட்டுக் கொள்ளவேண்டிய அடையாளமாகப் பெரியாரால் மாற்றப்பட்டது. தீர்மானம் ஒன்று, நடைமுறை வேறாக அமைந்தது. இந்தப் போக்கு அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பொறுக்கி எடுக்கப்படும் தொண்டர் படையினர் மட்டுந்தாம் முறையான கறுப்புச் சட்டை அணியவேண்டுமே யல்லாமல் கழகத் தோழர்கள் அனைவரும் கண்ட கண்டபடி கறுப்புச் சட்டையை அணியக்கூடாது என்பது அறிஞர் அண்ணாவின் கருத்தாகும். போலீசுக்காரன் உடையைப் பிறர் எப்படி அணியக் கூடாதோ, படைவீரனின் உடையைப் பிறர் எப்படிப் போட்டுக்கொள்ளக் கூடாதோ, நீதிபதியின் உடைகளைப் பிறர் எப்படி மாட்டிக்கொள்ளக் கூடாதோ? அப்படியே கறுப்புச் சட்டையைத் தொண்டர் படையினர் தவிர பிறர் அணியக்கூடாது என்ற முறை வேண்டும் என்று அண்ணா அவர்கள் பெரியாரிடத்தில் பலதடவை வாதாடினார்கள். கடமை யுணர்ச்சியுள்ள தகுதிவாய்ந்த கழகத் தொண்டர்மட்டுந்தான் கறுப்புச்சட்டை அணியவேண்டும் என்றும் அந்த வகையில் அதன் மதிப்பு போற்றிக் காப்பாற்றப்படவேண்டும் என்று அண்ணா அவர்கள் கருதினார்கள். இல்லையாயின் கறுப்புச் சட்டையின் மதிப்பு பல வகைகளிலும் குறைக்கப்பட்டுப போய்விடும் என்று அவர்கள் கருதினார்கள். குறிப்பிட்ட பணியைக், குறிப்

—8—

பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் செய்யும்போது தான் கறுப்புச் சட்டை அணியவேண்டுமே தவிர எங்கும் எப்பொழுதும், எந்தப் பணியைச் செய்யுபபோதும் அணியக் கூடாது என்ற வரைமுறை இருக்கவேண்டும் என்றும் அண்ணா அவர்கள் எடுத்துரைத்தார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அண்ணாவின் கருத்துக்களைச் செவி மடுக்கத் தயாராக இல்லை. கறுப்புச் சட்டையைப் போட்டுக்கொள்ள அண்ணா அவர்கள் வெட்கப்படுகிறார் என்று தவறாகக் கருதிக்கொண்டு, பெரியார் அவர்கள், கழகத் தோழர்கள் எல்லோரும், எப்பொழுதும், எங்கும் கறுப்புச் சட்டையைக் கூடுமானவரையில் அணியவேண்டும் என்று அண்ணாவின் கருத்துக்கு எதிரான முறையில வற்புறுத்தி வரத் தொடங்கினார்கள். அந்த முறை அண்ணாவுக்கு அறவே பிடிக்கவில்லை. அணணா அவர்கள் தலைவரின் கட்டுப்பாட்டின் காரணமாக மேடை ஏறிப் பேசும்போது மட்டும் வேண்டா வெறுப்போடு கறுபபுச் சட்டையை அணிந்து வந்தாகள். அதனாலதான் வரையறையற்ற முறையில் கறுட்புச் சட்டையணியும் பழக்கத்தை அண்ணா அவர்கள் மேற்கொள்ளவில்லை; மேற்கொள்ள விரும்ப வில்லை.

கறுப்புச் சட்டைப் படைக்குத் தடை விதிக்கப்பட்ட போது இயக்கத்தில் மிக்க தொடர்பு கொள்ளாமல் அது வரையில் ஒதுங்கி நின்ற அறிஞர் அண்ணா அவர்கள் கறுப்புச்சட்டை அணிந்துகொண்டு ஓடோடியும் கருப்புச் சட்டை மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இது அண்ணாவின் தூய பண்பையும், கடமை யுணர்ச்சியையும் காட்டுவதாகும.

மன்றம், நாள்: 15 4.56.

## 1947 ஆகஸ்டு 15

இந்தியத் துணைக் கண்டத்தை-இந்தியா பாகிஸ்தான் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, அவைகளுக்கு 1947 ஆகஸ்டு 15ல் விடுதலை வழங்குவது என்று பிரிட்டிஷ் வல்லரசு முடிவு செய்து அதனை வெளியிட்டது. காங்கிரஸ் கட்சியினரும், முஸ்லீம் லீகினரும் அந்த முடிவை முழுமன தோடு வரவேற்றனர். நாட்டிலுள்ள பிற பெரும்பாலான அரசியல் கட்சிகளைச் சார்ந்தோரும், பொது மக்களும் இந்தியத் துணைக் கண்டத்திற்குக் கிடைக்கும் விடு தலையை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் தோன்ற வில்லை; திராவிடக் கழகம் மட்டுமே இருந்து வந்தது. கழகத்தினர் எல்லோரும் ஆகஸ்டு 15ஆம் நாளை வரவேற் பதா? அல்லது வெறுப்பதா? என்ற குழப்பமான நிலையில் இருந்தனர். அப்பொழுது திராவிடக் கழகத்தலைவராக இருந்த பெரியார் இராமசாமி அவர்கள், கழகச் செயற் குழுவைக் கூட்டாமல், கழக முன்னணியினர் யாரையும் கலக்காமல், ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொள்ளும்படி அறிக்கை வெளியிட்டு விட்டார்கள்.

ஆகஸ்டு 15ஆம் நாளில் நடைபெறுவதாக இருந்த தெல்லாம், இந்திய ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியம் விலகுவது என்பதும், இந்திய யூனியன் ஆட்சிப் பொறுப்பைப் பெரும்பான்மையான அரசியல் கட்சி

யான காங்கிரசு ஏற்பது என்பதும் ஆகும். இவற்றில் முக்கியமான நிகழ்ச்சி 'வெள்ளை ஏகாதிபத்தியம் விலகுகிறது' என்பதுதான். அந்த நிகழ்ச்சியைப் பொறுத்துத்தான் பிற நிகழ்ச்சிகளெல்லாம். வெள்ளையர் விட்டுப் போகும் பொறுப்பை, ஏற்கும் சூழ்நிலையைக், காங்கிரசைத் தவிர வேறு எந்த அரசியல்கட்சியும் அப்பொழுது உருவாக்கவில்லை. காங்கிரசு பொறுப்பை ஏற்பது என்பது, அப்பொழுது தவிர்க்க முடியாததொரு சூழ்நிலையாகும். ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரசிடத்தில் விட்டுப் போவதா அல்லது வெள்ளையனே தொடர்ந்து இருந்து ஆளுவதா என்பதுதான் அப்பொழுது நிலவிவந்த நிலைமையாகும். இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்த அறிஞர் அண்ணா அவர்கள், 'வெள்ளையர் ஆட்சி வெளியேறுவது' என்பது, உடனடியாக நிறைவேறவேண்டிய தலையாய நிகழ்ச்சியாகும் என்ற அசைக்கமுடியாத முடிவுக்கு வந்தார்கள். காங்கிரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்பது என்பது விரும்பத்தகாததொன்று என்றாலும், அது தவிர்க்க முடியாத தொன்றாக இருந்ததாலும், என்றைக்கேனும் ஒரு நாளைக்கு பிற முற்போக்குக் கட்சிகள் அந்தப் பொறுப்பை தாங்கும் நிலைமை ஏற்பட வழியிருந்த காரணத்தாலும் வெள்ளையர் ஆட்சி வெளியேறுவது எல்லா வகையிலும் வரவேற்க வேண்டியதொன்றே என்று அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணினார்கள்.

மேற்கண்ட அந்த முடிவோடு அண்ணா அவர்கள் சென்னை வந்து, செம்புதாஸ் தெரு, 79 ஆம் எண் கட்டிடத்தில், 30 ஆம் எண் அறையில் இருந்த தோழர் இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன், ப. வாணன் ஆகியோரைக் கலந்தாலோசித்தார்கள். "வெள்ளையர் ஆட்சி வெளியேறுவதிலே நமக்குள்ள மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் கடைசி வாய்ப்பு 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளே

ஆகும். ஆகவே அதனை மகிழ்ச்சிக்குரிய நாளாகவே கொள்ள வேண்டும்'' என்று அவர்கள் அண்ணாவிடம் தெரிவித்தார்கள்.

'ஆகஸ்டு 15 துக்கநாள் அல்ல, மகிழ்ச்சிக்குரிய நாளே' என்ற கருத்தைப் பெரியாரிடம் தெரிவித்து அதற்கான முறையில் அவரிடம் விளக்கந் தந்து, எல்லோரும் கலந்து செய்யும் முடிவு ஒன்றினைக் காணவேண்டும் என்று விரும்பி அண்ணா அவர்கள், பெரியாரிடம் ஒரு நண்பரை இது குறித்துத் தூது அனுப்பினார்கள். பெரியார் அவர்கள், தாம செய்துகொண்ட முடிவை மீண்டும் பரிசீலிக்க இணங்க வில்லை, என்று அண்ணாவுக்கு விடை வந்து சேர்ந்தது. பிறகு வேறு வழியில்லாமல் அறிஞர் அண்ணா அவர்கள் 'ஆகஸ்டு 15 மகிழ்ச்சிக்குரிய நாளே' என்னும் கருத்துப்பட நீண்டதொரு கட்டுரை எழுதி "திராவிட நாடு" இதழில் வெளியிட்டார். அதில், சமூகத் தலைவர் தம்மீது குற்றங் கண்டு நடவடிக்கை எடுக்க முனைந்தாலும், அதனை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் முடிவே சரியான அறிவுக்கொத்த முடிவு என்று ஆன்றோராலும் சான்றோ ராலும் அன்றும் போற்றப்பட்டது; இன்றும் போற்றப் படுகிறது

மன்றம், நாள் : 1. 5. 56

## பழமையும் தேவை

தேவையுள்ள பழைய எண்ணங்கள் நசித்துப் போய்க் கொண்டிருக்கின்றன! அதே நேரத்தில் புதிய எண்ணத்தைத் நாம கைப்பற்றவும் இல்லை! இடைக்கால நிலையிலேதான் இருக்கின்றோம்.

அறிஞர் அண்ணா

## தூத்துக்குடி மாநாடும் ஈரோடு மாநாடும்

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் வெள்ளையர் ஆதிக்கம் வெளியேறிய நாளாதலால், அது மகிழ்ச்சிக்குரிய நாளே என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூற, காங்கிரசார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதால் அது துக்கத்திற்குரிய நாளே என்று பெரியார் இராமசாமி அவர்கள் கூற அப் பொழுது கழகத்தோழர்கள் கருத்தில் இரு வேறு பகுதியின ராகப் பிரிந்தனர். பெரியார் கூறினாலும் அதைப் பற்றிச் சிந்தித்து அதில் தெளிவு பெற வேண்டும் என்று கருதின வர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் கூற்றையும், பெரியார் கூறிவிட்டதால் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதினவர்கள் பெரியார் அவர்கள் கூற்றையும் ஆதரித்து நின்றனர். அண்ணாவைப் பின்பற்று வோர், பெரியாரைப் பின்பற்றுவோர் என்று இரண்டு பிரிவினராகக் கழகத் தோழர்கள் பட்டும் படாததுமாகப் பிரிந்திருந்தனர்.

1948 இடைப்பகுதியில் தூத்துக்குடியில் திராவிடக் கழக மாநில மாநாடு கூட்டப்பெற்றது பெரியார் அவர் களே முன்னின்று மாநாட்டிற்கான எல்லா ஏற்பாடு களையும் செய்தார்கள். அண்ணாவும் அவரைச் சார்ந் தோரும் தம்மைக் கவிழ்க்கத் திட்டம்போட்டிருப்பதாகவும், அவர்கள் மாநாட்டிற்கு வந்து குழப்பம் செய்ய இருப்ப தாகவும், அவர்கள் குழப்பம் செய்யும்போது தமமைப்

பின்பற்றுவோர் அடி, உதை ஆகியவைகளை வாங்கிக் கொண்டு அமைதியாக இருக்கவேண்டும் என்றும் பெரியார் அவர்கள் மாநாட்டிற்கு முன்பு பொதுக் கூட்டங்களில் பேசியும், 'விடுதலை'யில் எழுதியும் வந்தார்கள்.

இல்லாத ஒன்றைக்கற்பனை செய்துகொண்டு பேசியும், எழுதியும் வந்த பெரியாரின் போக்கைக் கண்டு மனம் வருந்திய அண்ணா அவர்களும் அவரைச் சார்ந்த பிறரும் மாநாட்டிற்குப் போகாமல் இருந்துவிடுவது மேல் என்ற முடிவுக்கு வந்தனர். மாநாட்டில் கூடியிருந்த மக்களில் பெரும்பாலோர் அண்ணாவின் வரவை எதிர்பார்த்திருந்த தன்மையும் "அண்ணா ஏன் வரவில்லை?" என்று பலர் கேட்ட கேள்வியும் பெரியார் அவர்களுக்கு பொறாமையையும், எரிச்சலையும், சினத்தையும் மூட்டிவிட்டன. அது காரணமாகப் பெரியார் அவர்கள் மாநாட்டில் பேசும் போது அண்ணாவைக் கண்டவாறு இழித்துக்கூறவும் செய்தார்கள்.

மாநாடு முடிந்ததற்குப் பிறகு பெரியாரைப் பின்பற்றுவோர், அறிஞர் அண்ணாவையும், அவரைப் பின்பற்றுவோரையும் கண்டகண்ட இடங்களில் ஏசவும், தூற்றவும், வெறுக்கவும் தலைப்பட்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் எதையும் பொருட்படுத்தாமல் அமைதியாகக் கடமையை ஆற்றி வந்தார்கள்.

பிறகு 1948 ஆகஸ்டு திங்கள் வாக்கில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மூண்டது. அறிஞர் அண்ணாவும் பிறரும் தீவிரப் பங்கு கொண்டனர். கிளர்ச்சியின் படைத் தலைவராக அண்ணா அவர்கள் பொறுப்பேற்றார்கள். பெரியார் அவர்கள் அண்ணாவிடம் நெருங்கிய தொடர்பும், மிக்க பற்றும் வைக்கமுற்பட்டார்கள்,

அதே ஆண்டில் தூத்துக்குடி மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் வராததனால் ஏற்பட்ட குறையைப் போக்கப், பெரியார் அவர்கள் ஈரோட்டில் தனி மாநில மாநாடு ஒன்றைக் கூட்டி, அதற்கு அண்ணா அவர்களைத் தலைமை தாங்கும்படி செய்தார்கள்.

பெரியாரின் போக்கு அண்ணாவிற்குப் பலதடவைகளில் மனக்கசப்பை உண்டாக்கியிருந்தாலும், கடமையாற்ற கழகம் அழைக்கும் போதெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னணியில் நின்றே பணியாற்றி வந்திருக்கிறார்கள். எனவேதான் தூத்துக்குடி மாநாட்டிற்குக் கண்ணியம் காரணமாகச் செல்லாத அறிஞர் அண்ணா அவர்களை ஈரோடு மாநாடு கடமை காரணமாக வருந்தி அழைத்தது.

மன்றம், நாள்: 15. 5. 56.

## பயங்கரம் இது பயங்கரம்

பூந்தோட்டத்திலே உலவிக்கொண்டு புது மணத்தைப் பெற்று மகிழ்ந்து, ஆடும் மயிலையும், பாடும் குயிலையும், தடாகத்திலே நடமாடும் அன்னத்தையும், கொஞ்சும் கிளியையும் கண்டு களிக்கும் பூவையின் கால்களை மலைப்பாம்பு பின்னிக் கொண்டு இடையே வளைத்து இறுக்கி, அத்துடன் நில்லாமல் அவளுடைய முகத்தருகே தன முகத்தை நிறுத்திச் சீறி, நாவை நீட்டினால் அந்த நாரீமணியின மனம் எப்படி இருக்கும்.

• அறிஞர் அண்ணா

## வடநாட்டில் இந்து முசிலிம் போர்

வடநாட்டில் இந்து-முசிலிம்களுக்கிடையே வேற்றுமை யுணர்வும், பிணக்கும், போரும் எந்தவகையில் மூண்டெழுந்து காணப்படுகின்றன என்பதை, அறிந்து கொள்ளும் வாய்ப்பு அறிஞர் அண்ணா அவர்களுக்கு, அவர் பெரியார் இராமசாமி அவர்களோடு வடநாட்டுக்குச் சுற்றுப்பயணத்திற்குச் சென்றிருந்தபொழுது ஏற்பட்டது.

உண்ணுவது, நீர் அருந்துவது, உறைவது, வாணிகம் செய்வது ஆகியவற்றில் இந்துவும்-முசிலிமும் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு, வேற்றுமை பாராட்டித் தனித்தனியே அவற்றைத் தத்தமதாகக் கொண்டிருந்த தன்மையை அண்ணா அவர்கள் கண்டபோது, படித்தறியாப் பண்பறியாப் பாமர மக்களிடத்தில் மட்டுமே அந்த நிலைமை நிலவி வருவதாக நினைத்துக் கொண்டார்கள். அந்த நிலைமை பாமரமக்களிடத்தில் மட்டும் நிலவவில்லை அது படித்தவர்களிடத்திலும் உண்டு என்பதை அவர்கள் ஜும்மா மசூதிக்குச் செல்லும்போது அறிந்து கொண்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுப்பயணம் செய்த போது அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கும் பொருட்டு இரண்டு எம். ஏ. படித்த மாணவர்களை தோழர் எம். என். ராய் அண்ணாவுடன் அனுப்பி வைத்திருந்தார். அவ்விருவரில் ஒருவர் முசிலிம், மற்றொருவர் இந்து. இருவரும

தோழர் ராயின் முற்போக்குக் கருத்துக்களில் ஊறித் திளைத்தவர்கள். மசூதியின் மண்டபத்தில் சிலபல ஓட்டைகள் காணப்பட்டன. அவற்றிற்கான காரணம் என்ன என்பதை அண்ணா அவர்கள் முசிலிம் மாணவரோடு சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது கேட்டார்கள். அதற்கு அந்த முசிலிம் மாணவர் "இந்த ஓட்டைகள் இருந்த இடத்தில் பழைய கால முசிலிம் மன்னர்கள் விலையுயர்ந்த கற்களைப் பதிய வைத்திருந்தனர். அவற்றை யெல்லாம் இந்துக்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அவைகள் பெயர்க்கப்பட்ட இடங்கள் தாம் இப்பொழுது ஓட்டைகளாகத் தென்படுகின்றன" என்று கூறினாராம். சிறிது நேரங்கழித்து இந்து மாணவரோடு வேறு பக்கம் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் வாய்ப்பு அண்ணா அவர்களுக்கு ஏற்பட்டது. அண்ணா அவர்கள் மண்டபத்திலிருந்த ஓட்டைகளைச் சுட்டிக்காட்டி "இந்த ஓட்டைகளுக்கு என்ன காரணம்?" என்று கேட்டார்களாம். அதற்கு அந்த இந்து மாணவர் "இந்த ஓட்டைகள் இருக்கும் இடங்களில் முன்பு விலையுயர்ந்த கற்கள் பதிக்கப் பெற்றிருந்தன. முசிலிம் மன்னர்கள் செல்வமிழந்து வறுமையுற்ற போது அவைகளை யெல்லாம் பெயர்தெடுத்து விற்று வாழத் தொடங்கினார்கள். ஆகையினால் அக்கற்கள் இருந்த இடங்கள் இப்பொழுது ஓட்டைகளாகத் தென்படுகின்றன" என்று விடையிறுத்தாராம்.

படித்த முற்போக்கு எண்ணங் கொண்ட இரு மாணவர்களிடையே, ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து விளக்கம் கூறுவதில், இந்து-முசிலிம் வேற்றுமை யுணர்ச்சி இந்த அளவுக்குக் காணப்படுகின்றது என்றால், மற்ற பாமர மக்களிடத்தில் எந்த அளவுக்கு அது கொழுந்துவிட்டு எரிய வேண்டும் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவு

படித்திக் கொண்டார்களாம். இத்தகைய நிலைமையைப் புரிந்து கொண்ட அண்ணா அவர்கள் பாக்கிஸ்தான் பிரிவினை எப்படியும் ஏற்பட்டே தீரும் என்ற கருத்தையும், அதற்கான முறையில் காணப்பட்ட சூழ்நிலையையும் பெரியாரிடமும் பிறரிடமும் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டினார்களாம்.

மன்றம், நாள்: 1. 6. 56.

## குறித்து வைக்காத குறை

ஒரு மன்னனுடைய மகன் யாரென்று சரித்திர புத்தகங்களைப் புரட்டினால் வரகுணபாண்டியன் மகன் இரண்டாவது வரகுணபாண்டியன் என்று போட்டு, இது இல்லை என்பாரும் உண்டு என்று அடியிலே குறிப்புத்தரும் வகையில் குழப்பமான வரலாற்றை வைததிருக்கிறோம். நம்முடைய தமிழ்ப் பண்புக்கு ஏற்றபடி நம்முடைய அருமை பெருமைகளை நாம குறித்து வைததிருககின்ற பழக்கத்தை நெடுங்காலமாக இழந்து விட்டோம். இன்றைய தினம ரோம்நாட்டு வரலாற்றை நீங்கள் துருவிப் பார்க்க வேண்டுமென்றால் ஜூலியஸ் சீசர் அணிந்து கொண்டிருந்த கால்செருபபின் அளவிலேயிருந்து கிளியோபாட்ரா அணிந்திருந்த காதணிவரை வரலாற்றுக் குறிப்பு உண்டு. ஆனால் தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் பார்க்கவேண்டுமானால், இந்த மண்டலத்திலே ஆண்டு கொண்டிருந்த மன்னன் இன்னாருடைய மகன் என்று கூறுவதற்கு இரண்டு மூன்று வரலாற்று ஆசிரியர்களும், நான்கைந்து, தமிழ்ப் புலவர்களும், பத்துப் பதினைந்து திங்கள் சேர்ந்து உட்கார்ந்தாலும் ஆளுக்கொரு செய்தியைத்தான் தரமுடியுமே தவிர, அத்தனை பேரும ஒத்த கருத்தைத் தர முடியாத ஒரு நிலையிருக்கிறது.

அறிஞர் அண்ணா

## மனச்சான்றுக்கு மாறாகப் போகாமை

1941-ஆம் ஆண்டில், இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, மிகப் பெருஞ்செலவில், மிக ஆடம்பரமான முறையில் செட்டி நாட்டிலும், அண்ணாமலை நகரிலும் கொண்டாடப் பட்டது. இரண்டு இடங்களிலும இயல், இசை, நாடகம், நடனம் போன்ற பல்வேறு அரங்கங்களும், தான தருமங் களும் நடைபெற்றன.

'தான தருமங்'கள் எல்லாம் பெரும்பாலும் பார்ப் பனர்க்கே வழங்கப்பட்டன. அறுபதாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் அறிகுறியாக அறுபது பார்ப்பனர்களுக்கு அறுபது வீடுகள், அறுபது அடுக்கு, வீட்டுச் சாமான்கள், அறுபது அரமி ஆட்டுக்கல்கள், அறுபது பசுமாடுகள் போன்ற இன்னபிறவற்றை இராசா சர் தானமாக வழங்கினார்.

அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை யில், "விடுதலை" இதழின் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்கள். 'பார்ப்பனர்க்குத் தானம் கொடுத்தல்' என்னும் குருட்டு நம்பிக்கையான மூடப்பழக்க வழக்கத் தைக் கண்டிக்க வேண்டும் என்பதோடு, பார்ப்பனரல்லா தார் இயக்கத்தைச் சார்ந்த இராசா சர் சமூகத் துறையில் பார்ப்பனர்க்கு அடிமை போகும் தன்மையையும் வன்மை யாகக் கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் அறிஞர்

அண்ணா அவர்கள் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

அண்ணாமலைச் செட்டியாரின் போக்கைக் கண்டித்து "விடுதலை"யில் தலையங்கம் ஒன்று தீட்டுவது என்று அண்ணா அவர்கள் எண்ணினார்கள். இந்த எண்ணத்தைப் பெரியார் அவர்களிடம் வெளியிட்டார்கள். பெரியார் அவர்களுக்கு அப்பொழுது அண்ணாமலைச் செட்டியாரிடத்தில மிக்க சினம் பொங்கி எழுந்திருந்தது. இராசாசர் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி யார் யாருக்கோ ஏராளமான நிதி வழங்கியதோடு, தேசியப் பத்திரிகைகளுக்கு மிக்க நிதி வழங்கியிருந்தார். "விடுதலைக்கு" ஏதொரு உதவியும் புரியவில்லை. இது பெரியாருக்கு மிக்க சினத்தை மூட்டியது. எனவே அண்ணாவின் எண்ணத்தைப் பெரியாரும் ஆதரித்தார். 'யார் யாருக்கோ கொள்ளை கொள்ளையாகப் பணம் கொடுக்கிறான். பார்ப்பனர்க்கு இலட்சம் இலட்சமாக அள்ளித் தருகிறான் அவனை ஓயாமல் திட்டிக்கொண்டிருக்கிற தேசியப் பத்திரிகைகளுக்கு நன்கொடை தந்திருக்கிறான். நாம் ஒரு பத்திரிகை வைத்து நடத்துகிறோம். தேவையான பொழுதெல்லாம் அவனுக்கு ஆதரவு தருகிறோம். அப்படி இருந்தும், நமது பத்திரிகையைக் கவனிக்காமல் இருக்கிறான் என்றால் என்ன நியாயம்? அவனது அடிமைத்தனத்தைக் கண்டித்து எழுதுங்கள்! என்னும் கருத்துப்பட பெரியார் அவர்கள் அண்ணாவிடம் கூறினார்கள்.

அண்ணா அவர்களும் அண்ணாமலைச் செட்டியாரின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்துத் தலையங்கம் ஒன்று தீட்டினார்கள். தலையங்கம் தீட்டி அச்சேற்றுவதற்குள், எதிர்பாராதவிதமாக இராசாசர் அண்ணாமலைச் செட்டியாரிடமிருந்து "விடுதலைக்கு" என்று ரூ 1000-நன்கொடை 'செக்' வந்து சேர்ந்தது. 'செக்கை'

எடுத்துக்கொண்டு பெரியார் அவர்கள் அண்ணாவிடம்வந்து "பைத்தியக்காரன் இப்பொழுது ரூ. 1000-க்குச் செக் அனுப்பியிருக்கிறான். "கண்டித்துத் தலையங்கம் தீட்டி விட்டீர்களா?" என்று கேட்டார். "முன்பே எழுதிக் கொடுத்துவிட்டேன். அச்சேறும் நிலையில் இருக்கிறது" என்று அண்ணா கூறினார்கள். "அந்தத் தலையங்கம் வேண்டாம். அவனைச் சாதாரணமாகப் பாராட்டி ஒரு தலையங்கம் எழுதுங்கள்" என்று பெரியார் அவர்கள் அண்ணாவிடம் கூறினார்கள். அண்ணா அவர்கள் "அவரது போக்கைக் கண்டித்து நான் எழுதிவிட்டேன். பாராட்டி எழுத என் மனம் இடந்தரவில்லை. வேண்டு மானால் நீங்கள் எழுதுங்கள்; நான் எழுதமாட்டேன்" என்று உறுதியாக விடையிறுத்து விட்டார்கள். பெரியார் அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அண்ணா அவர்கள் பாராட்டி எழுத மறுத்துவிட்டார்கள். பிறகு அண்ணா வின் தலையங்கத்தை நிறுத்திவிட்டுப் பெரியாரே ஒன்று எழுதி வெளியிட்டார்கள்.

மனச்சான்றுக்கு மாறாகப் போகக்கூடாது என்பதிலே அண்ணா அவர்கள் எவ்வளவு அழுத்தமாக இருந்து வருகிறார்கள் என்பதற்கு, இது சிரியதொரு எடுத்துக் காட்டாகும்.

மன்றம், நாள்: 15-6-56.

## இணையாத எதிரிகள்

சாதியும் ஜனநாயகமும் ஒன்றாக இருக்க முடியாது. மூடநம்பிக்கையும் விஞ்ஞானமும் இணைந்து வாழ முடியாது. பல ரூபத்திலுள்ள கொடுங் கோன்மைகளும், சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்ற கருத்துக்களும் ஒத்திருக்கவே முடியாது.

அறிஞர் அண்ணா

## நண்பருக்காகத் தன்னலம் துறக்கும் தன்மை

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆனர்சு வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது, சம்பந்தம் என்பவர் அண்ணாவோடு ஒரே வகுப்பில் படிக்கும் மாணவராகவும், அண்ணாவுக்கு உற்ற நண்பராக வும் விளங்கி வந்தார். இருவரும் இணைபிரியா நண்பர் களாக இருந்து ஒரே அறையில் உறைவது, ஒன்றாக இருந்து படிப்பது, ஒன்றாகச் சேர்ந்து கல்லூரிககுச் செல்வது, ஒன்றாகச் சேர்ந்தே எல்லாக் கடமைகளையும் செய்வது ஆகிய பழக்கங்களைக் கொண்டிருந்தனர்.

சம்பந்தம் என்ற அந்த நண்பர் இயல்பாகவே அச்சம், நாணம் வெட்கம், கூச்சம் ஆகிய பண்புகளுக்கு இரையான வர். அவர் எங்கே போவதானாலும், எந்தச் செயலைச் செய்வதானாலும் அண்ணா அவர்கள் தாம் அவருக்கு உற்றதுணை, அவருடைய இயல்பு இரங்கத்தக்கதாக இருந்த காரணத்தால்தான், அண்ணா அவர்கள் அவருக்கு உற்ற நண்பராகவும், உறுதுணையாகவும் விரும்பியிருந்து வந்தார்கள்.

அண்ணா அவர்கள் பொதுவாக ஊண் உறக்கமின்றி விழுந்து ஓயாமல் படித்துக் கொண்டேயிருக்கும் பழக்கத் தைக் கொண்டிருந்தவரல்லர். தேர்வுக்குச் சில நாட் களுக்கு முன் இரண்டொருமுறை பாடப் புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பது, அந்த அளவிலே பாடங்களை உள்வாங்

திலே பதிய வைத்துக் கொள்வது, யாதொரு அச்சமோ மனக்கலக்கமோ இல்லாமல் தேர்வு எழுதி வெற்றி பெறுவது, என்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார். அவரது நண்பரோ நேர்மாறான பழக்கத்தைக் கொண்டிருந்தவர். ஓயாமல் படித்துக் கொண்டே இருப்பார். அச்சத்தோடு தேர்வு எழுதுவார். அண்ணாவைவிடக் குறைவான எண்கள் பெறுவார்.

இருவரும் தம்மை நல்ல முறையில் ஆயத்தப்படுத்திக் கொண்டு முடிவுத் தேர்வாகிய ஐந்தாவது ஆனர்சுத் தேர்வில் கலந்துகொண்டு எழுதினார்கள். மூன்று நாட்கள் அண்ணா அவர்கள் நல்ல முறையில் வெற்றிபெறும் மன உறுதியோடு தேர்வுத தாள்கள் எழுதினார்கள். ஆனால் அவரது நண்பரோ மிகமிக அச்சமுற்று, மனங்கலங்கி, தேர்வுத் தாள்களைச் சரிவர எழுதவில்லை. மேற்கொண்டு மூன்று நாட்கள் எழுத வேண்டியிருந்தது. ஆனர்சு வகுப்பில் படிப்பவர் எல்லாத் தாள்களையும் எழுதாமல், மறு ஆண்டில் எழுதுகிறேன் என்று கேட்டுக் கொண்டால்தான் மறு ஆண்டுத் தேர்தலில் கலந்து கொள்ளப் பல்கலைக் கழகத்தார் அனுமதிப்பார்கள். அதன்படி தேர்வில் கலந்து கொள்வது என்று முடிவு செய்தார். அத்தோடு நிற்காமல் அவர் அண்ணா அவர்களைப் பார்த்து "நீயும் மேற்கொண்டு தேர்வு எழுத வேண்டாம் நின்றுவிடு. இருவரும் சேர்ந்து அடுத்த ஆண்டு எழுதுவோம். நீ இப்பொழுது எழுதி வெற்றி பெற்றுவிட்டால், அடுந்த ஆண்டு என்னோடு சேர்ந்து படிக்கவோ தேர்வு எழுதவோ வேறு யாரும் துணையிருக்க மாட்டார்கள். எனவே நின்றுவிடு என்று பலவாறாக வற்புறுத்தத் தொடங்கிவிட்டார். அண்ணா அவர்கள் தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்கான முழுமனவுறுதி தமக்கு இருந்த போதிலும் நண்பரின் வேண்டுகோளுக்கும், வற்புறுத்தலுக்

கும் இணங்கி தேர்வு எழுதாமல் நின்று கொண்டார். அண்ணா அவர்கள் எழுதின தாள்கள் மட்டில் எண்கள் போடப்பட்டு வந்த போது அவற்றில் ஒன்றில் மட்டும் மாநிலத்தில் முதல்வராகக் காணப்பட்டார். மீண்டும் மறு ஆண்டில் எல்லாத் தாள்களையும் எழுதி இருவரும் வெற்றி பெற்றார்கள்.

நண்பரின் நலத்திற்காகவும் விருப்பத்திற்காகவும், தன்னலத்தையும் துறந்து நடக்கும் தன்மை, அறிஞர் அண்ணா அவர்களிடத்தில்எவ்வளவு சிறப்புற விளங்கிற்று—விளங்குகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சி சிறியதொரு எடுத்துக் காட்டாகும்.

மன்றம், நாள் : 1-7-56

# தமிழும் ஆங்கிலமும்

தமிழைப் பாடமொழியாகவும் பயிற்சி மொழியாகவும் ஆக்கி, அதனால் ஆங்கில அறிவு குறையும் என்று கருதினால் ஆங்கில அறிவை அதிகப்படுத்த என்ன வழிகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து, ஆங்கில அறிவும் கெடாமல் தமிழ் உரிமையும் பாதுகாக்கப்படக் கூடிய அளவில் நம்முடைய கல்வித் திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

அறிஞர் அண்ணா

## ஆங்கிலப் பேராசிரியரைப் பற்றி

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, இப்பொழுது அக்கல்லூரியின் முதல்வராக இருக்கும் தோழர் ஆர். கிருட்டிணமூர்த்தி (அய்யர்) அவர்கள் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து வந்தார். அவரது நடை உடை நடிப்புகள் எல்லாம் இப்பொழுது எப்படியிருக்கின்றனவோ அப்படியே தான் அப்பொழுதும் இருந்து வந்தன.

பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி என்றால், அவரைச் சில மாணவர்கள் அச்சத்தோடு தொலைவிலேயே நின்று பார்ப்பார்கள். சிலர் அச்சத்தைச் சிறிது விட்டு அடக்கத்தோடு நெருங்கி நின்று பார்ப்பார்கள், வேறு சிலர் அச்சத்தை அறவே விட்டு அடக்கத்தோடு அவரிடம், நெருங்கிப் பழக முற்படுவார்கள். மற்றுஞ் சிலர் அடக்கத்தையும் விட்டுத் தோழமையுணர்ச்சியோடு நெருங்கிப் பழகுவார்கள். பொதுவாக இந்த நான்கு வகையில் அவருக்கும் மாணவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படும்.

பச்சையப்பன் கல்லூரியில் முதல் வகுப்பில் சேரும் மாணவர்கள், நான்காம வகுப்பை முடிப்பதற்குள் மேற் சுட்டிக்காட்டப்பட்ட நான்கு வகையில் பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி அவர்களோடு தொடர்பு கொள்வது இயல்பாக இருக்கும். காரணம் என்னவென்றால், கல்லூரிக்கு முதன் முதலாக வந்து முதல் வகுப்பில் சேரும் மாணவர்கள் பேராசிரியரின் அதட்டல், உருட்டல்,

மிரட்டல் முதலிய 'தர்பார்' நடவடிக்கைகளைக் கண்டு அச்சப்பட்டுப் போவார்கள். முதல் வகுப்பில் அவர் நடத்தும் தர்பார் நடவடிக்கைகள், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது—ஆனர்ஸ் வகுப்புக்களில் முறையே சிறிது சிறிதாகக் குறைந்தே காணப்படும். இறுதி வகுப்பு மாணவர்களோடு அவரும் சர்வ சாதாரண மாகப் பழகுவார்; மாணவர்களும் ஆண்டுக்கு ஆண்டு அச்சத்தைக் குறைத்துக் கொண்டு தோழமையுணர்ச்சி யோடு பழக முற்பட்டு விடுவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள், இந்த நிலையைப் பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி அவர்கள்முன்னிலையிலேயே ஒருமுறை உணர்த்திவிட்டார்கள். அண்ணா அவர்கள் இறுதி வகுப்பை முடிக்குந்தறுவாயில், ஆசிரியர்களுக்கு அண்ணாவும் பிற மாணவர்களும் சேர்ந்து நடத்திய தேநீர் விருந்துக் கூட்டமொன்றில், அண்ணா அவர்கள் பேசும் போது, ஒவ்வொரு ஆசிரியரைப்பற்றியும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு வரும்போது, பேராசிரியர் கிருட்டிண மூர்த்தி அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்படி நேர்ந்தது. அப்பொழுது அண்ணா அவர்கள் "பேராசிரி யர் கிருட்டிணமூர்த்தி முதல் வகுப்பில் சர்வாதிகாரியாக வும், இரண்டாவது வகுப்பில் குடியாட்சிக்கோனாகவும், மூன்றாவது வகுப்பில் குடியரசுத் தலைவராகவும், நான் காவது வகுப்பில் தோழராகவும் விளங்குகிறார்" (Prof. Krishnamurthy is Dictator in the I.U.C., Constitutional Monarch in the II U.C, Republican president in the III U.C. and Comrade in the IV U.C.) என்று குறிப்பிட்டார் கள். கூடியிருந்த எல்லோரும் ஆரவாரம் செய்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்; பேராசிரியர்கிருட்டிணமூர்த்தி அவர் களும் வழக்கம் போல் எல்லோரோடும் சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார்கள்.

மன்றம், நாள் : 15-7-56

## புகைவண்டி போயிற்று!—பிறகு டிக்கட்டு வந்தது

பொதுவாகப் போட்டி போட்டு மல்லுக்கு நிற்பது, இடித்துப் புடைத்துக் கொண்டு மேல்விழுந்து செல்வது, நெருக்கடியில் சிககித் தாக்குவோரைத் தள்ளிக்கொண்டு மேற்செல்வது போன்ற பண்புகளை அறிஞர் அண்ணா அவர்களிடம் அறவே காணமுடியாது.

அடிபிடி சண்டையோ, மக்கள் கூட்டத்தின் நெரிசலோ காணப்பட்டால் அண்ணா அவர்கள் அவற்றில் தாம் சிக்கிக் கொள்ளாமல், ஒதுங்கித் தப்பிப் போகவே பார்ப்பார்கள். புகைவண்டியிலோ, அல்லது நிலவூர்தியிலோ (பஸ்ஸிலோ) கூட்டம் மிகவாக இருந்து நெரிசல் காணப்பட்டால், அவைகளில் ஏறாமல் நின்று விடுவார்களே ஒழிய, எப்படியும் போய்த் தீருவது என்று இடித்துப் புடைத்துக்கொண்டு ஏறுவது கிடையாது.

அண்ணாவின் இந்தப் பண்பு பெரியார் அவர்களுக்குத் துவக்கக் காலத்தில் புலப்படவில்லை. பெரியாரும் அண்ணாவும் சிலபொழுது சேர்ந்து சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது உண்டு. அந்த நாட்களில், நீண்ட தொலைவிலுள்ள புகைவண்டி நிலையத்திற்கு ஒரே முறையாக டிக்கட்டு எடுப்பதைவிட, இடையிலுள்ள சில நிலையங்களில் இறங்கி இறங்கி எடுத்துக்கொண்டு சென்றால், அதன்மூலம் சிறிதளவு கட்டணத் தொகை மிச்சப்படுவது வழக்கம், பெரியாரும், அண்ணாவும் ஒருமுறை ஈரோட்டிலிருந்து

திருச்சி செல்லும்படி நேரிட்டது. சிறிது பணம் மிச்சமாகும் என்று கருதிக்கொண்டு கரூர் வரையில் இருவர்க்கும் டிக்கட்டு வாங்கிக்கொண்டு, கரூரில் இறங்கித் திருச்சிக்கு மீண்டும் வாங்கிக்கொள்ளலாம் என்று பெரியார் எண்ணினார்கள். ஒரேயடியாக திருச்சிக்கே டிக்கட்டு வாங்கும்படியும் கரூரில் இறங்கித் தம்மால் டிக்கட் வாங்க இயலாமற் போகும் என்றும் அண்ணா அவர்கள் பெரியாரிடம் கூறிப் பார்த்தார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அதற்கு இணங்காமல் கரூருக்கே டிக்கட்டு வாங்கினார்கள்.

கரூர் நிலையம் வந்ததும், அண்ணாவிடம் பணத்தைக் கொடுத்துத், திருச்சிக்கு டிக்கட்டு வாங்கும்படி பெரியார் அவர்கள் கூறினார்கள். அண்ணா அவர்கள் டிக்கட்டு வாங்கும் சாளரத்தின் அருகே போய்ப் பார்க்கும்போது மிகவான கூட்டம் இருக்கவே எல்லோர்க்கும் பின்னால் போய் வழக்கப்படி நின்றுகொண்டார்கள். நீண்ட நேரம் ஆகியும் அண்ணாவைக் காணவில்லை என்றவுடன் பெரியார் அவர்கள் எட்டி எட்டிப் பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் டிக்கட்டு வாங்கி அண்ணா அவர்கள் டிக்கட்டு வாங்குவதற்குள் வண்டி புறப்பட மணியடித்தாகிவிட்டது. அண்ணா அவர்கள் டிக்கட்டு வாங்கிக்கொண்டு, புகைவண்டி நிலையத்திற்குள் நுழைவதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது. அண்ணாவும் வரவில்லை, வண்டியும் புறப்பட்டுவிட்டது என்றவுடன் பெரியார் அவர்கள் அவசர அவசரமாகப் பெட்டி, படுக்கை முதலிய சாமான்களைக் கீழே தள்ளிவிட்டுத் தாமும் கீழே குதித்துவிட்டார்கள். பிறகு அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

“ஏன் இவ்வளவு நேரம்? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?” என்று பெரியார் அவர்கள் ஆத்திரத்துடன் அண்ணாமீது சீறிவிழுந்தார்கள்.

"இப்பொழுதுதான் டிக்கட்டு கொடுத்தார்கள்!" என்று அண்ணா அவர்கள் அமைதியாகக் கூறினார்கள்.

"இந்த டிக்கட்டு வாங்க முடியவில்லை உங்களால், இப்பொழுது இரயில் போய்விட்டதே, இனி என்ன செய்வது?" என்று பெரியார் அவர்கள் சினந்து கொண்டார்கள்.

"நான்தான் அப்பொழுதே சொன்னேனே, திருச்சிக்கே டிக்கட்டு எடுங்கள் என்று! நீங்கள்தானே கேட்கவில்லை!" என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

பிறகு வேறு வழியின்றிச் சரூரிலேயே தங்கியிருந்துவிட்டு அடுத்த புகைவண்டியில் திருச்சிகுச் சென்றார்கள். அது முதல் டிக்கட்டு வாங்கும் வேலைக்குப் பெரியார் அவர்கள் அண்ணாவை அனுப்புவதே யில்லையாம்.

மன்றம், நாள் 1-8-56

## தமிழா, தமிழனா?

'தமிழ் வளர்ச்சிக்கழகம்' என்றும் 'தமிழ் வெளியீட்டுக் சழகம்' என்றும் நாம் வைத்துக் கொண்டிருப்பது எல்லாம் 'தமிழ் வளர வேண்டும் என்பதால் அல்ல! தமிழ் வளர்ந்துதான் உள்ளது. 'தமிழன் வளர வேண்டும்' என்பதைத் தான் தமிழ் வளர்ச்சி அடைய வேண்டும்' என்கிறோம். அதாவது 'தமிழ் வளர்ந்த அளவுக்குத் தமிழன் வளரவேண்டும்' என்கிறோம்.

அறிஞர் அண்ணா

## காரியந்தான் பெரிது—வீண் வீரியம் அல்ல!

பெரியார் அவர்கள் தம் காலத்திற்குப் பிறகு திராவிடக் கழகத்தையும் கழகச் சொத்துக்களையும் பாதுகாத்துச் செல்வதற்கு ஆன வாரிசு ஒன்று வேண்டும் என்று கருதியே, தோழியர் மணியம்மையைத் 'திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு' செய்து தேர்ந்தெடுத்துக்கொண்டார் என்பது அவராலேயே வெளியிடப்பட்டது. அத்தகைய வாரிசு ஆவதற்குரிய தகுதியும் திறமையும் தோழியர் மணியம்மையார் அவர்களிடந்தான் இருக்கிறது என்பதோடல்லாமல், அவர்களைத்தவிர வேறு யாரையும் தாம் நம்புவதற்கில்லை என்றும் பெரியார் அவர்கள் தெரிவித்தார்.

'திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு' என்பது அவர் பல காலம் கூறிவந்த சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களுக்கு மாறுபாடான ஒன்று எனபதோடல்லாமல், கழகத்தை நடத்திச்செல்ல தாமே வாரிசு முறையில் ஆள் தேர்ந்தெடுப்பது சனநாயகப் பண்பிற்கு முரண்பாடானதும், சர்வாதிகாரத்தன்மை கொண்டதும் ஆகும் என்று எண்ணி கழகத்திலிருந்த தூய உள்ளம் படைத்த நல்லவர்கள் எல்லாம் கலங்கினார்கள்; கண்ணீர் விட்டார்கள், ஏற்பாட்டை மாற்றிக்கொள்ளும்படி பெரியாரிடம் கெஞ்சினார்கள்; வேதனைப் பட்டார்கள், வெட்கப்பட்டார்கள்,

இந்த நிலையில் அறிஞர் அண்ணா அவர்கள், அரசியல் வாழ்வைவிட்டே விலகி, ஒதுங்கிவிடுவது என்ற முடிவுக்கு வந்து, காஞ்சிபுரம் சென்று தங்கிவிட்டார்கள். கொள்கைப் பற்றுக் கொண்ட பல்லாயிரக் கணக்கான தூய உள்ளம் படைத்தோர் என்ன செய்வது. ஏது செய்வது, எதிர்கால அரசியல் வாழ்வை எப்படி மேற்கொள்வது என்று எண்ணி ஒன்றும் புரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள், தோழர்கள் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத். கே. கோவிந்தசாமி, இரா. நெடுஞ்செழியன் போன்றவர்கள் அண்ணாவிடம் சென்று தங்களுக்கும், பிறர்க்கும் ஏதேனும் பழிப்படராப் பாங்குள்ள வழிகாட்ட வேண்டும் என்று வற்புறுத்தி விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். நீண்ட நேரத் தயக்கத்திற்குப் பிறகு, எலலோரும் சேர்ந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நடப்பதற்கான நேரிய வழி ஒன்று காண சென்னை வந்தார்கள்.

சென்னையில், பவழக்காரத் தெருவிலுள்ள கட்டிடம் ஒன்றில் முக்கியமான தோழர்கள் அடங்கிய தனிக்கூட்டம் ஒன்று கூடிற்று. அதில் அண்ணா அவர்கள் எல்லோரும் திராவிடக் கழகத்தைவிட்டு வெளியேறித் தனிக் கழகம் அமைத்துக் கொள்ளலாம் என்றும், அதுதான் அமைதியை நிலைநாட்டுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் ஏற்றவழி யாகும என்றும் கூறினாாகள். அபபொழுது அண்ணா அவர்களின் கருததை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியாரின் போக்குக்கண்டு வெறுப்படைந்துள்ளவர்கள் ஏராளமாக இருப்பதால் திராவிடக் கழகத்தையும், திராவிடக் கழகச் சொத்துக்களையும் வன்முறையில் ஆகிலும் கைபபற்றியே ஆகவேண்டும என்ற கருத்தைத் தோழர்கள் சம்பத் நடராசன, சிதமையன், கோவிநதசாமி, நெடுஞ்செழியன், மணிமொழியார் போன்ற பலரும் துடி துடிப்புணர்ச்சியுடன் வற்புறுத்தினார்கள். திராவிடக்

கழகத்தைக் கைப்பற்றுவது என்ற முயற்சி வீண்சண்டை சச்சரவுகளிலும் அடிதடிகளிலும், நேரத்தையும், உழைப்பையும், அறிவையும் கழிக்கவேண்டி நேரிடும் என்றும், இரண்டு சாராரையும் அடக்கி ஒடுக்க அரசாங்கத்திற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும் என்றும், மாற்றார்கள் இழித்தும் பழித்தும் ஏளனமாகக் கூற இடம் கிடைக்கும் என்றும், கொள்கைப்பற்றுடையோர் சிறிதுசிறிதாக வெளியேற நேரிடும் என்றும் சொல்லியதோடு, அப்படிப்பட்ட வன்முறைச்செயல்களுக்குத் தாம் தலைமை ஏற்க இயலாது என்றும், வேண்டுமானால் சாதாரண உறுப்பினராக இருக்கிறேன் என்றும் சொல்லிவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் மீண்டும் காஞ்சிபுரம் சென்றுவிட்டார்கள்.

இப்படியாக இரண்டு மூன்று திங்கள்கள் எந்த முடிவும் ஏற்படாமல் கழிந்தன. அந்த இரண்டு திங்கள்களில் ஏற்பட்ட அனுபவம், அண்ணாவின் வழியே ஏற்ற வழியாகும் என்ற முடிவுக்கு ஏனையோரைக் கொண்டுவந்தது, மீண்டும் அண்ணாவை அவர்கள் நாடி அண்ணாவின் கருத்தை முழுமனதோடு ஏற்க இசைந்தனர்.

வன்முறைக்குச் சிறிதும் இணங்காமல், காரியந்தான் பெரிதே ஒழிய வீண் வீரியம் அல்ல என்று அறிஞர் அண்ணா அவர்கள் கொண்ட பெருநோக்கந்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்று செழிப்புற வளர்த்து வருகிறது.

மன்றம், நாள் 15 8.56

## ஆபத்து ஒன்று அகன்றது

1914ஆம் ஆண்டில் சேலத்தில் கூட்டப்பட்ட மாநில மாநாட்டில்தான் "தென் இந்திய நிலவுரிமைச் சங்கம்" என்ற நீதிக்கட்சியின் பெயர் 'திராவிடக் கழகம்' என்று மாற்றப்பட்டது. இந்தப் பெயர் மாற்றத் தீர்மானத்தோடு கழகத்தைச் சார்ந்தவையும், பதவியையும தாங்கியிருக்கக் கூடாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது இந்த தீர்மானங்களை அறிஞர் அண்ணா அவர்கள் தாம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்.

பதவியையும், பட்டத்தையும் துறந்துவிட வேண்டும் என்று போடப்பட்ட தீர்மானம், நீதிக்கட்சியிலிருந்து வந்த பணக்காரர்களுக்கும், பட்டந்தாங்கிகளுக்கும், பதவியாளர்க்கும் பேரிடியாக இருந்தது. அவர்களெல்லாம் திராவிடக் கழகத்தோடு பங்குகொள்ளாமல், நீதிக்கட்சியின பெயரிலேயே இருந்து வரத் தலைப்பட்டனர். அப்பொழுது நீதிக்கட்சியில் தலைவர்கள்தான் இருந்தார்களே ஒழிய, தொண்டர்கள் யாரும் இல்லை. பாடுபடும் தொண்டர்கள் அனைவரும் திராவிடக் கழகத்தில் இணைந்திருந்தனர். எப்படியேனும் திராவிடக் கழகத்தைத் தம் வழிககு மீண்டும் இழுததுக் கொண்டால் தமககு வசதியாக இருககும என்று நீதிக் கட்சித் தலைவர்களில் சிலர் எண்ணினர். அதற்கான முயற்சியையும் அவர்கள் மேற் கொண்டார்கள்.

நீதிக்கட்சியில் தலைவர்களாக இருந்த பொப்பிலி அரசர், செட்டி நாட்டரசர் சர் முத்தையா, காலஞ்சென்ற தோழர் என். ஆர். சாமியப்பா ஆகியோர் நீதிக்கட்சிக்கும் திராவிடக் கழகத்துக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுத்த முயன்றனர். அதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்த திராவிடக் கழகத் தலைவராக அப்பொழுதும்' இருந்துவந்த பெரியார் இராமசாமி அவர்களை நீதிக் கட்சித் தலைவர்கள் அழைத்தார்கள். அந்த அழைப்பை ஏற்று அவர்களைக் காணப் போவதற்கு முன்பு பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடம் அவர்கள் எதற்காகத் தம்மை அழைத்திருப்பார்கள் என்று கலந் தாலோசித்தார்கள். அண்ணா அவர்கள், 'அவர்கள் உங்களைத் தம் வயப்படுத்தத்தான் இப்பொழுது அழைத் துள்ளார்கள். பட்டம் பதவியைத்துறக்கவேண்டும் என்று சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கைவிடும்படி வற்புறுத்தவே உங்களை அவர்கள் அழைத் திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அதற்கு நிதி தருகிறோம், இதற்கு நிதிதருகிறோம் என்று பணத் தாசையைக் காட்டி உங்களைத் தம்வயப்படுத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள் நீங்கள் இதில்தான் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டி நேரிடும். அந்தத் தீர் மானத்தைக் கைவிட நீங்கள் எந்த விதத்திலும் இடம்தந்து விடாதீர்கள். அவர்களுக்கு விட்டுக்கொடுக்கும்படியான நிலைமை ஏதேனும் ஏற்பட்டால், என்னைப் போன்றவர்கள் இயக்கத்தைவிட்டு வெளியேறும்படியான நிலைமை ஏற் படும்'' என்று சொல்லி அனுப்பினார்கள்.

சென்னை காஸ்மோபாலிட்டன் கிளப்பில் மேல்மாடி யில், பொப்பிலி அரசர், செட்டிநாட்டரசர் முத்தையா, இராவ்பகதூர் என். ஆர். சாமியப்பா ஆகியோரைப் பெரியார் அவர்கள் சந்தித்தார்கள். அறிஞர் அண்ணா

அவர்கள் ஊகித்து முன்கூட்டிக் கூறியவாறு நீதிக் கட்சித் தலைவர்கள் பல்வேறு ; துறைகளுக்கு நிதி தருவதாக வாக் களித்து, பட்டம் பதவியைத் துறக்கும் தீர்மானத்தைக் கை விடும்படி பேரம்பேசினர். பணத்தோடுகூடிய நீதிக்கட்சித் தலைவர்களைக் கைவிடுவதா? அல்லது அண்ணா போன்ற தொண்டர்களைக் கைவிடுவதா? என்ற பிரச்சினை பெரியார் உள்ளத்தைக் குடைந்தது. முடிவில் தொண்டர் களைக் கைவிடக்கூடாது என்ற முடிவுக்கு வந்து, நீதிக் கட்சித் தலைவர்களின் கருத்துக்கு இசைவு தராமல் பெரியார் அவர்கள் வந்துவிட்டார்கள்.

அறிஞர் அண்ணாவின் கண்டிப்புரையால் திராவிட இயக்கத்துக்கு அப்பொழுது ஏற்பட இருந்த ஆபத்து ஒன்று அகன்றது என்றுதான் சொல்லவேண்டும்.

மன்றம், நாள் 1-9-56

## தழும்புபட்ட உடல்

நமது இலக்கியமும், கலையும், சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்ந் தன. ஆனால் அவை இப்போது காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற் கின்றன; ஆகவேதான் நமது அருமைகளைப் பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அறிஞர் அண்ணா

## "யாரையடா சொன்னாய் அது!"

தன்மதிப்பு இயக்கம் தோன்றி அது பகுத்தறிவுக் கொள்கைப் பரப்பலில் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்த காலத்தில், கடவுள்-மதம்-வேதம்-புராணம்-இதிகாசம்-சாத்திரம்-சம்பிரதாயம் ஆகியவை பற்றிப் பகுத்தறிவு முறையில் ஆராய்ந்து ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிடத் தலைப்பட்டது. புராண இதிகாசங்களில் பொதிந்து கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள், இழிதன்மைகள், பொய்மைகள், புனைசுருட்டுக்கள், அறிவுக்கொவ்வாக் கற்பனைகள் போன்ற பலவும் தன்மதிப்பு இயக்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டு வெறுத்தொதுக்கப்பட்டன.

தன்மதிப்பு இயக்கத்தினரின் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் கண்ட வைதீகர்கள் வெகுண்டெழுந்தனர். தன்மதிப்பு இயக்கத்தினரை வரைமுறையின்றி ஏசினர், தூற்றினர், இழித்துரைத்தனர், பழித்துப் பேசினர். தன்மதிப்பு இயக்கத்தினரை நேரியமுறையில் எதிர்த்துநிற்கத் தாளமாட்டாமல் பிறகு அஞ்சி, அடங்கி, ஒடுங்கினர். தன்மதிப்பு இயக்கம் வீறுநடையுடன் வெற்றிவலம் புரிந்து வந்தது. இப்படியாகச் சில ஆண்டுகள் உருண்டு ஓடின.

1942-43 ஆண்டுகள்வாக்கில் இராமாயணத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிட்டு, அதன் இழிதன்மையையும், அது திராவிடரை இழித்துரைக்கும் தன்மையையு

யும், மூடபக்தி-மூடநம்பிக்கை—மூடப்பழக்க வழக்கம் ஆகியவற்றிற்கு அது உறைவிடமாக விளங்கும் தன்மையையும் அதில் பொதிந்துகிடக்கும் ஆபாசக் கருத்துக்களையும்- கற்பனைகளையும் விளக்கிப் பெரியாரும் பிறரும் பேசிய போது, வைதீகப்பண்டிதர்கள் மீண்டும் வெகுண்டெழுந்து எதிர்க்கத் தலைப்பட்டனர். "கம்ப இராமாயணம் தெய்வீகத் தன்மை வாய்ந்தது-அது அப்படியே முழுக்க முழுக்க உண்மைவாய்ந்தது-அதனை அழிக்க யாராலும் முடியாது-அதனைத் தீயில் போட்டாலும் அது பொசுங்காது!" என்று வைதீகப் பண்டிதர்கள் வாதிட்டுத் தன்மதிப்பு இயக்கத்தினரை அறைகூவி அழைத்தனர். பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் அந்த அறைகூவலை ஏற்று, 'கம்ப இராமாயணம் தெய்வீகத்தன்மை உடையதும் அல்ல உண்மைவாய்ந்ததும் அல்ல, அதனைத் தீயிலே போடுகிறோம் அது பொசுங்குகிறதா, இல்லையா என்று பாருங்கள்! அதனிடம் கொண்டுள்ள பக்தி சிறுகச் சிறுக அழிகிறதா, இல்லையா என்று நோக்குங்கள்!" என்று வைதீகப் பண்டிதர்களைப் பார்த்துக் கேட்டுவிட்டுத் தீவிரக் கொள்கைப்பரப்பலில் (பிரசாரத்தில்) இறங்கினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகம் எங்கணும் சுற்றுப் பயணம் செய்து, கம்பராமயணத்தை அக்குவேறு ஆணிவேறாக அலசிக்காட்டி, மிகத் தீவிரமான கொள்கைப் பரப்பலில் ஈடுபட்டார்கள். வைதீகப் பண்டிதர்களை வாதுக்கழைத்தார். வாதாடும் வல்லமையிற் சிறந்த இரு பெரும் பண்டிதர்களான தோழர்கள் ஆர். பி. சேதுப் பிள்ளை, ச. சோமசுந்தர பாரதியார் ஆகிய இருவரும் தோற்றுப்போய் ஓடி உட்கார்ந்து விட்டனர்.

அப்பொழுது இராமாயணத்தை நன்கு படித்தறிந்த சாயபு ஒருவர் "அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? தமிழில் ஒரு பாட்டுச் சொல்லத் தெரியுமா?" என்று

ஆணவத்தோடு கேட்டாராம். அதற்கு விடையிறுக்கும் முகத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், "எனக்குத் தமிழில் ஒரு பாட்டு சொலலத் தெரியுமா என்று இராயாயண சாயபு கேட்டாராம் எனக்குத் தமிழில் பாட்டுகள் சொல்லத் தெரியுமோ தெரியாதோ, ஆனால் ஒரே ஒரு பாட்டு மட்டும் தெளிவாகச் சொல்லத் தெரியும்.

எட்டேகா லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
யாரையடா சொன்னாய் அது.

(எட்டேகால் லட்சணமே-அவலட்சணமே; எமனேறும் பரியே – எருமையே; மட்டில் பெரியம்மை வாகனமே-கழுதையே; முட்டமேற் கூரையில்லா வீடே-குட்டிச் சுவரே; குலராமன் தூதுவனே-குரங்கே.)

என்பதுதான் அந்தப் பாட்டு. "இதை அந்தச் சாயபு விடம் போய்ச் சொல்லுங்கள்" என்று ஒரு பொதுக்கூட்டத் தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

அண்ணாவின் இந்தப் பேச்சைக் கேள்வியுற்ற அந்த சாயபு ஏன் மீண்டும வாய் திறக்கிறார்? அவ்வளவுதான்! அப்படியே அடங்கி ஒடுங்கிவிட்டார்.

மன்றம், நாள்: 15-9-‌56.

## தமிழுக்குண்டு தகுதி

நம்மிலே சிலர் தவறாக எண்ணிக் கொண்டு இருக்கின்றோம். 'சரித்திரத்தை ஆங்கிலத்தில் தான் படிக்க முடியும், மருத்துவத்தை ஜெர்மன் மொழியில்தான் படிக்க முடியும' என்று. அந்தத் தவறான மனப்பாங்கு நீங்க வேண்டும். பிற மொழிக் கருத்துக்களை எளிதாக எடுத்துச் சொல்லக் கூடிய தன்மை நம்மவர்களுக்கு உண்டு.

**அறிஞர் அண்ணா**

## முன்பே விளக்கினார்—நீ புரிந்து கொள்ளவில்லை

திராவிட முன்னேற்றக்கழக முன்னணிச் சொற்பொழி வாளர்களிலே ஒருவரான தோழர் ப.உ. சண்முகம் அவர்கள் மிக்க இளைஞராக இருக்கும்போதே திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவராக ஆயினார். அவர் பொறுப் பேற்ற சில திங்களுக்குள்ளாகவே தம் அறிவாற்றல் திறமையின் விளைவால் பெரும் பெயரும் புகழும் பெற்றார்.

அவருடைய அருமை பெருமைகளைத் திராவிட இயக் கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் பாராட்டவில்லை; மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மிகவாகப் பாராட் டினர். அவர் திராவிட இயக்கத்தில் நன்கு திளைத்த ஒரு இளைஞராக இருந்தபோதிலும், எல்லா அரசியல் கட்சி களையும் பொது நோக்குடனேயே நோக்கி நடு நிலை நின்று செயலாற்றி வந்தார். எந்த அரசியல் கட்சியைச் சார்ந்த தலைவர்களாயிருந்தாலும் சரி, பிற பிற பொதுப் பணித் தலைவர்களாய் இருந்தாலும் சரி நகராட்சி மன்றத் தின் சார்பாக அவர்களுக்கு வரவேற்பு அளிக்க ஓரிரு உறுப்பினர்கள் விரும்பினாலும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிவைக்க தோழர் ப.உ. சண்முகம் அவர்கள் ஒரு போதும் பின்வாங்கியதில்லை. அந்த அளவுக்கு அரசியல் நாகரிகத்தையும் அரசியல் கண்ணியத்தையும் மிகப்பெருந் தன்மையோடு அவர் வளர்த்து வந்தார்.

தோழர் ப.உ. சண்முகம் அவர்கள் நகராட்சி மன்றத் தலைவரான துவக்கக் காலத்தில் அவரைப் பலபடப்பாராட்டிப் பேசிய மாற்றுக் கட்சிக்காரர்களில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த தோழர் என் அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் முக்கியமான ஒருவராவார்.

அவர் ஒருமுறை தோழர் சண்முகம் அவர்களைப் பாராட்டிப் பேசுபபோது "எனக்கு அடுத்தபடி, திருவண்ணாமலையில், சண்முகந்தான் எனது வாரிசு!", என்னும் கருத்துப்படப் பேசினார்.

சிறிது காலத்துக்குப்பிறகு தோழர் ப உ. சண்முகம் அவர்களுக்கும் காங்கிரசுக் கட்சிகாரர்களுக்கும் இடையே சச்சரவு எழும்ப, காங்கிரசுக்காரர்கள் தோழர் சண்முகம் அவர்களை இழித்தும், பழித்தும், கூறி வசைபாடத் தொடங்கினர். அதற்குத் தலைமை தாங்கியவர் தோழர் என். அண்ணாமலைப்பிள்ளை அவர்கள்தாம். அவர் தோழர் சண்முகம் அவர்களை வசைபாடிப் பேசும்போது, "சண்முகம் ஒரு மடையன்! முட்டாள்! முரடன்!" என்னும் கருத்துப்படப் பேசினார்.

தோழர் ப.உ. சண்முகம் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒருமுறை தோழர் என் அணணாமலைப் பிள்ளையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது, "அண்ணாமலைப் பிள்ளை முன்பெல்லாம் என்னை அவரது வாரிசு என்று கூறிக்கொண்டிருந்தார்; இப்பொழுது அவரே என்னை மடையன், முட்டாள், முரடன் என்றெல்லாம் பேசுகிறார்! என்று குறிப்பிட்டார். அப்பொழுது அண்ணாவைச் சுற்றிப் பலர் வீற்றிருந்தனர். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் சண்முகம் அவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் "அவர் முதலிலேயே உன்னிடம் அதைத்தான் விளக்கினார்; நீ

அப்பொழுது புரிந்துகொள்ளவில்லை; நீ தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்குத்தான் மீண்டும் ஒரு முறை வெளிப்படையாக விளக்கியுள்ளார்!" என்று கூறினார்கள்.

தோழர் சண்முகம் அவர்களும், ஏனையோரும் அண்ணாவின் கூற்றிலிருந்து ஏதும் புரிந்துகொள்ள முடியாமல் சற்றுத் திகைத்திருந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் அவர், "தமது வாரிசு நீதான்" என்று சொல்லியபோதே, உன்னை மடையன்-முட்டாள்-முரடன் என்று முடிவுகட்டியிருக்கிறார்போலும் என்று நீ புரிந்து கொண்டிருக்க வேண்டும்! அப்பொழுது நீ புரிந்துகொள்ளவில்லை! எனவேதான் உனக்கு விளங்கும்படி வெளிப்படையாக இரண்டாவது முறையும் கூறியிருக்கிறார்!" என்று சொல்லியவுடனே தோழர் சண்முகம் உள்பட கூடியிருந்தோர் அனைவரும் விழுந்துவிழுந்து கொல்லென்று சிரித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் நயப்பாடு கொண்ட நகைச்சுவைக் கூற்றுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.
மன்றம் நாள்: 1.10.56.

## அந்நாள் ஆணை

அச்சம் தவிர்த்திடுக! நவநிதியந் தந்திடினும் நத்திக் கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் காத்திடும வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந் தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம்.

அறிஞர் அண்ணா

## மீசை பலியாயிற்று

அறிஞர் அண்ணா அவர்கள் மிகச் சிலரோடுதான் நெருங்கிப்பழகுவார்கள். குறிப்பிட்ட அந்த ஒரு சிலருடைய கூட்டுறவைத்தான் அவர்கள் எப்பொழுதும்விரும்புவார்கள். அந்த ஒரு சிலரோடு பொழுது போக்குவதிலேதான் அவர் களுக்கு நிரம்ப விருப்பம். இதனால் அவர்கள் மற்றவர் களையெல்லாம் வெறுப்பார்களோ என்று யாரும் பொருள் கொண்டுவிடக் கூடாது. அண்ணா அவர்கள் எல்லோ ரோடும் எப்பொழுதும் அன்பாகவும், இனிமையாகவும்' கனிவாகவுந்தான் உரையாடுவார்கள். ஆனால் மிகச் சிலர் தான் 'நெருங்கிய நண்பர்கள் பட்டியலில் வருவார்கள்.

அண்ணா அவர்கள் தம் நெருங்கிய நண்பர்களோடு குழந்தைபோல் பழகுவார்கள். எப்பொழுதும் சிரித்து மகிழ்ந்துகொண்டே பேசுவார்கள். அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போது நகைச்சுவை பெருக உடனிருக்கும் தம் நெருங்கிய நண்பர்களில் யாரையேனும் கேலியும் கிண்டலும் செய்துகொண்டே இருப்பார்கள். முக்கியமான பிரச்சினைகள் குறித்து நெருங்கிய நண்பர்களுடன் விவா தித்துக் கொண்டிருக்கும்போதுகூட நகைச்சுவைக் குறிப்பு கள் அண்ணா அவர்களிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டே யிருக்கும்.

அண்ணா அவர்களின் நண்பர்கள் குழாத்துள் கேலிக் கும் கிண்டலுக்கும் உரிய ஒருவராகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் அடிக்கடி அகப்பட்டுக் கொள்வார்.

அண்ணாவின் கேலியும் கிண்டலும் அவற்றிற்கு ஆளாகு பவர்களைச் சிரிக்கவும் மகிழவும் செய்யுமேயல்லாது, யாருடைய உள்ளத்தையும் புண்படுத்துவனவாகவோ, வருத்தத்தில் ஆழ்த்துவனவாகவோ அமையா. அப்படிக் கேலியும் கிண்டலும் வந்து தாக்கும்போது, தோழர் என்.வி நடராசன் அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து சிரித்து மகிழ்வார்களே யொழிய, அதற்காக ஒருபோதும் மன வருத்தம் கொள்ளமாட்டார்.

மும்முனைப் போராட்டக் காலத்தில், அண்ணா என். வி. நடராசன், சம்பத், மதியழகன், நெடுஞ்செழியன் ஆகியோர் சென்னைச் சிறையில் இருக்கும்போது, தோழர் என்.வி. நடராசன் அவர்கள்தாம் பொழுதுபோக்குக்குரிய 'பொருளாக' அகப்பட்டுக் கொள்வார். ஒரு நாள் காலை தோழர் என். வி. நடராசன் அவர்கள் முடிதிருத்திக் கொண்டுவந்தார். அவர் தம் மீசையைச் சரிப்படுத்திக் கொள்ளக் கத்தரிக்கோலின் மூலம் முயன்றார். அப்பொழுது அண்ணா அவர்கள் தோழர் நடராசன் அவர்களது மீசை யைத் தாம் சரிப்படுத்தித் தருவதாகச் சொல்லிக், கத்தரிக் கோலை வாங்கி மீசையைக் கத்தரிக்கத் தொடங்கினார் அண்ணா அவர்கள், தமக்கு உதவிசெய்ய முன்வந்துள்ள தாகவே தோழர் நடராசன் அவர்கள் கருதிக்கொண்டார் கள். ஆனால் அண்ணா அவர்கள் அரை மீசையை அப்படியே கத்தரித்து எடுத்துவிட்டார்கள். தோழர் நடராசன் அவர் களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை; அப்படியே திகைத்துப்போய் நின்றுவிட்டார். அண்ணாவும் மற்றவர் களும் விழுந்து விழுந்து சிரிக்கத் தலைப்பட்டனர். நடராசன் சிறிது நேரம் முகக்கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்று கொண்டிருந்தார். அரை மீசை போய் விட்டதே என்ற வருத்தம் இருந்தாலும், அவரும் மற்றவர்

கனோடு சேர்ந்து சிரிக்கவே செய்தார். பிறகு மீதியிருந்த அரை மீசையையும் தாமே எடுத்துவிட்டார்.

அன்று மாலை எதிர்பாராத விதமாகத் தோழர் என். வி. நடராசன் அவர்களது வீட்டார் அவரைப் பார்க்க வந்தனர். அவரைக் கண்டதும் அவரது வீட்டார் அனை வரும் குழந்தைகள் உள்பட விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். தமக்கு மீசை போய்விட்டதை அவரது மகன் சுட்டிக் காட்டியதற்குப் பிறகுதான், அவருக்கு நிலை மை புரிந்து; அவரும் சேர்ந்து சிரித்தார்.

அறிஞர் அண்ணாவின் சிறைப்பொழுதுபோக்குக்குத் தோழர் என். வி. நடராசனின் மீசை பலியாயிற்று!

மன்றம், இதழ்: 15.10.56.

## நல்ல இலட்சியம்

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல இலட்சி யமே; பதித்து நடக்கக் கூடியதுதான். ஆயினும் அதற்காக மொழித்துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ, ஆதிக்கம் செலுத்துவதையும், அநீதியையும் பொறுத்துக் கொண்டிருக்க முடி யாது, அதனால் தானே மாநிலங்கள் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா

## "குரங்கு நிலையிலேயே இருக்கிறாய்"

அறிஞர் அண்ணா அவர்கள் தம் நண்பர்களோடு ஒரு நாள் நண்பகலில் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது' உணவு அருந்திக் கொண்டிருந்தவர்களிடையே மரக்கறி யுணவு, மாமிசவுணவு பற்றி விளக்கங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மரக்கறியுணவு— மாமிசவுணவு பற்றி விவாதம் எழு வதற்குக் காரணம் 'திராவிடநாடு' அலுவலகத்தில் ஓவிய ராக இருந்துவரும் தோழர் பழனி அவர்கள் தமக்கு மாமிச வுணவு பிடிக்காது என்றும் மரக்கறியுணவே வேண்டும் என்றும சொல்லி அதனை வாங்கிக்கொண்டு தனியே உட் கார்ந்து சாப்பிட்டார்; மற்ற நண்பர்களெல்லாம் மாமிச வுணவைச் சாப்பிட்டார்கள். மாமிச உணவைச் சாப்பிட் டவர்களெல்லாம் தோழர் பழனி அவர்களை வற்புறுத்திச் சிறிதளவு மாமிசத்தைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி கூறி னார்கள்; தோழர் பழனி அவர்கள் தனக்குப் பழக்கமில்லை என்று சொல்லி இறுதிவரையில் மறுத்தே வந்தார்; அதன் பேரில் மரக்கறியுணவு மாமிசவுணவு பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டன. நண்பர்கள் பலரும் தத்தம் விளக்கங்களைத் தந்தனர்.

மரக்கறியுணவு சாப்பிடும் விலங்குகள் எப்படியிருக் கின்றன, மாமிசம் சாப்பிடும விலங்குகள் எப்படியிருக்கின் றன'. முதல் வகையைச் சார்ந்த விலங்குகள் எப்படி மக்க

ளால் பழக்கப்படுத்தி உதவிக்கு வைத்துக்கொள்ளக் கூடியன வாக இருக்கின்றன. இரண்டாம் வகையைச் சார்ந்தவை கள் எப்படிப் பெரும்பாலும் கொடூரம் வாய்ந்தனவாகவும், காட்டில் வாழ்வனவாகவும் இருக்கின்றன என்பன போன்ற விளக்கங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மனிதனுடைய உறுப்பு அமைப்புகள், குடல் அமைப்பு எல்லாம் அவன் மரக்கறியுணவு சாப்பிடும் வகையைச் சேர்ந்தவன் என்பதைத்தான் காட்டுகின்றன: மேலும் குரங் கிலிருந்துதான் மனிதன் வந்தான் என்று சொல்லப்படுவ தாலும், குரங்கு மரக்கறியுணவு சாப்பிடும் வகையைச் சேர்ந்ததாக இருப்பதாலும், மனிதன் இயற்கை நியதிப்படி முதல் வகையைச் சேர்ந்தவனாகத்தான் கருதப்பட வேண்டும் என்று ஒரு நண்பர் கூறினார்.

உடனே தோழர் பழனி அவர்கள் தமது கட்சிக்கு, வலிவு ஏற்பட்டுள்ளதாகக் கருதிக்கொண்டு "அப்படிச் சொல்லுங்கள்!" என்று கூறி மகிழ்ச்சி கொண்டாடினார்.

மனிதன் நாளுக்குநாள் அறிவு ஆற்றல் பெற்று வளர்ந்த பிறகுதான் மாமிசத்தைப் பக்குவப்படுத்தித் தின்னக் கற்றுக் கொண்டிருக்கிறான்; இது செயற்கை முறையில் அவனுக்குப்படிந்த பண்பு என்று முதலில் கூறிய நண்பர் மேலும் விளக்கம் தந்தார்.

அதுகேட்ட தோழர் பழனி "நான் இயற்கைப் பண் பினைக் கடைப்பிடிப்பவன். எனவேதான் நான் மரக்கறி சாப்பிடுகிறேன். நீங்களெல்லாம் செயற்கைப் பண்பினைக் கடைப்பிடிப்பவர்கள். எனவேதான் மாமிசம் சாப்பிடு கிறீர்கள்!" என்று ஏளனக் குரலில் குறிப்பிட்டார்.

அது கேட்டுக் கொண்டிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் "அப்படியானால் நீ மாமிசம் தின்னக் கற்றுக் கொள்ளாத குரங்கு நிலையிலேயே இருக்கிறாய்; நாங்கள்

மாமிசம் தின்னக் கற்றுக்கொண்ட அறிவாற்றல் மிகுந்த நாகரிக நிலையில் இருக்கின்றோம் என்று பொருள்கொள்ள வேண்டும்'' என்று கூறவே எல்லோரும் கொல்லென்று சிரித்துத் தோழர் பழனி அவர்களைக் கேலி செய்தார்கள். தோழர் பழனி பரிதாபத்திற்குரியவரானார்.

பிறகு தோழர் பழனி அவர்கள் எல்லோரோடும் சேர்ந்து அறிஞர் அண்ணா அவர்களின் நயம் நிறைந்த உரையை நினைத்து நினைத்து சிரித்து மகிழ்ந்தார்!

மன்றம், நாள்; 1.11.56

## மலையும் கடுகாகும்

ஒரு மங்கையைத் தழுவ ஆவலோடு ஒரு ஆடவன் செல்லும் நேரம் எபபடிப்பட்டது? அந்தச் சமயத்திலே, அவனுடைய உணர்ச்சியும் உயிர்த் துடிபபும் உடஸ பதைபபும எடுத்துரைக் காத சவியும் உண்டோ? மலை கடுகாகவும், பாம்பு பழுதையாகவும் தோன்றுமாம், அபபடிப்பட்ட சமயததிலே!

அறிஞர் அண்ணா

## படோடோபத்திற்கு பணியாமை

நீதிக்கட்சினர் கோலோச்சிய அந்த நாட்களில், நீதிக் கட்சித் தலைவர்கள் மக்களோடு மக்களாய்ப் பழகும் எளியவாழ்வை ஏற்படுத்திக் கொள்ளாமல், பிறர் கண்டு தங்களை மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மிக்க ஆடம்பரமான முறைகளை விரும்பிமேற்கொண்டிருந்தனர். நீதிக் கட்சி நாளடைவில் செல்வாக்கு அற்றுப் போனதற்கு அதுவும் ஒரு காரணம் என்றுதான் சொல்லவேண்டும்.

நீதிக்கட்சித் தலைவர்களான பொப்பிலி அரசர், சர். கே. வி. ரெட்டி, ஏ. இராமசாமி முதலியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், குமார இராசா முத்தையா செட்டியார் போன்றவர்கள் சென்னையைவிட்டு எப்பொழுது வெளியூருக்கு கிளம்பினாலும், வெளியூரிலிருந்து சென்னைக்கு எப்பொழுது திரும்பினாலும் கட்சியின் பிற தலைவர்களும் நண்பர்களும், தொண்டர்களும் புகைவண்டி நிலையத்திற்கு சென்று செல்லும் தலைவர்களுக்கு மாலை சூட்டி வழியனுப்புவதும், வரும் தலைவர்களுக்கு மாலையணிந்து வரவேற்பதும் அக்காலத்தில் கையாண்ட ஆடம்பரங்களிலேயே ஒரு வகையைச் சார்ந்தனவாகும்.

இந்த முறை பெரியார் அவர்கள் நீதிக்கட்சித் தலைவர் பதவி ஏற்ற சிறிது நாட்கள் வரையிலும் கூட நடைபெறறது. சேலம் மாநாட்டிறகுச் சிறிது நாட்களுக்கு முன்பு பெரியார் அவர்கள் சென்னை வந்துவிட்டு, மதிய புகைவண்டி

நிலையத்திலிருந்து (சென்ட்ரல் ஸ்டேஷன்) ஈரோட்டுக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது வழக்கப்படி பெரியாரை வழியனுப்பக்குமாரராசா முத்தையா செட்டியார் போன்ற பலரும் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களும் பெரியாரைப் பார்த்து விட்டு வழியனுப்பி வைக்க வந்திருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெரியார் அருகில் நின்று ஏதோ உரையாடிக் கொண்டிருக்கும்போது, அப்பால் நின்று வேறு யாரோடோ பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திருப்பிய குமார ராசா அவர்கள், அண்ணா அவர்களிடம் நெருங்கி, "என்ன அண்ணாதுரை? சௌக்கியமா, இப்படி வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அண்ணா அவர்கள் தோளின் மீது கையைப் போட்டுத் தனியே இரகசியம் பேச அழைப்பது போல அழைத்தார். பலர் சூழ்மியிருக்கும் போது இபபடிப்பட்ட ஆடம்பர நடிப்பை நடித்துக் காட்டுவது படாடோபக்காரர்களிடத் தில் பொதுவாகக் காணக்கூடியதேயாகும். அத்தகைய ஆடம்பர நடிப்பு குமாரராசாவிடத்தில் காணபபட்டதில் வியப்படைவதற்கில்லை. அது அவரது ஆடம்பர வாழ்க் கைக்கு ஏற்ற இயல்பு, அத்தகைய படாடோபப் பசபபு நடிப்புக்களுக்கும், பசப்பு மொழிகளுக்கும் மதிப்புத்தர விரும்பாத அறிஞர் அண்ணா அவர்கள், உடனே தம் தோளைச் சுற்றிப் போடப்பட்டிருந்த குமார ராசா அவர் களின் கையை மெல்ல எடுத்துக் கீழே விட்டு, "நான் ஐயா வோடு பேசவேண்டியிருக்கிறது. இப்பொழுது உங்க ளோடு பேச நேரமில்லை. பிறகு உங்களைப் பார்க் கிறேன்! என்று சொல்லிவிட்டு ஐயா நின்று கொண்டிருந்த பக்கம் திரும்பிக் கொண்டார்கள்.

அண்ணா அவர்களிடம் இருந்து இப்படிப்பட்ட விடை வரும் என்று குமாரராசா எதிர்பார்க்கவே இல்லை.

அவருடைய முகம் வெட்கத்தைத் தாங்கமாட்டாமல் சுருங்கிக் கறுத்துவிட்டது.

குமார ராசா கூப்பிட்டு அண்ணா போக மறுக்கிறாரே என்பதைக் கண்ட பெரியார் அவர்களுக்கு, உள்ளுக்குள்ளே அடங்காத சினம் பொங்கிற்று. "குமாரராசா என்ன நினைத்துக் கொள்வார்களோ? ஏது நினைத்துக் கொள் வார்களோ? ராசாவின் தயவு இனி இல்லாமல் போய் விடுமோ?" என்பன போன்ற அச்சங்கள் அவரது உள்ளத் தைக் குடைந்தன. பெரியார் அண்ணா மீது எரிந்து விழுந்து, "ராசா கூப்பிடுகிறார்! போங்களேன்! என னிடத் தில் என்ன பேச வேண்டியிருக்கிறது!" என்று கண்டிப்புக் குரலில் பேசினார்கள்.

அண்ணா அவர்கள், குமாரராசாவைப் பொருட்படுத் தாதவர் போல் பெரியார் அவர்கள் முன்னிலையில் நின்று கொண்டு "நான் அவரிடம் பேச வேண்டியது இப்பொழுது ஒன்றுமில்லை! என்று கூறிவிட்டு வேறு பக்கம எதையோ பார்ப்பதைப் போல் பார்வையைச் செலுத்தினார்கள். குமாரராசா "எங்கே சினந்துகொள்கிறாரோ, என்னவோ" என்று எண்ணிக்கொண்டு பெரியார் அவர்கள், அவரிடம், வண்டி புறப்படும் வரையில் வேறு ஏதுஏதோ பற்றிக் குழைந்து குழைந்து பேசி, அவரது சினததைத் தணிததுக் கொணடிருந்தார்கள்!

மன்றம், நாள் : 15-11-56

## வருப்பொருள் உரைக்கும் தன்மை

ஒன்றின் நிகழ்காலச் சூழ்நிலைகளை ஆராய்ந்து அதன் எதிர்காலத்தின் போக்கு எப்படி அமையும என்பதை வரையறுத்துக் கூறும வல்லமை அறிஞர் அண்ணா அவர்களிடத்தில நிரமப உணடு.

தோழர் என்.வி. நடராசன் அவர்கள் காங்கிரசில் மிகத் தீவிரவாதியாக இருந்து பாடுபட்டுககொண்டு வரும் போதே அவர் அண்ணாவோடு நெருங்கிய நட்புறவு கொண்டு பழகும் பழக்கததைக் கொணடிருந்தார். கட்சிப் பிரசினைகள வரும்போது தம்மை ஒரு தீவிர தேசியவாதியாகக் காட்டிககொள்வதிலும், அந்த நேரங்களில் அண்ணா அவர்களை எந்த அளவுககும எதிர்த்து நிறகத துணிவு கொள்வதிலும் தோழர் நடராசன் ஒருபோதும் தவறுவதில்லை.

தோழர் என். வி. நடராசன் அவர்களின் உள்ளம், உணர்ச்சி ஊக்கம் ஆகியவற்றைக்கண்ட அண்ணா அவர்கள் "நடராசன்! நீ எலறைக்கேனும் ஒரு நாள் என் கட்சிக்கு வந்து சேரத்தான் போகிறாய பார்! என்னை விட்டு நீ தப்பமுடியாது!" என்று அடிக்கடி சொல்லுவார்கள். அதற்கு, "அண்ணா! அதுதான் முடியாது! எப்பேர்ப்பட்ட நிலைமை வந்தாலும் நான் தேசியததை விட்டு, உங்களைப் போல ஏகாதிபதய தாசனாக மாறமாட்டேன்!" என்று பதிலிறுப்பார், "ஏன் இப்பொழுது வீராப்பு பேசுகிறாய்?

போகப் போகப் பார்!" என்று அண்ணா அவர்கள் சிரித்துக் கொண்டே கூறுவார்கள்.

தோழர் நடராசன் அவர்கள் அண்ணாவிடம் பேசும் போது, "காங்கிரசு தாய்மொழி தமிழுக்குத்தான் ஊக்க மளிக்குமே ஒழிய, இந்தியைக் கட்டாயமாக ஒருகாலும் புகுத்தாது, மக்களின் நலத்திற்கு மாறுபாடாகக் காங்கிரசு ஒருபோதும் நடக்காது" என்று அடிக்கடி கூறுவார். ஆனால் ஆச்சாரியார் அமைச்சர் அவை 1938 இல் இந்தியைக் கட்டாயப் பாடமொழியாகப் புகுத்தியது. அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் நடராசனைப் பார்த்து "இப்பொழுது என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார்கள். "இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது காங்கிரசின் திட்டமல்ல. எனவே நான் அதனை எதிர்க்கத் தான் போகிறேன்" என்று தோழர் நடராசன் அவர்கள் அதற்கு மறுமொழி பகன்றார்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் மிகவும் முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது காங்கிரசுப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் தோழர் நடராசனுக்கு மிக்க சங்கட மான நிலைமை ஏற்பட்டது. காங்கிரசுக்காரர்கள் பலரும் கட்டாய இந்தியை ஆதரித்துப் பேசினர். ஆதரித்துப் பேசினால் அண்ணாவின் கேலி பிறக்கும், எதிர்த்துப் பேசினால் பிற காங்கிரசுக்காரர்களின் சினம் சீறும். இறுதியில், தமக்குப்பட்ட கருத்துவழி நின்று, அண்ணாவின் கேலி மொழிக்கு இடங்கொடாமல், இந்தியை எதிர்த்துப்பேசவே தலைப்பட்டார். இது காங்கிரசு வட்டாரத்தில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. இந்திப் பிரச்னையைப் பற்றி முடிவு எடுக்க மாவட்டக் காங்கிரசுச் செயற்குழுக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது.

இந்திப் பிரச்னையைப் பற்றி முடிவு எடுக்கக் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

அதற்குத் தோழர் நடராசன் போயிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற அறிஞர் அண்ணா அவர்கள் தம் உற்ற நண்பரான டாக்டர் சி. கணேசன் அவர்களை அவசரமாக அழைத்து "இன்று காங்கிரசுச் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. தோழர் நடராசன் சென்றிருக்கிறார். அவர் இந்தியை எதிர்த்துப் பேசப் போகிறார். பெரும்பாலோர் இந்தியை ஆதரித்துத் தீர்மானம் செய்யப் போகிறார்கள். தோழர் நடராசன் அந்தக்கணமே விலகல் கடிதம் கொடுத்துவிட்டு வெளியேறப் போகிறார். அதற்குள் நீ இன்று மாலை நடைபெறும் நமது இந்தி எதிர்ப்புப்பொதுக் கூட்டத்தில், 'காங்கிரசைவிட்டு வெளியேறிய தோழர் என்.வி. நடராசன்' அவர்களும் கலந்துகொள்வார் என்று துண்டு அறிக்கை அச்சடித்து, எடுத்துக்கொண்டு கூட்டம் நடைபெறும் கட்டிடத்தின் வாயிலண்டையில் போய் நில். தோழர் நடராசன் விலகல் கடிதம் கொடுத்துவிட்டு வெளிவந்தால், இந்த துண்டு அறிக்கைகளை அவரிடமும், பிறரிடமும் கொடு. நிலைமை வேறு விதமாக இருந்தால் அப்படியே எடுத்துக்கொண்டு வந்து விடு!" என்று சொல்லி அனுப்பினார்கள்.

அண்ணா அவர்கள் முன்கூட்டி நினைத்தவாறே 'நிகழ்ச்சி நடந்தேறி தோழர் நடராசன் விலகல் கடிதத்தைத் தோழர் சத்தியமூர்த்தி அவர்களிடம் கொடுத்துவிட்டு வெளியே வந்தார். தோழர் கணேசன், நடராசன் அவர்களிடம் துண்டு அறிக்கையை நீட்டினார். தோழர் நடராசன் துண்டு அறிக்கையைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார். அறிஞர் அண்ணாவின் 'குறும்பு' என்று எண்ணிக்கொண்டு, வேறு வழியின்றி அன்று மாலைப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அறிஞர் அண்ணா அவர்களின 'வரும்பொருள் உரைக்கும்' தன்மை வென்றது! அன்று தொடங்கிய தோழர் என். வி. நடராசன் அவர்களின் திராவிட இயக்கப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மன்றம், நாள் 1-12-56

## அருமையும் எளிமையும்

அறிஞர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு அருமையும் பெருமையும் உடையவர்களோ, அந்த அளவுக்கு எளிமையும் இனிமையும் உடையவராவார்கள். மேடையேறிச் சொல்லாற்றல், கட்டுரை-கதை-கவிதை-நாடகம்- திரைக்கதை-வசனம் எழுதும் எழுத்தாற்றல், நாடகங்களில் சில உறுப்புகள் ஏற்று நடிக்கும் நடிப்பாற்றல், அரசியலிலிருந்து அடுக்களை வரையிலுள்ள பல்வேறு பிரச்சினைகளையும தெளிவாக அறிந்து அவற்றின் நுட்பங்களையெல்லாம் வரையறுத்தும் தெளிவுபடுத்திக் காட்டும் ஆற்றல், நாட்டிற்கும் மக்களுக்கும் உகந்த திட்டங்கள் தீட்டிக்காட்டிடும் ஆற்றல், இயக்கத்திற்குத் தலைமை தாங்கி அதனைத் திறம்பட நடத்திச் செல்லும் ஆற்றல், நண்பர்களோடு மணிக்கணக்கில் நாட்கணக்கில் உட்கார்ந்து தொடர்ந்து இனிமையாக உரையாடும் ஆற்றல், உள்ளன்போடும் உயர்பண்போடும் பழகும் ஆற்றல், தலைவரோடு தலைவராகத் தொண்டரோடு தொண்டராய் நண்பரோடு நண்பராய் நடந்துகொள்ளும் ஆற்றலும் ஆகிய இத்துணை ஆற்றல்களையும் ஒருங்கே பெற்ற அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தமிழகத்தில், ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஈடு இணையுள்ளார் எவரும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெற்றுள்ள ஆற்றல்களில் ஒன்றையோ அல்லது ஒரு சிலவற்றையோ அரைகுறையாகப்

பெற்றிருந்தால்கூட, அந்நிலையின் உச்சியிலே ஏறி நின்று குதியாட்டம்போடும் பலரை நாம் அன்றாடம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். சாதாரண கூழைமட்டை, பேயத்திக் கொம்பு, முருங்கை மிலாறு, தாழங்காய் போன்றவர்களெல்லாம் கூட அரைகுறைத் திறமையும், தகுதியும் பெற்றுவிட்ட உடனே தலை துள்ளிக் குதிப்பதைப் பார்க்கிறோம். பலரிடத்தில் ஆற்றல் வளர வளர அகந்தையும் வளரக் காண்கிறோம். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அறிவாற்றலும், பெருமையும், புகழும், சீரும் சிறப்பும், பொலிவும், வலிவும், ஆக்கமும், தகுதியும், திறமையும், செம்மையும் செல்வாக்கும் வளரவளர, எளிமையும் இனிமையும் மேன்மேலும் வளர்ந்தோங்கும் அரிய பண்பை அவரோடு நெருங்கிப் பழகுகிறவர்கள் தெளிவாக உணருவார்கள்.

சென்ற ஏழு ஆண்டுகாலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பரந்து, விரிந்து, வளர்ந்து, சிறந்து, ஓங்குபுகழ் எய்தி வந்திருக்கிறது என்றால், அதற்குப் பெரும்பங்கு முழு முதற் காரணமாக இருந்து வருபவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் அறிவு, ஆற்றல் நேரம், நினைப்பு, உழைப்பு, பேச்சு, எழுத்து, நடிப்பு நாடகம், திரைப்படம் ஆகியவற்றின் மூலம் கழகம் வளர்ந்து வந்துள்ள தன்மையைக் கூர்ந்து கவனிக்கும்போது, அவர் அளவுக்கோ, அல்லது அவர் அருகே அணுகுகிற அளவுக்கோ நம்மால் பணியாற்ற இயலுமா என்பதைத் தான் நல்லெண்ணம் கொண்ட ஒவ்வொருவரும் தமக்குத்தாமே சிந்தித்துப்பார்த்து வியந்து போவார்கள். இவ்வளவு அருமை பெருமைகளைப் படைத்த அண்ணா அவர்கள் மிகச் சாதாரணமானவரோடும் பழகுகிறார், மிகச் சாதாரணமானவர்களிடத்தில் காணப்படும் சிறிதளவு திறமையாக இருந்தபோதிலும் அதனைப் பெரிதும் பாராட்டுகிறார்,

மிகச் சாதாரண உடைகளை உடுத்திக் கொள்கிறார், மிகச் சாதாரண வசதிகள் கிடைத்தாலும் திருப்தி கொள்கிறார், மிகச் சாதாரண உணவு உட்கொள்வதிலே அமைதி பெறுகிறார். அடக்கமே உருவாக அமையப் பெற்றிருக்கிறார் என்று அறியும்போது அழுக்காறற்ற உள்ளம படைத்தவர்கள் அனைவரும் அறிஞர் அண்ணா அவர்களைப் போற்றிப் பாராட்டி வியப்புற்று நிற்கிறார்கள்.

அருமைக் கெல்லாம் அருமையாயும், எளிமைக்கெல்லாம் எளிமையாயும விளங்கும் அறிஞர் அண்ணா அவர்களைச் சிறிய வழி காட்டியாகக் கொள்வதிலும் அவரது அரிய அறிவுரைகளைக் கேட்பதிலும், அவரது உயரிய திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலும் இலட்சக் கணக்கானவர் நாடெங்கிலும் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான், அப்படிப்பட்ட அறிஞர் அண்ணாவைப் பெற்றிருப்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் பூரிப்பும் பெருமையும் கொள்கிறது!

மன்றம், நாள்: 15-12-56

## சென்றிடுவீர் வென்றிடுவீர்

தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித் துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்! பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ-தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

அறிஞர் அண்ணா

## அண்ணாவும் இசைப்பெரும் புலவரும்

நாதசுர இசையுலகில் மன்னர் மன்னராய் விளங்கியவரும், மங்காமணி விளக்காய் நின்று என்றென்றும் புகழொளி வீசி வந்தவரும், ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்ந்தவரும், தன்மானம் குன்றாமல் தலைதாழாச் சிங்கமென வாழ்ந்தவரும், வீண் ஆடம்பரக்காரருக்கும்—பணக்காரருக்கும்—பதவியாளருக்கும் பணியாமல், வளையாமல், நெளியாமல் வாழ்ந்து வந்தவரும் 'நாதசுர இசையுலகில் இருந்துவந்த கைகட்டல், வாய்பொத்தல், மேல் துணைடை இடுப்பில் கட்டல், செருப்பைக் கழற்றிவிட்டுக் குனிந்து நின்று வணங்கல், சட்டை போடாமலிருத்தல், குடுமிவைத்தல்' போன்ற அடிமைச் சம்பிரதாயங்களை அடியோடு ஒழித்த புரட்சி வீரரும் ஆன மறைந்த இசைப் பெரும் புலவர் டி. என். இராசரத்தினம் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடம் பெருமதிப்பும், பெருமரியாதையும் காட்டி அன்போடு பழகி வந்தவராவார்.

அறிஞர் அண்ணா அவர்களின் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையில் திளைத்து, அவரைப் பலபடப் பாராட்டிப் போற்றி மகிழ்ந்து அவரோடு இனிய முறையில் பழகிவந்தார்கள்.

நாதசுரமன்னர் டி. என் இராசரத்தினம் அவர்களின் நாயனக் கச்சேரி அண்மையில் எங்கேயேனும் உண்டுஎன்றால், அங்குப்போகும் வாய்ப்பு இருக்கிறது என்றால், அண்ணா

அவர்கள் அங்கு ஓடோடிப் போய் இருந்து நாதசுர இசையைக் கேட்டு மகிழ்வார்கள். அவையில் தம் எதிரே அண்ணா அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்துவிட்டால், தோழர் இராசரத்தினம் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்றுப், பெருமுயற்சி எடுத்து மிகத் திறம்பட நாயனம் வாசித்துக் காட்டுவார்கள். திருச்சியில் தோழர் டி. பி. பொன்னுச்சாமி அவர்கள் வீட்டுத் திருமணம் ஒன்றிற்குத் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாதசுர இசையரங்கு முடியும் தறுவாயில் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு வந்தார்கள். அண்ணா அவர்கள் வந்துவிட்டார்கள் என்பதை அறிந்தவுடனே, தோழர் இராசரத்தினம் அவர்கள் தம் களைப்பையும் பாராமல், வாசிப்பை நிறுத்த வந்த நிலையை மாற்றி மேற்கொண்டு ஒன்றரை மணி நேரம் மிக நேர்த்தியாகத் திறம்பட வாசித்துக் காட்டினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள். தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் மக்களின் படிப்புத் துவக்க விழாவின்போது இசைப்பெரும்புலவர் டி. என். இராசரத்தினம் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது, நாதசுர இசை தமிழ்நாட்டின் தனிப்பெருமைக்குரிய ஈடும் எடுப்புமற்ற அழியாச் செல்வம் என்றும், அச்செல்வம் இசைப்பெரும்புலவர் இராசரத்தினம் அவர்களின் திறமையாலும் உழைப்பாலும் புதுமையும், பொலிவும், புகழும், பெருமையும் பெற்று விளங்குகிறது என்றும், அவரது நாதசுரஇசையில் குழலோசை, யாழோசை, பிடிலோசை, வாய்ப்பாட்டோசை ஆகிய அனைத்தையும் தனித்தனியாகவும் சேர்ந்தும் காணலாம் என்றும், அவர் காட்டும் புதுவழியைப் பின்பற்ற மற்ற நாதசுர வல்லுநர்களுக்கு பல தினங்கள் பிடிக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். சென்னை கடற்கரையில் பல இலட்சக்கணக்கான மக்களைக் கூட்டி வைத்து, அவரிடம் பயிற்சி பெற்றவர்களையெல்லாம்

நாதசுர இசையை முழங்கச் செய்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி, அவரிடம் பொன்முடிப்பு அளிக்கத் தாம் ஆவல் கொண்டிருப்பதாகவும், அவரது அடுத்த பிறந்தநாள் விழாவின்போது அதனைச் செய்ய எண்ணியிருப்பதாகவும் கூறினார்கள். அண்ணா அவர்களின் ஆவல் நிறைவேறுவதற்குள்ளாகவே, நாதசுரமணி மறைந்துவிட்டதானது, அண்ணா அவர்களுக்குத் திகைப்பையும், துக்கத்தையும், துயரத்தையும் தருவதாகிவிட்டது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு நாதசுர இசை என்றால் மிகச் சின்னஞ் சிறு பருவத்திலிருந்தே அதனிடத்து மிக்க ஆர்வம் உண்டு. நடு இரவில, நிலவொளி காலத்தில் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை தெருக்கோடியில் எழும்ப அதனைத் தொலையில் நின்று கேட்பதிலே அண்ணா அவர்களுக்குத் தனி விருப்பம்.

தமக்கு எதிர்காலத்தில் வாழ்வளிக்கப் போகிறவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார்கள் என்று நாதசுர மன்னர் மன்னர் கருதிக் கொண்டிருந்தார். அந்த அளவுக்கு இருவரிடையே உள்ளன்பு வளர்ந்திருந்தது.

மன்றம், நாள்: 1. 1. 57

## மக்கள் சக்தி மகத்துவம்

எங்களால் எப்படி ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியும் என்று கேட்கலாம். மக்களிடம் உள்ள சக்தி, சாதாரண சக்தி அல்ல. அரசை ஆக்கவும், அழிக்கவும் வல்லமை படைத்த சக்தி. அந்தச் சக்தியைப் பயன் படுத்தும் விதமாகப் பயன் படுத்தினால்தான் அரசு நிலைக்கும்.

அறிஞர் அண்ணா

## அண்ணாதுரை பாதை!

காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்களுக்கும் அண்ணா அவர்கள் வாக்காளர்களைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள். அப்படியே ஒரு கிராமத்திற்கு அறிஞர் அண்ணாவும் வேறு சில நண்பர்களும் சென்றார்கள். அந்த ஊர் மக்களும் அண்ணா அவர்களை மற்ற பகுதி மக்கள் வரவேற்பதைப்போலவே மிகுந்த உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்றார்கள். அண்ணா அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து ''உங்கள் ஊர்ப் பாதை புதிதாக இருக்கிறதே எப்பொழுது போடப்பட்டது'' என்று கேட்டார்கள். மிகச் சமீப காலத்தில் தான் போடப்பட்டது என்று தெரிவித்தார்கள். அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் இந்தப் பாதைக்கு நாங்கள் "அண்ணாதுரை பாதை" என்று பெயர் வைத்திருக்கிறோம் என்றார். ஏன்? என்று புன்முறுவலோடு கேட்டார்கள். அதற்கு அவர் கூறினார். "நீங்கள் இந்தத் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கிற காரணத்தால்தான் இவ்வளவு அவசரமாக காங்கிரஸ் சர்க்கார் இந்த ஊர்ப்பாதையைப் போட்டிருக்கிறார்கள். ஆக இது உங்களால் எங்களுக்கு கிடைத்ததுதானே, எனவே, 'அண்ணாதுரை பாதை'' என்ற பெயர் இதற்கு பொருத்தம்தானே'' என்றார். சூழ்ந்து நின்றவர்கள் அனைவரும் அதனைச் சிரிப்புடன் ஆமோதித்தனர்.

மன்றம் நாள்: 15. 3. 57

## சிற்றூர்களில் "எலெக்ஷன்"

திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலில் முதல் தடவையாக ஈடுபட்ட பொழுது, தேர்தலில் ஓட்டுக்கேட்பது மட்டுமல்ல, தேர்தல் என்றால் என்ன? ஓட்டுமுறை எப்படி? அதன் பெருமை—பொறுப்பு என்ன? என்றெல்லாம் விளக்க வேண்டியிருந்தது. அறியாமை அதிகமாக நிலவுகிறபடியால், கண்மூடித்தனமாக இதுவரை ஓட்டுக்கள் போடப்பட்டிருக்கின்றன. முதல் தடவையாகக் கழகம் தேர்தலுக்கு வந்தபொழுது, தாங்கள் யார்? தங்களுடைய கொள்கைகள் என்ன? என்பதை விளக்குவதுமட்டும் போதாததாக இருந்தது. ஜனநாயகம், ஓட்டுமுறையின் அவசியம், அதன் அருமை இவற்றை விளக்கிச் சொல்லி விட்டு, பிறகு கழகத்தின் கொள்கைகளைச் சொல்லி ஓட்டுப் பெற வேண்டியிருக்கிறது இதற்கு முன்னதாக வந்த தேர்தலில் ஈடுபட்டிருந்த பெரும் அரசியல் கட்சிகள் அந்தவகை ஜனநாயக உணர்வை ஊட்டவில்லை; ஆளுங்கட்சி, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பணபலத்தை நம்பியதால், மக்களிடையே வாக்குரிமையின் மேன்மையைப் பற்றிப் பேசவில்லை; மக்களாட்சி முறையின் அடிப்படையில் மக்களிடையே வாக்குரிமைகளைப் பெறவில்லை. தேர்தல்கள் பல வந்திருந்த போதிலும், இன்னும் 'தேர்தல்'' ''ஓட்டு'' இவைகளைப் பற்றித் தெளிவான விளக்கம் மக்களுக்கு உண்டாகவில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் அவர் தொகுதியில் தேர்தல் சுற்றுப்பயணத்தின் போது, ஒரு சிற்றூர்க்குப் போயிருந்தார். அங்கு ஒரு குடிசைக்குப் பக்கத்தில் அண்ணா அவர்கள் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு கிழவி அந்தப் பக்கம் வந்தார்கள்.

"நீங்கள் யார்?" என்று கிழவி கேட்டாள்.

"எலெக்ஷனுக்கு வந்திருக்கிறோம்" என்று அண்ணா சொன்னார்.

கிழவி சற்று யோசித்தாள்; பிறகு புரிந்துகொண்டவள் போல, "எலெக்டிரிக் லைட் போட வந்திருக்கிறீர்களா"? என்றாள்.

'இல்லையம்மா! எலெக்ஷன் — ஓட்டுப் போடுவது, ஓட்டுக் கேட்க வந்திருக்கிறோம்".

"அதுதான் ஐந்து வருஷத்து முன்னே வந்து வாங்கிட்டுப் போயிட்டாங்களே!"

"மறுபடியும் இப்பொழுது ஓட்டுக் கிடைக்கும். அதை உங்களுக்கு யார் பேரில் நம்பிக்கையிருக்கிறதோ, அவர்களுக்குப் போடலாம்".

"நீ நிக்கிறியா?"

"ஆமாம்"!

"சரி ஓட்டைக்கொடு! உனக்கே தந்துடறேன்."

தேர்தல் நாளன்று, தேர்தல் சாவடியில்தான் ஓட்டுச் சீட்டைத் தருவார்கள் என்றெல்லாம் அண்ணா அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டியிருந்தது.

தேர்தலில் ஓட்டுக் கேட்பதற்கு முன்னால், தேர்தல் ஓட்டு என்பவைகளைப்பற்றி மக்களுக்கு விளக்கிவிட்டு, பின்பு தான் நாம் தேர்தலில் நிற்கும் கொள்கைளைப் பற்றிச் சொல்ல வேண்டியிருந்தது.

மன்றம், நாள்: 1. 4. 57

## பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா அவர்கள் அழுதுகொண்டே குழந்தையாகப் பிறந்தபோது, அவர் வீட்டிலுள்ளவர்களெல்லாரும் சிரித்துக் கொண்டே வாரியணைத்து வரவேற்றனர்; அவர் சிரித்துக் கொண்டே மறையும்போது, நாட்டிலுள்ளவர்களெல்லாம் தேம்பித் தேம்பி அழுது கொண்டே வாரிக் கொடுத்து விடை பெற்றனர்.

பொதுவாக இந்தியாவின், குறிப்பாகத் தமிழகத்தின் கோடானுகோடி மக்களின் உள்ளங்களைத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் வலிமையினாலும், பண்பாட்டுச் செறிவினாலும, செயல் நுட்பத்தினாலும கொள்ளை கொண்டு எல்லாருடைய இதயங்களிலும் நீங்காத, நிறைந்த ஓர் இடத்தைப் பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

வசதி, வாய்ப்பு, அதிகாரம், ஆதிக்கம், பட்டம், பதவி, தோட்டம், துரவு, காடு, மேடு, மாட மாளிகை, கூட கோபுரம், கோட்டை கொத்தளம், பணம் பகட்டு போன்றவற்றை எவரும் எங்கும் எளிதிலோ, அன்றிச் சிறு பெரு முயற்சியிலோ பெற்றுவிட முடிகிறது.

அவற்றை நேர்வழியிலும் பெறுகிறார்கள்; குறுக்கு வழியிலும் பெறுகிறார்கள்; கோணல் வழியிலும் பெறுகிறார்கள். ஆனால், ஒருவர் அவ்வளவு எளிதில் பெற முடியாத விலை மதிக்க முடியாத பொருள் பிறருடைய இதயமேயாகும்.

வசதி படைத்த பெரும் பணக்காரர் ஒருவர் எட்டு அடுக்கு மாளிகையில், உயரத்திலே உள்ள நிலா முற்றத்தில், பஞ்சணை பொருத்திய மலர்ப்படுக்கையில், பக்கத்தில் இருவர் வெண்சாமரம் வீச, மூவர் கால் பிடிக்க, நால்வர் கை பிடிக்கப் படுத்திருந்தாலும் அவரைச் சுற்றிலும் நின்று பணி யாற்றுபவர்கள் பெரும்பாலும் என்ன எண்ணிக் கொண்டு பணியாற்றுவார்கள்?

இவன் எப்போது ஒழிவானோ, நாம் எப்போது மன அமைதி பெறுவோமோ! என்று எண்ணிக்கொண்டுதான் அடிமை வேலை செய்வார்கள். எவ்வளவு மிக்க வசதியுடை யவராக இருந்தாலும், பக்கத்திலிருந்து ஓயாது ஒழியாது பணியாற்றுபவர்கள் இதயத்திலே கூடக் கடுகளவும் இடம் பெற முடியாமல் வாழ்க்கையைக் கடத்திக் கொண்டு போகிறவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.

தம் கீழே வேலை செய்பவர்களின் இதயத்தில் இடம் பெற முடியாத அதிகாரிகள், பக்கத்து வீட்டார் இதயத்தில் இடம் பெற முடியாத குடும்பத்தினர், தந்தை இதயத்தில் இடம்பெற முடியாத தனயன், தனயன் இதயத்தில் இடம் கிடைக்காத தந்தை என்றவாறு, பிறர் இதயத்தில் இடம் பெறாமலும், பெற முடியாமலும் தவிப்பவர்கள் உலகில் கோடானுகோடி மக்கள் இருக்கிறார்கள்.

உடைமையை, ஆளை, வேலையை, அதிகாரத்தை, பட்டத்தை, பதவியை, வாக்குச்சீட்டைக் கூட விலை கொடுத்து வாங்கிவிட முடிகிறது பலரால்; ஆனால் பிற ருடைய இதயத்தை எவராலும் விலை கொடுத்து வாங்கிவிட முடிவதில்லை. ஓர் இலட்ச ரூபாயை நீட்டி, "உன் இதய அன்பை என்னிடம் என்றென்றும் வை" என்று ஒருவர் கேட்டாலும் தொகையைப் பெற்றுக் கொண்டவன், தொகை கொடுத்தவரை வாயார வாழ்த்தினாலும், 'ஓர்

இலட்சம் ரூபாய்தானே தந்துள்ளான்; கஞ்சப்பயல். இவன் கொள்ளையடித்து வைத்துள்ள கோடிக் கணக்கான ரூபாய் களிலே இன்னும் நான்கைந்து இலட்சம் தரக் கூடாதோ?' என்று இதயத்தால் எண்ணவே செய்வான்.

என்றாலும் எளிதில்பெற்றுவிட முடியாத இதயங்களை; பேரறிஞர் அண்ணா அவர்கள் எளிதாகவும் பெற்றார்கள். ஏராளமாகக் கோடிக் கணக்கிலும் பெற்றார்கள். அதனால் தான் அவர் 'செயற்கரிய செய்த பெரியார்' என்று எல்லோ ராலும் பாராட்டப் பெறுகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையும், புகழை யும், அருமையையும், பெருமையையும், பண்பையும், போக் கையும் அறியாதவர்களும் தெரியாதவர்களும் நாட்டில் எங்கணும் இல்லை. அவரை நினைத்து நினைத்து நெக்குரு காத உள்ளம் இல்லை; அவருடைய புகழையும், பெருமை யையும் பற்றிப் பேசாத நா இல்லை. நாட்டின் நல்லவர் களெல்லாம தொழுதேத்தும ஒளியாக அவர் திகழ்கிறார்.

கோடானுகோடி மக்கள் இதயத்தில் இடம் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பு இதயத்தில் இடம் பெற்றிருந்த தம்பிமார்களில் தக்க ஓர் இடத்தை நான் பெற்றிருந்தேன் என்பதை எண்ணுந்தோறும், பூரிப்போடும், பெருமித உணர்வோடும் பேரின்பம் பெறுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாரிடத்திலும் அன்பு காட்டுவார்; பற்றுவைத்திருப்பார்; மதிப்புச் செலுத்துவார்; ஆனால், ஒரு சிலரோடு மட்டுந்தான் பழகுவார். 'நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடை யாளர் தொடர்பு' என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் இலக்கணத்தில் காணும் பண்புடையாளர் தொடர்பினால் ஏற்படும் நயத்தை, பேரறிஞர் அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகினவர்கள்தாம் நன்கு அறிவார்கள்.

தம்மோடு நெருங்கிப் பழகும் தம்பிமார்களுக்கு ஊக்கம் தந்து, ஆக்கம் பயந்து, அவர்களையெல்லாம் உரிய துறைகளில் ஆளாககிவிடும் பாங்கு அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் அமைந்திருந்தது.

1937-ஆம் ஆண்டில் நான் தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டைக் கழக உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போதுதான், அவருடைய சொல் வன்மையைப் பிறர் சொல்லக் கேட்டுப் பூரித்துப் போனேன்.

1938-இல்தான் முதன் முதல் அவர் எழுத்தாற்றலை விடுதலை' தலையங்கங்களின் மூலம் கண்டு வியப்படைந்தேன்.

193 -இல் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியபோதுதான் அவரை முதன் முதலாகக் கண்ணாரக் கண்டேன்; அவரது இனிய பேச்சைக் காதாரக்கேட்டேன்.

## சீசரின் மனைவி

ஷேக்ஸ்பியர் சீசரின் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'சீசரின் மனைவி குற்றங்குறைகளுக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும்' என்று கூறியுள்ளார். அதுபோல், பெரிய அரசை நடத்திச் செல்பவர்களும் எந்த விதமான குறைகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா

## சிறந்த ஓர் தலைவனின் இலக்கணம்

"ஒரு தலைவர் அறிவாளியாயிருக்கலாம். ஆனால் மற்றவர்களையும் அறிவாளியாக்குபவர் தான் மிகச் சிறந்த தலைவர்! ஒரு தலைவர் உறுதி படைத்தவராக இருக்கலாம். ஆனால் மற்றவர் களையும் தன்னைப் போலவே உறுதி படைத்த வராக ஆக்குபவர்தான் மிகச் சிறந்த தலைவர்! ஒரு தலைவர் தெளிவுள்ளவராக இருக்கலாம்; ஆனால் குழப்ப மிகுந்த வேளையில் தெளிவைக் காட்டுவதோடு பிறரையும் தெளிவுள்ளவராக்கு பவர்தான் தலை சிறந்த தலைவர்! சிலர் நல்ல பேச்சாளர் என்ற முறையில் புகழை நிலை நாட்டு வார்கள்; சிலர் நல்ல எழுத்தாளர் என்ற முறை யில் புகழை நிலைநாட்டுவர்; சிலர் பிரச்னை களை நல்லமுறையில் விளக்கி தெளிவுபடுத்துபவர் என்ற முறையில் புகழை நிலைநாட்டுவர். ஆனால் வெகு சிலருக்குத்தான் தேர்ந்தெடுத்த துறை ஒவ்வொன்றிலும் தனிச் சிறப்பை ஏற்படுத்தும் ஆற்றல் இருக்கும். அத்தகைய ஆற்றல் பெறு வதுதான் ஒரு சிறந்த தலைவனின் இலக்கண மாகும்.

26-12-67 சென்னையில், ராஜாஜி விழாவில்...

அறிஞர் அண்ணா